668

# கல்வெட்டு

விளக்க உரை

...ARA PUBLIC LIBRARY
30 MAR 1958
MADRAS

சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும்
வித்துவான் தேர்வுக்குரியது

3ஆ/2ஆ

வித்துவான்
திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களது
உரையுடன்

பொதிகைப் பதிப்பகம்
2, சீதாராம நகர், கடலூர் என். டி.
உரிமையுடையது]	1955	[விலை ரூ. 2—8—0

# கல்வெட்டு

## விளக்க உரை

சென்னைப் பல்கலைக்கழகத்தார் நடத்தும்
வித்துவான் தேர்வுக்குரியது

வித்துவான் –

திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களது

உரையுடன்

பொதிகைப் பதிப்பகம்

கடலூர் என். டி.

உரிமையுடையது] 1955 [விலை ரூ. 2—8—0

முதல் பதிப்பு : பிப்ரவரி 1949
இரண்டாம் பதிப்பு : மார்ச்சு 1955

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை – 14.

# கல்வெட்டு

## Inscription No. I*

### ஸ்ரீ ராஜ ராஜ கிணறு

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போல் பெருநிலச் செல்வியுந் தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்ப பாடியும் தடிகை பாடியும் குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும் முரட்டொழில் சிங்களர் ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும் திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில் வளரூழியு ளெல்லா யாண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோராஜ கேஸரிவந்ம ரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு உ௰சு ஆவது ஜயங் கொண்ட சோளமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உசாலாகிய ஸ்ரீ விக்கிரமா பரணச் சதுர்வேதி மங்கலத்தின் மேலைப்பெருவழியில் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருநாமத்தால் கிணறுந் தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீ ராஜ

---

*S. I. I. Volume III Part I Page 7.

ராஜதேவர் பணிமகன் சோளமண்டலத்து தென்கரை நாட்டு நித்தாவிநோத வளநாட்டு ஆவூர்க்கூற்றத்து ஆவூருடையான் கண்ணனூரன். இவனே ராஜராஜ கிணற்றில் தொட்டிக்கு நீரிறைப்பார்க்கு அருமொழி தேவன் மரக்காலால் நிசதம் நெல் ஐ உங ஆக திங்கள் கூ-க்கு நெல் ஐ நடிகூம், ஸ்ரீ ராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு நிசதம் நெல் ஐ. உங ஆக திங்கள் கூ-க்கு நெல்லு நடிகூ. இப்பந்தலுக்குகு சக்கலம் இடுவார்க்கு திங்கள் க-க்கு நெல்லு ஜ ஆக திங்கள் கூ-க்கு நெல்லு சகூம் ஸ்ரீராஜராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆண்டாண்டு தோறும் புதுக்குப்புறமாக வைச்ச நெல்லு உகூ ஜ ஆக ஐ கூடிகூ கூஜ. இந்நெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர் ஸபையோம் இறை திரவியமும் கிரய திரவியமும் கொண்டு இறை இழிச்சி........

## விளக்க உரை

**இக்கல்வெட்டு இருக்குமிடம்** :—இது வடார்க்காடு ஜில்லா செய்யாறு தாலுகாவில் உள்ள உக்கல் என்ற ஊரிலுள்ள திருமால் திருக்கோயிலின் மேற்குப் புறச்சுவரில் இருக்கின்றது.

**இக்கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசன்** :—முதலாம் இராசராச சோழன்.

**இவ்வரசனைப் பற்றிய பொதுக்குறிப்பு** :—இவன் சுந்தர சோழன் என்று வழங்கும் இரண்டாம் பராந்தகனது இரண்டாவது மகனுவன். கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரை சோழமண்டலத்தை ஈடும் எடுப்புமின்றி ஆண்டவன். தஞ்சாவூரில் இராசராசேச்சரம் என்ற பெரிய கோயிலை எடுப்பித்தவனும், அப்பர், சம்பந்தர், சுந்தரர்

இவர்களுடைய திருப்பதிகங்களைத் திருமுறைகளாகத் தொகுப்பித்தவனும் இம்மன்னனே யாவன்.

**இக்கல்வெட்டுத் தோன்றிய காலம் :**—இம்மன்னன் அரியணை ஏறிய 29-ம் ஆண்டு. அதாவது கி. பி. (985+29) 1014.

**மெய்க்கீர்த்தியால் அறியப்படும் இம் மன்னனது வெற்றிச் செய்திகள் :**—காந்தளூர்ச் சாலையிலுள்ள கலங்களை அறுத்தருளினான். வேங்கைநாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழ மண்டலம், இரட்டபாடி, பழந்தீவு - இவைகளை வென்றான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

ஸ்வஸ்தி - மங்களம் உண்டாகுக (Hail Prosperity)

மனக்கொள - மனம்கொண்டு

காந்தளூர்ச்சாலை - இது திருவனந்தபுரத்துக்கு அண்மையில் இருக்கின்றது. இது மலைநாட்டுக் கடல் துறைப் பட்டினமாகும்.

காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி - இதுபற்றி இருவிதக் கொள்கைகள் :—

இவ்வூரில் கல்விச் சாலை ஒன்று இருந்தது. அதில் இவ்வளவு மாணவர்கள்தான் உண்ணலாம் என்று வரையறை செய்யப்பட்டது. என்பர் திரு. ச. செல்லம் அவர்கள். திருவாளர்களான டாக்டர் உல்ஷ் துரை, T. A. கோபிநாத ராயர், M. A., K. A. நீலகண்ட சாத்திரியார், M. A., ஆகியோர் இவ்வூரில் உள்ள மரக்கலங்கள் அழிக்கப் பட்டன என்பர்.

வேங்கை நாடு - இது கோதாவரி கிருஷ்ணை என்ற இரு பேராறுகளுக்கு இடையில் உள்ள நாடு. இது கீழைச் சளுக்கியருக்கு வாழ்விடம்.

கங்கபாடி - இது மைசூர் நாட்டின் கீழ்ப்பகுதி. கங்கர் பல்லவருள் ஒரு பிரிவினர் ஆவர். அவர்களுக்கு

இடமாதல் பற்றி இது கங்கபாடி என்று பெயர் பெற்றது.

நுளம்பபாடி - இது மைசூரின் தென்பகுதி.

தடிகைபாடி - கங்கபாடிக்கும் நுளம்பபாடிக்கும் இடையில் உள்ளது.

குடமலை நாடு - குடகுப் பிரதேசம்.

கொல்லம் - இஃது இந்தியாவின் மேற்குக் கரையில் கொல்லன் (Quilon) என்று வழங்கும் பிரதேசமாகும்.

கலிங்கம் - கோதாவரிக்கும், மகாநதிக்கும் இடையில் உள்ளது.

முரட்டொழியில் - இத்தொடர் முரட்டெழில் என்று இருக்கவேண்டும். இரண்டாம் கல்வெட்டில் முரட்டெழில் என்றே இருக்கின்றது. வேறுபல கல்வெட்டுக்களிலும் இவ்வாறே இருக்கின்றது. முரட்டுத்தன்மையும் அழகும் வாய்ந்த என்பது இதன் பொருள்.

ஈழமண்டலம் - இலங்கை.

இரட்டபாடி - பம்பாய் மாகாணத்தின் தென்பகுதி. இது மேலைச் சளுக்கியருடைய வாழ்விடம்.

இரட்டபாடி ஏழரை இலக்கம் - இதுபற்றி இருதிறக் கொள்கைகள் :—

இரட்ட-பாடி-ஏழரை இலக்கம் வருவாயை உடையது என்பது ஒரு சாரார் கொள்கை. ஏழரை இலக்கம் பூமியை உடையது என்பது மற்றொரு சாரார் கொள்கை.

பழந்தீவு - மாலடிவ்ஸ் (Maladive Islands) என்று அழைக்கப்படும் அராபிக்கடல் தீவுகள்.

தண்டு - சேனை.

தொழுதகை - இத்தொடர் தொழுதக என்றிருக்க வேண்டும். இரண்டாம் கல்வெட்டில் தொழுதக என்றே இருக்கின்றது. தொழத்தக்க நிலையில் என்பது இதன் பொருள்.

குறிப்பு :—தொழுதகை என்ற பாடம் கொண்டும், அதைத் தொழு+உதகை என்று பிரித்தும், உதகையை முதலாம் இராசராசன் பாண்டியரிடமிருந்து வென்முன் என்றும், அரசியலார் வெளியிட்ட கல்வெட்டின் கீழ்க் குறிப்புரை எழுதப்பெற்றுள்ளது. குடமலை நாட்டை வென்றபோதே உதகை அதில் அடங்கிவிட்டது. ஆகையால் அதை வேறு கூறவேண்டுவதில்லை யாகலானும், அச்சொற் றொடரை அவ்வாறு பிரிக்கப்படுவதற்கு இலக்கணமில்லை ஆகலானும் அவர் உரை பொருந்துமாறில்லை. தொழுதக என்பதே சரியான பாடம் என்பதும் அக்குறிப்புரை யாளரின் கருத்து என்பதை "தொழு+உதகை=தொழு தக No 2" என்ற அவர் கொள்கையே வலியுறுத்து கின்றது.

செழியரை - பாண்டியரை.

தேசுகொள் - ஒளியைக் கொண்டுள்ள ; ஒளி - தான் உள காலத்து மிக்குத் தோன்றுதல் உடைமை என்பர் பரிமேலழகர்.

உடையார் - இது மரியாதை மொழி. கடவுள், அரசர், குரு இவர்கள் பெயர்களின் முன் இம்மொழியை அமைத் துக் கூறுவது பண்டைய மரபு. இந்நாட்டை ஆண்ட ஆரும் ஜார்ஜ் சக்கரவர்த்தியை (His Magesty the King Emperor George VI) மாண்புமிக்க சக்கர வர்த்தியாகிய ஆரும் ஜார்ஜ் என்று அழைப்பது போல.

இராசகேசரி, பரகேசரி : இவைகள் சோழமன்னர்கள் தரித்துவந்த பட்டப்பெயர்களாகும். இராசகேசரி என்முல் இராசர்களுள் சிங்கம் போன்றவன் என்றும், பரகேசரி என்முல் அயலார்களுக்குச் சிங்கம் போன்றவன் என்றும் பொருள்படும். இப்பட்டப் பெயர்களால் இன்னார்க்குப் பிறகு இன்னுர் பட்டம் எய்தினுர் என்ற செய்தி புலனுகும். இவ்வாறே பாண்டிய மன்னர்களும் மாறவர்மன்,

சடையவர்மன் என்ற பட்டப் பெயர்களைப் புனைந்திருந்தனர்.

**உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்திகள் :** முதல் இராசராச சோழனது பணிமகனும், சோழமண்டலத்தில் நித்தவிநோத வளநாட்டிலுள்ள ஆலூர்க் கூற்றத்து ஆலூரைத் தனக்குப் பிறப்பிடமாகக் கொண்டவனுமாகிய கண்ணன் ஆரூரன், தன் அரசன் பெயரால் சயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர்க்கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்தின் மேலைப் பெருவழியில் ஒரு கிணற்றை அமைப்பித்து அதற்கு நிவந்தம் அளித்துள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

சயங்கொண்ட சோழமண்டலம் : முதலாம் இராசராச சோழன் தொண்டைமண்டலத்தை வென்ற பிறகு அதற்கு அவன் வைத்த பெயர். சயங்கொண்ட சோழன் என்பது முதலாம் இராசராசன் பெயர்களுள் ஒன்றாகும்.

**காலியூர்க் கோட்டம் :** இது தொண்டைமண்டலத்து இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்றாகும். கோட்டம் என்பது இக்காலம் ஒரு சில்லாவிற்கு ஒப்பாகும்.

உசாலாகிய - இது உக்கலாகிய என்றிருக்கவேண்டும்.

**சதுர்வேதிமங்கலம் :** சில சிற்றூர்களைத் தன்கண் அடக்கிக்கொண் டிருக்கும் ஊர்களுக்குச் சதுர்வேதிமங்கலம் என்று பெயர். தனியூர், சதுர்வேதிமங்கலம் என்ற பெயரால் அழைக்கப்பெறுவதும் உண்டு. இக்காலம் இதை வட்டம் என்று சொல்லலாம்.

மேலைப் பெருவழி – மேற்கே போகும் பெருவழி - பெருவழி - Road.

பணிமகன் - வேலைக்காரன்.

தென்கரை - காவிரிக்குத் தென்கரையில் உள்ள.

**நித்தவிநோத வளநாடு :** இது தஞ்சாவூர்ச் சில்லாவில் தஞ்சாவூர்த் தாலூகாவின் கீழ்ப்பகுதியும், பாபநாசந்

தாலூகாவின் மேற்குப் பகுதியும், மன்னார்குடி தாலூகாவின் வடக்குப் பகுதியும், அரிசிலாற்றின் தெற்குப் பகுதியும் கொண்ட நிலப்பரப் பாகும். ஆவூர்க் கூற்றம், வெண்ணிக்கூற்றம், பாம்புணிக்கூற்றம், நல்லூர்நாடு, கரம்பைநாடு, முடிச்சோணாடு என்பவை இந்நாட்டின் உட்பகுதிகளாக உள்ளனவாகும்.

N. B. மண்டலம், வளநாடு, கூற்றம் - இவைகள் இக்காலப் பிரிவினைப்படி முறையே மாகாணம் (Presidency), ஜில்லா (District), தாலூகா (Taluk) இவைகளுக்குச் சமமாகும்.

**ஆவூர்க்கூற்றம் :** இது தஞ்சாவூர்ச் சில்லாவில் பாபநாசந் தாலூகாவில் தேவாரம் பெற்ற தலமாகிய ஆவூரைத் தலைநகராகக்கொண்ட ஒரு சிறு நிலப்பரப்பாகும். இரும்புதலை, விளத்தூர் முதலான ஊர்கள் இக்கூற்றத்தில் இருந்தன என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

**அருமொழி தேவன் மரக்கால் :** அருள்மொழி தேவன் என்பது முதலாம் இராசராசன் பெயர்களுள் ஒன்றாகும். இப்பெயரால் விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தில் வழங்கிவந்த மரக்காலின் பெயராகும்.

நிசதி - நாடோறும் (Daily)

ஐ - இது நெல்லைக் குறிக்கும் அடையாளம்.

ங - இது குறுணி (நெல்லை),யைக் குறிக்கும் அடையாளம்.

சூ - இது கலத்தைக் குறிக்கும் அடையாளம்.

ஜ - இரண்டு தூணியை (எட்டு மரக்காலை)க் குறிக்கும் அடையாளம் [1 தூணி=4 மரக்கால்]

**புதுக்குப்புறம்** - பழுது பார்ப்பதற்கும் வைக்கப்பெற்ற நிபந்தம் - புறம் - இப்பொருளில் வருவதைத் திருவிளக்குப்புறம், மடப்புறம் - இவைகளில் காணலாம்.

**ஸ்ரீ ராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு** - ஸ்ரீ ராஜராஜன் பேரால் தண்ணீர் வார்ப்பார்க்கு.

**குசக்கலம்** - மட்பாத்திரம்.

உகூதெ - இருகலனே இருதூணிக்கு அடையாளம்.
கூயகூகூ தெங - அறுபத்தாறு கலனே இருதூணிக்கு அடையாளம். [66 கலம், 8 மரக்கால்]
இறை திரவியம் - வரிப்பணம் (காணிக்கடன்.)
கிரைய திரவியம் - வாங்கும் விலை (Actual Cost)

## பொதுச்செய்திகள்

இராசராசக் கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீர் இறைப்பார் முதலான பல பணியாளர்களுக்கு ஒரு ஆண்டில் ஆறு மாதங்களுக்குத் தான் கூலிகள் கொடுக்கப்பட்டு வந்தன. இவற்றால் இக்காலம்போல் அல்லாமல் பண்டைக் காலத்தில் தண்ணீர்ப் பந்தல் ஆறு மாத காலம் நடத்தப் பெற்று வந்தது என்பது புலனாகின்றது. இக்கல்வெட்டில் வந்துள்ள பெருவழி (Road) பணிமகன் (Humble Servant) புதுக்கு (Repair) என்பவை தூய தமிழ்ச் சொற்களாம்.

---

## Inscription No. 2*

## திருப்பதியம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கைநாடுங் கங்கபாடியுந் தடிகை பாடியும் நுளம்பபாடியுங் குடமலைநாடுங் கொல்லமும் கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில் வளரூழியு

*S. I. I. Vol. ii part iii page 253.

ளெல்லா யாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதுவரை உடையார் ஸ்ரீராஜ ராஜீஸ்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும் இவர்களிலே நிலையாய்க் கொட்டிமத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேஸரியோ டொக்கும் ஆடவல்லா னென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தேய் பெறவும், இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனார்க்குந் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யவும். அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாதுவிடில் யோக்கியரா யிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லுப் பெறவும் அவ்வவர்க்கு அடுத்தமுறை கடவாரின்றி யொழியில் அந்த நியாயத்தாரே யோக்யரா யிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப்பெறவும், ஆக இப்படி உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது. பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜப் பிச்சனை சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி.

[Thus the names the fifty persons were engraved]

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்:** தஞ்சை இராசராசேச்சரக் கோயிலின் வடபுறச்சுவர்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் - முதலாம். ராச மன்னன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் - கி. பி. 1014.

குறிப்பு :—இவ்வரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு, மெய்க்கீர்த்தியால் அறியப்படும் இவனுடைய வெற்றி மேம்பாடுகள், மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரைகள் இவைகளை முதல் கல்வெட்டில் குறித்துள்ளபடி கொள்ளல் வேண்டும்.

**உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல்கள் :**—முதலாம் இராசராச சோழன், தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வதற்குப் பிடாரர்கள் நாற்பத்தெண்மர், கொட்டிமத்தளம், உடுக்கை இவைகளை வாசிக்க இருவர், ஆக ஐம்பதின்மரைக் கொடுத்து, அவர்கள் நாடோறும் ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடு ஒக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் முக்குறுணி நெல் நிவந்தம் பெறுமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்கு - (இலக்கணப்படி) ஸ்ரீ ராஜராஜேஸ்வரம் என்று திருத்திப் படிக்க வேண்டும்.

திருப்பதியம் விண்ணப்பம்செய்ய-இது பண்டைய வழக்கு. இதுபொழுது திருப்பதிகம் ஓத என்று வழங்கப் பெறுகின்றது. பதியம் - பத்துப் பாட்டு. பதிகம் என்பதே இலக்கணமுடையது. பதியம் இலக்கணப் போலி. (இயல்பு வழக்கு நன்னூல்.)

பிடாரர்கள் - தேவாரம் பாடுகிறவர்கள்.

கொட்டிமத்தளம் - மத்தளத்தின் பெயர். (The big drum என்பர் டாக்டர் உல்ஷ் துரை).
பேரால் - ஆள் ஒன்றுக்கு (Per Person)
நிசதம் - நாள் ஒன்றுக்கு (Per day)
நிவந்தம் - கூலி.
இராஜகேசரி - இது தஞ்சாவூர் அரண்மனையில் முதல் இராசராசன் பட்டப் பெயரால் வழங்கிவந்த மரக் காலின் பெயர்.
ஆடவல்லான் - இது தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் நடராசப் பெருமான் பெயரால் வழங்கிவந்த மரக் காலின் பெயர்.

குறிப்பு :—இவ்விரு மரக்கால்களும் ஒரே அளவை உடையன. இச்செய்தி "இராசகேசரியோ டொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால்" என்ற கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது.

உள்ளூர்ப் பண்டாரம் - உள்ளூரில் இருக்கும் கருவூலம் அல்லது பொக்கிஷ சாலை (Local Treasury)
அனுதேசம் போனார் - அந்நிய தேசம் போனார்.
தலைமாறு - பதிலாக (Instead of).
அடுத்த முறை கடவார்-அடுத்த நெருங்கிய உறவுடையார். (The nearest relative)
யோக்யராயிருப்பாரை - தகுதியுடையவராய் இருப்பாரை.
அந்த நியாயத்தாரே - அந்தத் தொழில் செய்வாரே.
பாலன் திருவாஞ்சியத்தடிகள் - என்பது இயற்பெயர். திருவாஞ்சியம் என்பது, தஞ்சாவூர்ச் சில்லாவில் நன்னிலம் தாலூகாவில், பெருவேளூருக்குப் பக்கத்தில் உள்ள திருவாஞ்சியம் என்னும் தேவாரம் பெற்ற பதியாகும். அவ்வூர் இறைவன் பெயரையே இவனுக்கு இவன் பெற்றோரால் இடப்பெற்றவன்.
ராஜராஜப்பிச்சன் - இஃது இவனுக்குக் கொடுக்கப் பெற்ற பட்டப் பெயர். (Title)

-சதாசிவன் - இஃது இவனுக்குச் சிவதீட்சை செய்விக்கப் பெற்ற காலை வைக்கப்பட்ட பெயர்.

---

## Inscription No. 3*

## ஸ்ரீ ராஜேந்திரசோழதேவர் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் பொற்சயப் பாவையும் சீர்த்தநிச் செல்வியும் தன் பெருந்தேவியராகி இன்புற நெடுதியல் ஊழியுள் இடைதுறை நாடும் துடர்வன வேலிப்படர்வன வாசியும் சுள்ளிச் சூழ்மதிள் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகளலீழத் தரைசர் தமுடியும், ஆங்கவர் தெவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர்வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமும், தெண்டிரை ஈழமண்டல முழுவதும், எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ்முடியும் செங்கதிர்மாலையும், சங்கதிர்வேலைத் தொல்பெருங் காவற் பல்பழந்தீவும், செருவிற்சினவி இருபத்தொரு காலரசு களைகட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத் தீவரண்கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும், பீடியல் இரட்டபாடி ஏழரை இலக்கமும் நவநெதிக் குலப்பெரு மலைகளும் விக்கிரமவீரர் சக்கரகோட்டமு............ல்லை மதுரமண்டலமும், காமிடைவள நாமணக் கோணையும் வெஞ்சின வீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப்பழன மாசுணி தேசமும், அயர்

*S. I. I. Vol. ii part i page 106.

வில் வண்கீர்த்தி ஆதிநகரவையில் சந்திரன்ருெல் குலத்திந்திரதனை விளை அமர்க்களத்துக் கிளையொடும் பிடித்துப் பல தனத்தொடு நிறை குலதனக்குவையும், கிட்டருஞ் செறிமிளை வெம்முனை யழித்து வண்டுறை சோலைத் தண்டபுத்தியும், இரணசூரனை முரணுகத் தாக்கித் திக்கணை கீர்த்தித் தக்கணலாடமும் கோவிந்த சந்தன் மாவிழிந்தோடத் தங்காதசாரல் வங்காள தேசமும், தொடுகழற் சங்கு வொட்டல் மயிபாலனை வெஞ்சமர் விளாகத் தஞ்சுவித்தருளி, யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங் கடலுத்திரலாடமும் வெறிமலர்த் தீர்த்தத் தெறி புனல்க் கங்கையும் அலைகடல் நடுவுட் பலகலஞ்செலுத்திச் சங்கிராம விசையோத்துங்க பர்மனாகிய கடாரத் தரைசனை வாகயம் பொருகடல் கும்பக்கரியொடு மகப்படுத்துரிமையில் பிறக்கிய பெருனெதிப் பிறக்கமும், ஆர்த்தவனகனகர் போர்த்தொழில் வாசலில் விச்சாதிரத் தோரணமும் மொய்த் தொளிர்புனை மணிப்புதவமும் கனமணிக்கதவமும், நிறைசீர்விசையமும் துறைநீர்ப் பண்ணையும் வன்மலையூரெயிற் ருென்மலையூரும், ஆழ் கடலகழ்சூழ் மாயிருடிங்கமும் கலங்காவல்வினை இலங்கா சோகமும், ஓட்ட விஷையமும் பூசுரர் சேர்நற்கோசலை நாடும் தன்மபாலனை, காப்புறு நிறைபுனல் மாபப்பாளமும், காவலம் புரிசை மேவிலிம்பங்கமும், விளைப்பந் தூறுடை வளைப்பந்தூறும், கலைத் தக்கோர்புகழ் தலைத் தக்கோலமும், திதமாவல்வினை மதமாலிங்கமும், கலாமுதிர்க் கடுந்திறல் இலாமுரி தேசமும், தேனக்கவார் பொழில் மானக்கவாரமும் தொடுகடல்க் காவல்க்கடு முரட்கடாரமும் மாப்பொரு தண்டாற்கொண்ட கோப்

பரகேஸரி பந்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கி யாண்டு - கக ஆவது நாள் இருநூற்று நாற் பத்திரண்டிஞல் உடையார் ஸ்ரீ ராஜேந்திரசோழ தேவர் கங்கைகொண்ட சோழ புரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தாநஞ்செய்தருளா இருந்து உடையார் ஸ்ரீ ராஜ ராஜ ஈஸ்வரமுடையார் கோயிலில் ஆசார்ய போகம் நம் உடையார் ஸர்வ்வ சிவ பண்டித சைய்வ்வாசார்ய்யர்க்கும் இவ் வுடையார் சிஷ்யரும் பிர சிரஷ்யருமாய் ஆர்ய்ய தேசத்தும் மத்திய தேசத்துத்தான் கௌட தேசத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கே ஆட்டாண்டு தோறும் இத் தேவர் கோயிலில் ஆடவல்லானென்னும் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக் கலநெல்லு ஆட்டாண்டு தோறும் சந்திராதித்தவல் பெறத் திருவாய்மொழிந்தருளத் திருமந்த்ரி ஓலை செம் பியன் விழுப்பரையன் எழுத்திஞல்.........த்திரு வாய்க் கேழ்விப்படி கல்லில் வெட்டித்து. இது இவ்வம்சத் துள்ள சைய்வ்வ ஆசார்ய்யர்களே இத்தன்மம் ரக்ஷிக்க.

## விளக்க உரை

கல்வெட்டு இருக்குமிடம் : தஞ்சாவூர் இராசராசேச்சரக்-கோயில், கருப்ப இல்லின் தென்புறச் சுவரில் இருக்கின்றது.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் : இராசேந்திர சோழ தேவர்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு :—சரித்திரத்தில் முதலாம் இராசேந்திரன் என்று பேசப்படுவன் இவனேயாவன். இவன் முதலாம் இராசராச சோழனது மகன். இவனைக் கங்கைகொண்ட சோழனென்றும் வழங்குவர்.

இவனுக்குப் பண்டித சோழனென்றும் பெயர் உண்டு. இவன் பிராமணர்களில் ஒரு வகுப்பாராகிய எண்ணுயிர வரைச் சோழநாட்டில் குடியேற்றினுன். இவன் தகப்ப னுக்கு ஏற்ற பிள்ளை ஆவன். இவன் செங்குட்டவனைப் போல வடநாடு சென்று வென்றவன். இவன் அரியணை ஏறிய மூன்று ஆண்டுகள்வரை போர் ஒன்றுமில்லை. பிற செயல்களும் இல்லை. தஞ்சாவூரை விடுத்து, *கங்கை கொண்ட சோழபுரத்தை, சோழநாட்டுக்குத் †தலைநக ராகக் கொண்டவனும் இம்மன்னனே யாவன். இவன் கி. பி. 1014 முதல் 1042 வரை ஆண்டான்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :** இவன் அரியணை ஏறிய 19ஆம் ஆண்டு 242ஆம் நாள். அதாவது கி. பி. 1033ல்.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் வீரச்செயல்கள்

**I** (a) நான்காம் ஆண்டுமுதல் பதினென்ரும் ஆண்டு முடிய இவனது வென்றி மேம்பாடுகள் :—

இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக்கம் என்னும் ஊர்களைக் கைப்பற்றிக் கொண்டான். ஈழத்து மன்னன், அவனுடைய மனைவி மார் இவர்களுடைய கிரீடங்களையும் அவ்வீழத்து மன்ன னிடம் பாண்டியரால் பாதுகாப்பிற்காக வைக்கப்பெற்

*இது கங்காபுரி என்று கலிங்கத்துப் பரணியிலும், விக்கிரம சோழன் உலாவிலும் கூறப்பெற்றுள்ளது.

†தஞ்சாவூர் பாண்டிநாட்டு எல்லைக்கு அருகில் இருந்தமை யால் பகைமன்னராகிய பாண்டியரால் தலைநகராகிய தஞ்சாவூர் எளிதில் தாக்கப்படும் என்பது கருதியும், தனது குலதெய்வமாகிய தில்லைச் சிற்றம்பலத்துப் பெருமானை அடிக்கடி போய் வழிபடு தற்குக் கொள்ளிடப் பேராறு வெள்ளப் பெருக்குள்ள காலங்களில் தடையாய் இருந்தமையாலும், முதலாம் இராசேந்திர சோழன் தஞ்சாவூரை விடுத்து, நாட்டின் மத்தியில் உள்ள கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

றிருந்த அழகிய கிரீடத்தையும், இந்திரன் ஆரத்தையும் பெற்ருன். சேர மன்னனுடைய கிரீடத்தையும் பெற்ருன். அராபிக் கடலில் உள்ள பழந் தீவை வென்று கொண்டான். பரசுராமனுக்கு இருப்பிடமாய் இருந்த சாந்திமத் தீவில் வைக்கப்பெற்றிருந்த முடியைக் கைப்பற்றிக்கொண்டான். முயங்கியில் தோற்றுப்போய் ஒளிந்திருந்த மேலைச் சளுக்கிய அரசனுகிய சயசிங்கனுடைய இரட்டபாடி ஏழரை இலக்கத்தையும் ஒன்பதுவகையான நவரத்தினங்களை உடைய சிறந்த மலைகளையும் தனதாக்கிக்கொண்டான். சக்கரகோட்டம், மதுரமண்டலம், நாமணக்கோணை, பஞ்சப்பள்ளி, மாசுணி தேசம் என்னும் இடங்களைத் தன்னடிப்படுத்தினுன். சந்திரகுலத்துத் தோன்றிய இந்திராதனை ஆதிநகர்ப் போர்க்களத்தில் அவன் உறவினரோடு பிடித்துக்கொண்டான். ஒட்ட விஷயத்தையும் (ஒரிசா தேசம்) கோசலநாட்டையும் வென்றுகொண்டான். பாலா வம்சத்து அரசனுகிய தன்மபாலனைக் கொன்று அவனுடைய நாடாகிய தண்டபுத்தியைக் கைப்பற்றினுன். இரணசூரனுடைய நாடாகிய தக்கணலாடத்தைத் தனதாக்கிக்கொண்டான். வங்காள தேசத்து அரசன் மகிபாலனது படைத்தலைவனுகிய கோவிந்தசந்தன் பொருது தோற்று ஓடினுன். ஓடவே, மகிபாலனது பெண்டிரையும் யானைகளையும் பிடித்துக்கொண்டான். பின்னர், உத்தரலாடம், கங்கை, இவைகளைத் தன்னுடைய தாக்கிக்கெண்டான்.

(b) **பன்னிரண்டாம் ஆண்டுமுதல் பத்தொன்பதாம் ஆண்டு வரை மலேயா தீபகற்பம், சுமித்திரா தீவு, நிக்கோபார் தீவு இவைகளில் வென்ற இடங்கள் :—**

கடாரத்தரசனுகிய சங்கிராம விசயோத்துங்கனைத் தோற்கடித்து அவனுடைய செல்வத்தையும், அவன் தலைநகரின் வாசலில் கட்டியிருந்த விச்சாதிரத் தோரணத்தையும், மணிகள் அழுத்தப்பெற்றிருந்த இரட்டைக் கதவு

களையும் தனதாக்கிக்கொண்டான். சுமித்திரா தீவி லுள்ள விசையம், பண்ணை, மலையூர் என்னும் ஊர்களை வென்றான். பின் மலேயா தீபகற்பத்திலுள்ள மாயிரு டிங்கம், இலங்காசோகம், மாபப்பாளம், இலிம்பிங்கம், வளைப்பந்தூறு, தக்கோலம், மதமாலிங்கம் என்னும் ஊர் களை வென்று தன்னடிப்படுத்தினான். பின்னரும் சுமித்திரா தீவிலுள்ள இலாமுரி தேசத்தைக் கைக்கொண்டான். நக்கவாரத் தீவுகளை வென்றான். பிறகு மலேயா தீபகற் பத்தின் மேலைக்கரையிலுள்ள கடாரத்தை வென்றான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

திருமன்னி வளர - இலக்குமி நிலைபெற்று வாழ
இருநில மடந்தையும் - பெரிய பூமிதேவியும்
போர்ச்சயப் பாவையும் - வீர இலக்குமியும்
சீர்த்தனிச் செல்வியும் - கீர்த்திக்கு உரியவளும்
நெடுதியல் ஊழியுள் - நெடுநாளாக நிலைபெற்று வருகின்ற ஊழியுள்
இடைதுறை நாடு - கிருஷ்ணாநதிக்கும் துங்கபத்திரைக்கும் இடையிலுள்ள நாடு
வனவேலி - காட்டை வேலியாக உடைய
படர் - விரிந்த
வனவாசி - மத்திய பிராருக்குத் தென்பகுதி
சுள்ளிச்சூழ்மதில் - காட்டரணையுடைய மதில்
கொள்ளிப்பாக்கை - ஹைதராபாத்துக்கு வடகிழக்கே 45 மைல் தூரத்திலுள்ள ஊர். இப்பொழுது Kulpack என்று வழங்கப்பெறுகிறது.
மண்ணைக்கடக்கம் - இராட்டிரகூடர்களுக்குத் தலைநக ராய் இருந்த மான்ய கேடம்.
பொரு கடல் ஈழம்-கடல் அலையால் மோதப்படும் இலங்கை
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த - முற்கூறிய இலங்கை அரசரிடத்தில் பாண்டியர் வைத்த
சுந்தர முடியும் - அழகிய கிரீடத்தையும்

இந்திரன் ஆரமும் - இந்திரன் பாண்டியனுக்குக் கொடுத்த முத்தாரமும்
எறிபடை - ஈட்டிப்படை
கேரளன் - சேரன்
செங்கதிர் மாலை - சிவந்த ஒளிவிடுகின்ற மாலை
பல்பழந் தீவு - மாலடிவ்ஸ் (Maladives) என்று அழைக்கப்படும் அராபிக் கடல் தீவுகள்
சாந்திமத் தீவு - மலையாளத்துக்கு அண்மையில் இருந்த தீவு
செருவிற் சினவி - சண்டையில் கோபித்து
இருபத்தொருகால் - இருபத்தொருமுறை
அரசு களைகட்ட - அரசராகிய களைகளைக் களைந்த
மேவ அரும் - பொருந்துதற்கு அரிய
அரண்கருதி - அரண்உடையதாய் இருத்தலைக் கருதி
இருத்தி - அங்கு வைக்கப்பட்ட
முயங்கி - இவ்வூர் பல்லாரி சில்லாவிலுள்ள உச்சங்கி துர்க்கமாக இருக்கலா மென்பது டாக்டர் உல்ஷ் துரையின் கொள்கை. ஹைதராபாத் சமஸ்தானத்தில் உள்ள மாஸ்கி என்னும் இடம் என்பர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார்.
முதுகிட்டொளித்த - முதுகுகாட்டி ஓடிய
சயசிங்கன் - இவன் மேலைச் சளுக்கிய வம்சத்து ஆகமவல்லனுடைய தகப்பன். கி. பி. 1015 முதல் 1042 முடிய ஆண்டவன்.
பீடுஇயல் - பெருமை பொருந்திய
நவநெதிக் குலப்பெரு மலைகளும் - ஒன்பது வகையான நவரத்தினங்களை உடைய சிறந்த மலைகளும் (அ) கூட்டமான மலைகளும்.
விக்கிரம வீரர் - வலிமை பொருந்திய வீரர்
சக்கரகோட்டம் - மத்திய மாகாணத்திலுள்ள வத்சராச்சியம். (Baster state).

காமிடை வளநாமணக்கோணை - பூஞ்சோலைகள் நெருங்கிய வளப்பமுள்ள நாமணைக்கோணை என்னும் ஊர்.

நாமணைக்கோணை, மதுரமண்டலம், பஞ்சப்பள்ளி, மாசுணி தேசம் - இவைகள் வேங்கி நாட்டை ஒட்டிய பிரதேசங்கள்.

N. B.—பஞ்சப்பள்ளியை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறிப்பிடுகின்றார்.

பாசடைப் பழனம் - பசுமையான இலைகளும் வயல்களுமுள்ள.

நிறைகுல தனக் குவையும் - நிறைந்துள்ள சிறந்த பொருட் குவியல்களையும்.

செறிமினை ஒட்ட விஷயமும்—[இத்தொடர் செறிமிளை ஒட்ட விஷயமும் என்றிருக்கவேண்டும்.] நெருக்கமான காட்டரணை உடைய ஒரிசா தேசமும்.

கோசலம் - ஒரிசாவுக்கு அண்மையில் உள்ள மகாகோசலம் என்னும் ஊர் ஆகும்.

பூசுரர் - பிராமணர்

வெம்முனை - போர்முனை

தண்டபுத்தி - பீஹார் தேசம்

தன்மபாலன் - இவன் பாலா வம்சத்தைச் சேர்ந்த அரசன்.

தக்கணலாடம் - தக்ஷிணவிராடம்; அதாவது பீரார். (திரௌபதியின் ஊர் இதுவேயாகும்).

கோவிந்தசந்தன் - வங்காள தேசத்து அரசனாகிய மஹிபாலனது போர்ப்படைத் தலைவன்.

மாவிழிந்தோட - குதிரையிலிருந்து இறங்கி ஓட.

வங்காள தேசம் - (Modern Bengal) இப்பொழுதுள்ள வங்காள தேசம். கிழக்குவங்காளம் என்றும் கூறுவர்.

தொடுகழற் சங்கு வொட்டல் மயிபாலன் - இத்தொடரிலுள்ள மயிபாலன் என்பதை மஹிபாலன் என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

கழல் - காலுக்கு அணியும் ஆபரணம்.

ஒட்டல் - காதணி (Ear Rings)
சங்கு - (Bracelets)
வெஞ்சமர் விளாகத்து - போர்க்களத்து
உத்தரலாடம் - தற்போதுள்ள குஜரத்து தேசம் (Modern Gujarat)
எறிபுனல் கங்கை - ஓடுகின்ற நீரையுடைய கங்கை.
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கை - கங்கை புண்ணிய நதி என்பதற்குக் கல்வெட்டு ஆதாரமாக இருக்கின்றது இத்தொடர்.
சங்கிராமம் - போர்
அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்தி - சோழர்கள் கப்பல் படைகளை வைத்திருந்தனர் என்பதற்குக் கல்வெட்டு ஆதாரமா யுள்ளது இத்தொடர்.
பொருகடல் - போர்க்களத்தில்.
கடாரம் - இது மலேயா தீபகற்பத்தின் மேல்கரையில் உள்ளது. இதுபொழுது கேடா என்று வழங்கப்படுகிறது. இதை முதல்முதல் கண்டு எழுதியவர் திரு. C. F. ஆண்ட்ரூஸ் அவர். [see The Modern Review Volume 50 under the heading of 'The Hindu Civilisation of Malaya']
உரிமையில் பிறக்கிய பெருனெதிப் பிறக்கமும் - உரிமை மனைவிகளைப்போல் விளங்கும் பெருஞ்செல்வத்தையும்.
ஆர்த்து அவன்அகநகர்-ஆரவாரித்து அவன் தலைமை நகரில்.
புதவமும் கதவமும் - இரண்டு கதவுகளையும் 'புதவக் கதவமும் புடைத்தனன் ஓர்நாள்' என்பது சிலப்பதிகாரம்.
விசயம், பண்ணை, மலையூர், இலாமுரிதேசம் - இவைகள் சுமித்திரா தீவில் உள்ள ஊர்கள்.
மாபப்பாளம், தலைத்தக்கோலம், மாயிருடிங்கம், வளைப்பந்தூரு, இலங்காசோகம், கடாரம், மதமாலிங்கம், இலிம்பிங்கம் - இவைகள் எல்லாம் மலேயா தீபகற்பத்தில் உள்ள ஊர்கள்.

நக்கவாரம் - நிக்கோபார் தீவுகள்
கடுமுரண் - வலிமை பொருந்திய
தண்டால்கொண்ட - சேனையால் வென்ற

உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல் :—தஞ்சை இராசராசேச்சரக் கோயிலில் இருந்த தன் குருவாகிய சர்வசிவ பண்டிதர்க்கும், அவரது சிஷ்யர்களாய் ஆர்ய தேசம், மத்தியதேசம், கௌடதேசம் ஆகிய இவ்விடங்களில் இருந்தவர்களுக்கும் சந்திர சூரியர் உள்ளவரை ஆட்டாண்டுதோறும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் இரண்டாயிரக் கலநெல்லை ஆசாரிய போகமாக இராசேந்திர சோழன் (கங்கைகொண்ட சோழன்) கொடுத்துள்ளான். அவன் இத்தானத்தைக் கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள தனது அரண்மனையின் ஒரு பகுதியாகிய முடிகொண்ட சோழன் திருமாளிகையில் பூசிக்கப்படும் இடத்திலிருந்து தானம் செய்துள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

மாப்பெருந்தண்டாற் கொண்ட - மிகப் பெருஞ்சேனையால் வென்ற.
கோயிலினுள்ளால் - அரண்மனையின் உள்பக்கத்தில்;
முடிகொண்ட சோழன் திருமாளிகை - அரண்மனையின் ஒரு பகுதிக்குள்ள பெயர்.
தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி - பூசிக்கப்படும் இடம்; வழிபாடு செய்யுமிடம்.

வாரம்—பல பொருளொரு சொல். உரிமை, கடமை, அன்பு என்னும் பொருள்தருவது. சிலப்பதிகாரத்தில் (உரை, அரங்கேற்றுக் காதையில்) வாரம்—ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளும் உடையது (இசைப்பாட்டு) என்றுள்ளது.

தே+வாரம்=தெய்வத்தன்மை பொருந்திய வாரம் பாடல் என்பதே, தேவாரம் என்னும் சொற்றொடர்க்கும்

பொருளாகும். ஓதி வழிபடுதற்கு உரியதாதல் பற்றி வழிபாடு என்று பொருள் கொள்ள வேண்டியதாயிற்று. "தேவார தேவராக எழுந்தருளுவித்த சந்திரசேகரர் திருமேனி ஒன்று"—என்னும் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுப்பகுதியும், அதற்கு உல்ஷ்துரை எழுதிய குறிப்பும் ஈண்டு நோக்கத்தகும்.

ஆசார்யபோகம்-ஆசாரியர் அனுபவிக்கவேண்டிய நிவந்தம்.

சர்வசிவபண்டிதர் - இவர் தஞ்சை இராசராசேச்சரத்தில் இருந்த கங்கைகொண்ட சோழனுடைய குரு.

கௌட தேசம் - வங்காள தேசம்.

திருமந்திர ஓலை - அரசனது ஆணையை எழுதுவோர்.

திருவாய்க் கேள்வி - அரசன் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டு வந்து திருமந்திர ஓலையிடம் அறிவிப்போர்.

கல்லில் வெட்டித்து - கல்லில் வெட்டப்பட்டது.

## பொதுக்குறிப்புகள்

பரசுராமன் இருபத்தொருகால் அரசுகளை கட்டியதற்கு வரலாறு :—பரசுராமனது தந்தையாராகிய ஜமதக்னிமுனிவரைக் கார்த்தவீரியார்ச்சுனன் என்னும் அரசன் கொன்றுவிட்டமையை அறிந்து பரசுராமன் இருபத்தொரு தலைமுறைகளாக அரசர்குலத்தார்களை வேரறுத்து வந்தான்.

பாண்டியனுக்கு இந்திரன் முத்தாரம் கொடுத்ததற்கு வரலாறு :—(திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம், இந்திரன் முடிமேல் வளை எறிந்த படலம்.) ஒரு காலத்தே கோள் நிலைமாறி நின்றமையால் சேர சோழ பாண்டியர் நாடுகள் மழை வளமற்று வருந்திய காலத்தே, அந்த நாட்டு மன்னர்கள் உக்கிர பாண்டியன் உள்ளிட்டோர் இந்திரன் நாளோலக்கத்தினை அடைந்து அவன் அருளால் மழை வளம்பெற்றுவர எண்ணிப் பரமசிவன் திருவருளால் அவன் நாளோலக்கம் எய்தினர். எய்திய காலை இந்திரன் இவர்களை வரவேற்று இவர்கட்கு இருக்கைகள்

அமைத்திட, அவ்விருக்கைகளில் சேரர் சோழர் அமர, உக்கிரகுமாரர் அங்கு அமராது இந்திரன் இருக்கையின் பால் அவனொடு ஒப்புற அமர்ந்தனர். இந்திரன் அது கண்டு அழுக்காறெய்தி, உக்கிரகுமாரரைப் பாராது ஏனையரைப் பார்த்து, நீவிர் வந்த காரியம் என்னை யென்று வினவ, அவர்கள் மழை வேண்டி வந்தமை கூற, இந்திரன் அங்ஙனே வரம் அருளி அவர் தம்மைப் போக்கியபின், உக்கிர குமாரர் தருக்குற்று இருத்தல், மாரிவேண்டாப் பெருமிதம் இவற்றை நோக்கிச் சூழ்ச்சியாக எண்ணிறந்தோர் தாங்கிவந்த ஒரு முத்துமாலையை அந்த உக்கிரகுமாரர் தோளில் அணிவித்துப் பொய்ம்மைப்புகழ் உரைகள் கூறி விடுக்க, உக்கிரகுமாரர் அதனைப் பொருள் செய்யாது தம் நாடு மீண்டனர்.

---

## Inscription No. 4*

### கணவதி நல்லூர்ச் சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் மருவிய செங்கோல் வேந்தன் றன் முன்னோன் சேனை பின்னதுவாக முன்னெதிர் சென்று இரட்டை பாடி யேழரை யிலக்கமுங்கொண்டு எதிரமர் பெருது எண்டிசை நகம் பறையது கறங்கப் பேராற்றங்கரைக் கொப்பத்து வந்தெதிர்த்த' ஆஹவ மல்லன்றன் பெருஞ்சேனை எல்லாம் படப்பொருது பாரது நிகழப் பசும்பிணமாக்கி ஆங்கவனஞ்சிப் புறக்கிட்டோட அவனுனையுங் குதிரையும் பெண்டு பண்டாரமும் ஒட்டகத்தொடு அகப்படப் பிடித்து திசையது நிகழ வீரர் அபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தருளிய கோப்பரகே—ரான உடையார் ஸ்ரீராஜேந்திர தேவற்கு யாண்டு கூவது அதிராச ராசமண்

*S. I. I. Vol. III part I page 39.

டலத்து வெங்கால நாட்டு கணவதி நல்லூர் கீழ்ப்பாக் கெல்லை எருத்துக் குளத்துக்கு மேற்கும், வடபாக்கெல்லை நாட்டுப் பெருவழிக்கு தெற்கும், தென்பாக்கெல்லை ஆற்றுக்கு வடக்கும் மேல்பாக்கெல்லை இராஜமஹேந் திரன் வதிக்கு கிழக்கும் இன்னான்கெல்லைக்குட்பட்ட நில நஞ்சை புஞ்சை திருவா நிலைமஹாதேவற்கு வேண் டும் நிமந்தங்களுக்குத் திருனமத்துக் காணியாக உடும் போடி ஆமைதவழ்புற்று எழுந்த இடம் கற்றுப்புல் பெரகர முற்றூட்டும் இறுப்பதாக நம் ஓலை கொடுக்க திருவாய்மொழிந் தருளினாரென்று திருமந்திரவோலை க்ஷத் திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு நேர் வாயி லுடையான் தாழி திருப்பனங்காடு உடையானான வான வன் பல்லவதரையன் எழுத்து. திருமந்திர ஓலை நாயகம் இராஜராஜனான தொண்டைமான் எழுந்து. ஊரான் உத்தம சோழனான இராஜ ராஜ பிரஹ்மாதி ராயன் எழுத்து. அரையன் இராசராசனான வீர ராஜேந்திர ஜெயமுரி நாடாழ்வான் எழுத்து. உடன் கூட்டத்து அதிகாரிகளில் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனை யூர்நாட்டு ஜெயங்கொண்ட சோழநல்லூருடையார் உதைய திவாகரன் கூத்தாடியாரான வீரராஜேந்திர மழவராயன் எழுத்து. இவை பன்மாஹேச்வர ரக்ஷை.

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்** :—திருச்சிராப்பள்ளி சில்லா, கரூர், பசுபதீச்சரர் கோயிலின் தென்புறச்சுவர்.

**குறிக்கப்பெற்ற அரசன்** :—இராசேந்திர சோழன் (அ) விசய ராசேந்திர சோழன்.

**அரசனைப் பற்றிய பொதுக்குறிப்பு** :—இவன் கங்கைகொண்ட சோழனது (இராசேந்திரன் I) இரண்டாவது மகனவன். சரித்திரத்தில் இராசேந்திரன் II என்று பேசப்படுபவன்

இவனே யாவன். இவன் கி. பி. 1052 முதல் கி. பி. 1062 வரை ஆண்டான். இவன் " கல்யாணபுரமும் கொல்லா புரமும் கொண்டருளி ஆனைமேல் துஞ்சியருளிய பெருமாள் விசயராசேந்திர தேவன் " என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளான். இவன் பரகேசரி பட்டத்துடன் ஆண்டவன். பாடமாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற 4, 5, சாசனங்கள் இவன் காலத்தில் ஏற்பட்டன வாகும்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :—கி. பி. 1061.**

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் வீரச்செயல்

**கொப்பத்துப்போர் :—**கொப்பம் என்பது பேராற்றங் கரையில் (கிருஷ்ணா நதிக்கரையில்) இருக்கும் ஊராகும். 'செப்பரும் தீர்த்தத்துக் கொப்பத்தகவையில்' - என்னும் கல்வெட்டுப் பகுதியால் இஃது ஒரு புண்ணியத்தலமென்று பெறப்படுகின்றது. இவ்வூரில் விசயராசேந்திர சோழனது அண்ணனாகிய முதலாம் இராசாதிராசனுக்கும் மேலைச் சளுக்கிய அரசனாகிய ஆகவமல்லனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. அதில் முதலாம் இராதிராச சோழனது சேனை தோற்றுப்போய் ஓட, விசயராசேந்திர சோழன் எதிர் சென்று இரட்டபாடி ஏழரை இலக்கத்தைக் கைக்கொண்டான். பின் ஆகவமல்லன் தன் பெருஞ்சேனையோடு கொப்பத்திற்கு வந்து எதிர்த்துத் தோல்வியுற்று ஓடினான். விசயராசேந்திர சோழன் ஆகவமல்லனுடைய குதிரை, பெண்டு, பண்டாரம், ஒட்டகம் இவைகளை எல்லாம் பிடித்துக்கொண்டான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

தன்முன்னோன் சேனை பின்னதுவாக - தன்னுடைய அண்ணனாகிய முதலாம் இராசாதிராசன் சேனை பின் வாங்கி வர (அ) புறங்காட்டி வர.

எதிர் அமர்பெறாது - எதிரில் பகைவர் எதிர்ப்பாரின்றி.

எண்டிசை நகம் பறையது கறங்க - எட்டுத் திக்குகளிலும் உள்ள மலைகளில் போர்ப்பறை ஒலிக்க.
பேராற்றங்கரை - கிருஷ்ணா நதிக்கரை.
ஆகவமல்லன் - இவன் மேலைச்சளுக்கிய அரசன்
பாரது நிகழப் பசும் பிணமாக்கி - நிலப்பரப்பு முழுவதும் பிணங்கள் கிடக்குமாறு ஆக்கி.
பெண்டு - பட்டக் கிழத்தியார் அல்லாத பிறமகளிர்.
திசையது நிகழ - எட்டுத்திக்குகளிலும் புகழ.

**உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல்** :—இராசேந்திர சோழன் அதிராச ராசமண்டலத்து வெங்கால நாட்டுக் கணவதி நல்லூரில் கீழெல்லை எருத்துக் குளத்துக்கு மேற்கு, வடவெல்லை நாட்டுப் பெருவழிக்குத்தெற்கு, தென்னெல்லை ஆற்றுக்கு வடக்கு, மேற்கெல்லை இராச மகேந்திரன் வதிக்குக் கிழக்கு ஆகிய இந்நான்கு எல்லைக் குட்பட்ட நன்செய் புன்செய் நிலங்களைத் திருவாநிலை மகாதேவர்க்கு வேண்டும் நிபந்தங்களுக்குத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்துள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

அதிராச ராசமண்டலம் - கொங்குநாடு. இஃது இக்காலம் கோயமுத்தூர் ஜில்லாவும் சேலம், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களின் ஒரு பகுதியும் கொண்ட நாடாகும்.
வெங்கால நாடு - அதிராச ராசமண்டலம், வெங்கால நாடு, தட்டையூர் நாடு முதலாகப் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் கருவூர், புன்னம், முதலான ஊர்களைத் தன்னகத்துக்கொண்டது வெங்கால நாடாகும்.
கீழ்ப்பாக்கெல்லை - கீழெல்லை.
எருத்துக்குளம் - எருது குளிப்பாட்டும் குளம்.
வதி - வழி
திருநாமத்துக் காணியாக - சிவபெருமானுக்குரிய நிலமாக
உடும்போடி - காடு பொருந்திய பகுதி

ஆமைதவழ்புற்று - வளம்பொருந்திய பகுதி
கற்றுப்புல் (கன்றுப் புல்) கன்று புல் மேய்தற்குரிய இடம்
பேரகரம் - பிராமணர்கள் குடியிருக்கும் பெரிய இடம்
முற்றாற்று - சோதிடர், புலவர் இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம்
இறுப்பதாக - கொடுப்பதாக
நம் ஓலை கொடுக்க - நம் உத்தரவு கொடுக்க
திருமந்திர ஓலை - அரசனது ஆணையை எழுதுவோர்
க்ஷத்திரிய சிகாமணி வளநாடு - தஞ்சாவூர்ச் சில்லாவில் அரிசிலாற்றிற்கும் குடமுருட்டி ஆற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். இதற்கு வடகடுவை நாடு என்றும் பெயர். அது அளநாடு, இன்கண் (எண்கண்) நாடு, மருகல் நாடு (திருமருகல் நாடு) முறையூர் நாடு, பனையூர் நாடு, பட்டினக்கூற்றம், சேற்றூர்க்கூற்றம், தேலூர் நாடு, திருநறையூர் நாடு, திருவாரூர்க்கூற்றம், விளநாடு என்னும் பதினொரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வளநாடு முதலாம் இராசராசன் காலம் முதல் முதற்குலோத்துங்கன் காலம்வரை இப்பெயருடனே விளங்கிவந்தது. முதற்குலோத்துங்கன் காலத்தில் இது குலோத்துங்கசோழ வளநாடு என்னும் பெயர் எய்திற்று.
பனையூர் நாடு - இது க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டின் பதினொரு பிரிவுகளில் ஒன்றாகும். நேரிவாயில், பூலோக மாணிக்க சதுர்வேதிமங்கலம், ஜெயங்கொண்ட சோழ நல்லூர் முதலான ஊர்கள் இந்நாட்டில் இருந்தன என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன
திருவானிலை மகாதேவர் - கருவூர்க் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர்.
தாழி - இது குடிப்பெயர்
திருப்பனங்காடு உடையான் - இஃது இயற்பெயர்
வானவன் பல்லவதரையன் - இது பட்டப்பெயர்

திருமந்திர ஓலைநாயகம் - அரசனது ஆணையை எழுதுவோர்களுக்குத் தலைவராய் இருப்பவர்.

தொண்டைமான் - இது பட்டப்பெயர்

இராஜராஜ பிர்மாதிராஜன் - இது பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்

அரையன் - இது நாட்டதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்.

வீரராஜேந்திர ஜெயமூரி நாடாழ்வான்-இது பட்டப்பெயர்.

உடன்கூட்டத்து அதிகாரிகள் - அரசனது மந்திராலோசனைக்கு உரியவர்.

பன்மாகேஸ்வர ரக்ஷை - பல சிவனடியார்கள் இதைக் காப்பார்களாக.

---

## Inscription No. 5*

### அமண்பாக்கம் சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமாது புவியெனும் பெருமாதர் இவர் தம் மாதேவியர்களாக மீதொளி வெண்குடையுயர்த்து திண்கலி பெயர்த்து தன் சிரிய தாதையாகிய எறிவலி கங்கை கொண்ட சோழனை பொங்கிதல் இருமடி சோழனென்றும், பொருமுரட்டன் திருத்தம்பியர் தம்முள் வென்றிகொள்மும் முடிசோழனைத் தெம்முனையடுதிறற் சோழபாண்டிய னென்றுங் கோழிமன்னெருடு கழல் வீரசோழனைப் படிபுகழ்க் கரிகால் சோழனென்றும், பொருதொழில் வாள்வலித் தடக்கை மதுராந்தகனை சோழகங்கனென்றுந் தோள்வலி மேவிகல் பராந்தக தேவனை சோளவயொத்திய ராஜனென்றும், துயரத் தன்பொடு கருது காதலருள் இத்தலம் புகழ் ராஜேந்திரசோழனை உத்தம சோழனென்றும்

*S. I. I. Vol. III part I page 59.

தொத்தணி முகையவி மூலங்கல் முடிகொண்ட
சோழனை இகல் விசயாலைய னென்றும் புகர்முகத் தேழு
யர் களிற்று சொழ கெரளனை வார்சிலை சொழகெரள
னென்றும், திண்டிறற் கடாரங்கொண்ட சோழனை
தினகரன் குழத்து சிறப்பமர் சோள ஜனகராஜனென்
றுங், கனைகடல் படிகொண்ட பலபுகழ் முடிகொண்ட
சோழனை சுந்தரசோழனென்றுஞ் செந்தமிழ்ப் பிடிகலி
ரட்டபாடி கொண்டசோழனை தொல்புவியாளுடைச்
சோழகன்னகுச்சிய ராஜனென்றும் பின்னுந் தன்
காதலர் காதலர் தம்முள் மேதகு கதிராங் கனைகழல்
மதுராந்தகனை வெல்படைச் சோழ வல்லபனென்று மான
சிலைக்கை யொராளைச் சேவகனை நிருபேந்திர சோழ
னென்றும் பருமணிச்சுடர் மணிமகுடஞ் சூட்டிப் படி
மிசை நிகழு நாளினு ளிகல்வெட்டெழுந்து சென்ருண்
டிற விரட்டமண்டல மெய்தி நதிகளு நாடும் பதிகளு
மநேக மழித்தனன் வளவனென்று மொழிப் பொருள்
கேட்டு வேகவெஞ்சளுக்கி ஆகவ மல்லன் பரிபவ
மெனக்கிதென் றெரிவிழித் தெழுந்து செப்பருந்திரத்த
கொப்பத் தகவையில் சென்றெதிரேன் றமர்துடங்கிய
பொழுதவன் செஞ்சரமாரி தன் குஞ்சர முகத்தினுந்
தன்றிருத்துடையிலுங் குன்றுறள் புயத்திலுந் தைய்க்க
வுந் தன்னுடன் களிறேறிய தொடுகழல் வீரர்கள் மடிய
வும் வகையாதொரு தனியநேகம் பொருபடை வழங்கியம்
மொய்ம்பமர் சளுக்கி தம்பி ஜயசிங்கனும் போர்ப்புலக்
கேசியுந்தார்த் தசபன்மனுமான மன்னவரில் மண்டலிக
சோகனுமான வண்புகழாளு மாரையனுந் தேனிவர்
மட்டவி ழலங்கல் மொட்டையனுந் திண்டிறல் நன்னி
நுளம்பனு மெனு மிவர் முதலியர் எண்ணிலி யரை
சரை விண்ணகத் தேற்றி வன்னியரேவனும் வயப்

படைத்துத்தனுங் கொன்னவில் படைக்குண்ட மயனும் என்றின்ன வெஞ்சின வரைசரொ டஞ்சிய சளுக்கி குலகுல குலைந்து தலைமயிர் விரித்து வெனுற நெளித்துப் பின்னுற நோக்கி கால் பறிந்தோடி மேல் ,கடல்பாய துரத்திய பொழுதச் செருக்களத்தவன்விடு சத்துருபயங் கரன் கரபத்திர மூலபத்திர ஜாதி பகட்டரைசநேகமு மெட்டு நடைபரிகளு மொட்டக நிரைகளும் வராகவெல் கொடி முதல் ராஜபரிச் சந்தமும் ஒப்பில் சத்தியவ்வை சாங்கப்பை யென்றிவர் முதல் தேவியர் குழாமும் பாவை யரீட்டமு மெனையன பிறவு முனைவையிற்கொண்டு விஜய அபிஷேகம் செய்து தெந்திசைவயிர்ப் பொர்ப் படை நடாத்திக் கார்க்கடலிலங்கையில் வீறற்படைக் கலிங்கர்மன் வீரசலா மேகனைக் கடற்களிற்றெடு மகப் படக் கதிர்முடி கடிவித் திலங்கையற் கிறைவன் மாநா பரணங் காதலரிருவரைக் களத்திடைப் பிடித்து மாப் பெரும் புகழ் மிக. வளர்த்த கோப்பர கெசரி பந்மராந உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவர்க்கு யாண்டு நாலாவது நாள் அ௰உ ஜயங்கொண்ட சோழமண்டலத்து செங் காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு ராஜசூளா மணிச் சதுருப்பெதி மங்கலத்து மஹாஸபையொம். இவ்வாட்டை ஸிம்ஹ நாயற்று அபரபக்ஷத்து அஷ்டமி யும் வியாழக்கிழமையும் பெற்ற ரொஹிணி நாள் எம் மூர்ப் ப்ரஹ்மஸ்தாந மண்டபத்தே கூட்டக் குறைவறக் கூடியிருந்து எங்களூர் ஸ்ரீமத் த்வராபதியான ஸ்ரீகாமக் கோடி விண்ணகராழ்வார்க்கு குடுத்த நிலமாவது எங்களூர் தெண்பிடாகை அமண்பாக்கத்து நிலங் கீழ்பாற்கெல்லை மண்ணிக் காலுக்கு மேற்கும், தென் பாற்கெல்லை மண்ணிக் காலுக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை அரைசங் குட்டத்துக்கும் நங்காசி என்னும்

புலத்துக்குங் கிழக்கும், வடபாற்கெல்லை பழூவூர் நக்கப் புத்தேரி கரைக்குத் தெற்கும், இத்தேவற்கு முன்பு சிலாலேகை பண்ணின நிலத்துக்குத் தெற்கும்ஆக இன் நாற்பாற் கெல்லைக்கும் நடுவுபட்ட நிலமும் ஓடையு முடைப்பும் மேல்நோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும் இன் நாற்பாற் கெல்லைக்கும் நடுவுட்பட்ட தெல்லாம் ஸேனாபதிகள் ஜயங்கொண்ட சோழ ப்ரஹ்மாதி ராஜர் தாயார் காமக்கவ்வையள் பக்கல் ஸ்வம் கொண்டு சந்த்ராதித்தவற் இன் நிலத்துக்கு இறை இறுத்துக் குடுப்போமாநோம் மஹாஸபையோம். ஸபையுளிருந்து கரையிட்டுக் கரைப் பொந்து பணித்த காராம்பிசெட்டு நாராயணக் கிரமவித்தனும் இராயூர் சந்திரதேவ அத்தாழிக் கிரமவித்தனும் ஸஹணை மாதவக்கிரமவித்தனும் பணிப்பணியால் பணிகெட்டு எழுதிநேன் - இவ்வூர் ஊர்க்கரணத் தான் அலங்காரன் சீராமநேன். இவை என் எழுத்து.

## விளக்க உரை

கல்வெட்டு இருக்குமிடம் :—செங்கற்பட்டு ஜில்லா, மணிமங்கலம் ஊரிலுள்ள இராசகோபாலப் பெருமாள் கோயிலின் உள்பிரகாரத்துக் கீழ்ப்புறச் சுவர்.

குறிக்கப்பெற்ற அரசன் :—(4-ஆம் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற) இராசேந்திர சோழன் (அ) விஜயராஜேந்திரன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :—கி. பி. 1056.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்

1 (a) இராசேந்திர சோழன் தன் கிளைஞர்களுக்குப் பட்டம் கொடுத்து, மகுடஞ் சூட்டியது :—

கல். 3

| உறவினர் | பெயர் | பட்டம் |
|---|---|---|
| சிற்றப்பன் | எறிவலி கங்கை கொண்ட சோழனுக்கு | பொங்கிகல் இரு முடிச் சோழன் என்றும் ; |
| தம்பியர்களுள் | (1) மும்முடிச் சோழனுக்கு | தெம்முனை அடுதிறல் சோழ பாண்டியன் ; |
| | (2) வீரசோழனுக்கு | படிபுகழ்க் கரிகால சோழன்; |
| | (3) மதுராந்தகனுக்கு | சோழகங்கன் ; |
| | (4) பராந்தக தேவனுக்கு | சோள அயோத்திய ராஜன் என்றும் ; |
| புதல்வர்களுள் | (1) இராசேந்திர சோழனுக்கு | உத்தமசோழன் ; |
| | (2) முடிகொண்ட சோழனுக்கு | இகல் விசையாலயன் ; |
| | (3) சோழ கேரளனுக்கு | வார்சிலை சோழகேரளன் ; |
| | (4) கடாரங்கொண்ட சோழனுக்கு | சோள ஜனக ராஜன் ; |
| | (5) முடிகொண்ட சோழனுக்கு | சுந்தர சோழன் ; |
| | (6) இரட்டபாடிகொண்ட சோழனுக்கு | சோழகன்ன குச்சிய ராஜன் என்றும் ; |
| பேரர்களுள் | (1) மதுராந்தகனுக்கு | வெல்படைச்சோழவல்லபன்; |
| | (2) ஆனைச் சேவகனுக்கு | நிருபேந்திர சோழன் என்றும் பட்டங்களைக் கொடுத்து மகுடங்களைச் சூட்டினன். |

## வீரச்செயல்

(b) **மேலைச் சளுக்கியரோடு கொப்பத்தில் போர் புரிந்தது :—** இராஜேந்திர சோழன் இரட்ட மண்டலத்தி லுள்ள அநேக நதிகள், நாடுகள், நகரங்கள் இவைகளை அழித்து விட்டான் என்று மொழிப்பொருள் கேட்டு, சளுக்கிய அரசனாகிய ஆகவமல்லன் கொப்பத்திற்குச் சென்று சோழனோடு யுத்தம் செய்யத் தொடங்கினான். ஆகவ மல்லன் விட்ட அம்புகள் சோழனது பட்டத்து யானையின் முகத்திலும், அவனுடைய (சோழனுடைய) துடையிலும், புயங்களிலும் தைத்துள்ளன. சோழனுடைய வீரர்கள் பலர் மடிந்துள்ளனர். சோழனும் பல வகையாலும் ஒப்பற்ற அம்புகளைச் சளுக்கியர்மீது வழங்கினன். அது பொழுது ஆகவமல்லனுக்குத் துணையாக வந்திருந்த ஜய சிங்கன், புலிகேசி, தசபன்மன், அசோகய்யன், ஆரையன், மொட்டையன், நன்னிநுளம்பன் என்பவர்கள் இறந்து பட்டனர். ஆகவமல்லனோ தன் சேனாபதிகளான ஏவன், துத்தன், குண்டமய்யன் இவர்களுடன் முதுகுகாட்டி ஓடிப் போய்விட்டான். இராசேந்திர சோழன், ஆகவ மல்லனுடைய சத்துரு பயங்கரன், கரபத்திரன், மூலபத் திரன் முதலான அரசு யானைகள், எட்டு நடை பரிகள் ஒட்டக நிரைகள், வராகக் கொடி, இராச பரிச்சின்னம் இவைகளுடன் அவனுடைய மனைவியர், காமக்கிழத்தியர் களையும் கைக்கொண்டான்.

(c) **இலங்கைப் போர் :—** இலங்கையில் தங்கியிருந்த கலிங்க தேசாதிபதியாகிய வீரசலாமேகனுடைய கிரீடத் தைப் பிடுங்கிக்கொண்டான். இலங்கைக்கு அரசனாகிய மானாபரணனுடைய பிள்ளைகள் இருவரையும் பிடித்துக் கொண்டான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

மீதொளிர் - மேலே ஒளிவிடுகின்ற

வெண்குடை உயர்த்து - வெண்குடை தன்னைக் கவிந்திருக்கும்படிச் செய்து

திண்கலிபெயர்த்து - வறுமையைப் போக்கி (Uprooted the powerful Kali age)

தாதையாகிய - தந்தையாகிய

எறிவலி கங்கைகொண்ட சோழன் - இவன் முதலாம் இராசராசனுடைய இரண்டாவது பிள்ளை.

பொங்கு இகல் - போரில் வலிமைபெற்ற.

மும்முடிச்சோழன் - சேர, சோழ, பாண்டிய நாடுகள் ஆகிய மூன்றுக்கும் அரசனென்று முடிசூட்டப் பெற்றவன்.

குறிப்பு : இருமுடிச்சோழன் - என்றால் ஏதேனும் இரண்டு நாடுகளுக்கு அரசனென்று முடிசூட்டப் பெற்றவன். இவ்வழக்கத்தைக் கலிங்கத்துப் பரணியில் காணலாம். அங்கு மும்முடி நான்முடி என்று வருவதெல்லாம் இராசமகேந்திரனைக் குறிக்கும். கல்வெட்டில் இருமடி, மும்மடி என்று இருப்பனவற்றை இருமுடி, மும்முடி என்று திருத்திக்கொள்ளுதல் வேண்டும்.

தெம்முனை அடு திறல் - தெற்கேயுள்ளவர்களைப் போரில் வென்ற வல்லமையுடைய

கோழிமன் தொடுகழல் வீரசோழனை - உறையூர்க்கு அரசனா யிருந்த கட்டப்பட்ட கழலினையுடைய வீர சோழனை

படிபுகழ் - பூமியே புகழும்படியான

பொருதொழில் வாள்வலித் தடக்கை - போர்செய்யும் தொழிலை உடைய வாளேந்திய வலிமைபொருந்திய விசாலமான கையையுடைய

தோள்வலி மேவிகல் - தோள்வலிமை பொருந்திய ஆற்றல் உடைய

(துயரத்தன்பொடு - இதை, தூய தன் அன்பொடு என்று கொள்ளுதல் வேண்டும்)

காதலருள் - புதல்வர்களுள்

தொத்தணி முகையவிழ் அலங்கல் - பூங்கொத்துக்களின் அரும்புகள் மலர்கின்ற மாலையையுடைய

இகல் விசையாலயன் - வலிமைமிக்க விசையாலயன்

புகர்முகத்து - முகத்தில் புள்ளிகளோடு கூடிய

ஏழுயர்களிறு - ஏழுமுழம் உயர்ந்திருக்கும் யானை. இதுவே பட்டத்துக்கு உரியதாகும்.

சிறப்பமர் - சிறப்புப் பொருந்திய

கனைகடல் படிகொண்ட - ஒலிக்கின்ற கடலால் சூழப் பட்ட உலகத்தை வென்ற

செந்தமிழ்ப் பிடிகளிற்று - செந்தமிழ் நாட்டிலுள்ள பெண், ஆண் யானைகள் அடங்கிய சேனையையுடைய

கன்னகுச்சியம் - கன்னோசி ராச்சியம்

காதலர் காதலர் - பேரர்

மேதகு கதிராங்கனைகழல் - சிறப்புப் பொருந்திய ஒளிவிடு கின்ற ஒலிக்கின்ற வீரகண்டாமணியை அணிந்த

மானச்சிலைக்கை - பெருமை பொருந்திய வில்லைக் கையி லேந்திய

படிமிசை நிகழுநாளில் - உலகில் வாழுங்காலத்தில்

இகல் வேட்டு எழுந்து - போரை விரும்பி எழுந்து

இரட்டமண்டலம் - இரட்டபாடி

பதிகள் - நகரங்கள்

வேகவெஞ்சளுக்கி - கோபம் கொண்ட சளுக்கியனாகிய

பரிபவம் எனக்கு இது என்று - இது அவமானம் என்று

எரிவிழித்து எழுந்து - கண்களில் தீப்பொறி பறக்கும்படி பார்த்து எழுந்து

செப்பருந்திரத்த கொப்பத்து - இதை, செப்பருந் தீர்த்த கொப்பத்து என்று கொள்ளுதல் வேண்டும்

அகவையில் - இடத்தில்

சென்று எதிரேன்று அமர்தொடங்கிய பொழுது - சென்று எதிரே எதிர்த்து யுத்தம் தொடங்கிய காலையில்

அவன் செஞ்சரமாரி-ஆகவமல்லன் வர்ஷித்த அம்பு மழைகள்

தன்குஞ்சரமுகத்திலும் - தன்பட்டத்து யானையின் முகத்திலும்,

தன்திருத்துடையிலும் - தன்னுடைய (இராசேந்திர சோழனுடைய) அழகிய துடையிலும்

குன்றுறழ் புயத்திலும் - குன்றை ஒத்த புயங்களிலும்

வகையாதொரு தனியநேகம் - வகையால் ஒருதனி அனேகம் - என்று கொள்க

வகையால் ஒருதனி அநேகம் பொருபடை - பலவகையாலும் ஒப்பற்ற அனேக ஆயுதங்களை

மொய்ம்பு அமர் - வலிமை பொருந்திய

சளுக்கி தம்பி - ஆகவமல்லனுடைய தம்பி

போர்ப்புலிக்கேசி - போரில்வல்ல புலிக்கேசி

மண்டலிகசோனுமான - இதை, மண்டலிகயசோகய்யனுமான - என்று கொள்க

வன்னியர் ஏவனும் - வன்னியர்களில் ஏவன் என்னும் பெயர் உடையவனும். வன்னியர் - படைத்தலைவர். "நாற்படை வன்னியராக்கிய பெருமாள்" - என்பது கல்லாடம்

கொன்னவில்படைக் குண்டமயனும் - பெருமையாகப் புகழப்படுகின்ற படையையுடைய குண்டமய்யன் என்னும் சேனாதிபதியும்

வெஞ்சின அரைசோடஞ்சி - இங்கு அரைசு என்னும் சொல் சேனாதிபதி என்ற பொருளில் வந்துள்ளது.

சளுக்கி குல குல குலைந்து - இதை, சளுக்கிகுலம் குலைந்து என்று கொள்க

வெநுற - முதுகுகாட்டி

கால் பறிந்தோடி - காலால் வேகமாக ஓடி

பகட்டரைசு அநேகமும் - அரசயானைகள் பலவும்

பத்திரசாதியானை - இதன் உயர அளவு ஏழு முழமும், நீளம் எட்டு முழமும், வயிற்றின் சுற்றளவு பத்து முழமும் ஆகும். (சுக்கிரநீதி 4 - ம் அத்தியாயம் பக்கம் 307 இல் காண்க)

எட்டு நடை பரிகளும் - மிகவேகமுடைய குதிரைகளும் (Horses of lofty gait)

பரிச்சிந்நம் - அடையாளம்

தேவியர் குழாமும் - மனைவியர் கூட்டமும்

பாவையர் ஈட்டமும் - உரிமைப்பெண்கள் (காமக் கிழத்தியர்) கூட்டமும்

போர்ப்படை நடாத்தி - போர்செய்தற்குரிய சேனையை நடாத்தி

கடிவித்து - பிடுங்கிக்கொண்டு

**உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல் :**—இராச சூளாமணிச் சதுர்ப்பேதி மங்கலத்து மகா சபையார், சேனுபதிகள் சயங்கொண்ட சோழபிர்மாதிராயரின் தாயார் காமக்கவ்வையர் பக்கல் பொருள்பெற்று, இராச சூளாமணிச் சதுர்ப்பேதி மங்கலத்துக்குத் தென்பாலுள்ள அமண்பாக்கம் என்னும் சிற்றூரில், குறிப்பிட்ட நான்கு எல்லைக்கு உள்பட்ட நிலத்தை விலைக்கு வாங்கிக் காமகோடி விண்ணகர ஆழ்வார்க்குக் கொடுத்துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

**ஜயங் கொண்ட சோழமண்டலம் :**—தொண்டைமண்டலத்தை முதலாம் இராசராச சோழன் வென்ற பிறகு அதற்கு வைத்தபெயர்.

**செங்காட்டுக் கோட்டம்** :—தொண்டை மண்டலத்தின் 24 கோட்டங்களுள் ஒன்று - கோட்டம் என்பது வள நாட்டுக்குச் சமமாகும்.

இவ்வாட்டை - இவ்வருஷத்து

ஸிம்ஹ நாயற்று-(சூரியன் சிம்ஹ லக்கனத்தில் பிரவேசித்தல்) ஆவணி மாதம்.

ரோகணி நாள் - இதில், நாள் - நக்ஷத்திரம்

**ப்ரஹமஸ்தான மண்டபம்** :—பஞ்சாயத்துக் கூடும் இடம்

கூட்டம் குறைவறக் கூடியிருந்து - Full bench

த்வாராபதி - கண்ணபிரான்

பிடாகை - சிற்றூர்

நங்காசி - வயலின்பெயர்

பழூவூர் நக்கப்புத்தேரி - பழூவூர் நக்கன் என்னும் சிவனடியாரால் வெட்டப்பட்ட ஏரி

சிலாலேகை - கல்லெழுத்து

மேனோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும் - இவைகள் இனமில்லா அடைமொழிகள்

ஸேனுபதிகள் ஜயங்கொண்ட சோழ ப்ரஹ்மாதிராஜர் - இவர் சேனுபதிகள் என்று பன்மையில் பேசப்பட்டிருப்பதால் மிக்க மதிப்புடையவர் என்று தெரிகின்றது. பிர்மாதிராயர் என்னும் பட்டப்பெயரால் இவர் பிராமணர் என்று தெரிகின்றது. மாணிக்கவாசகருக்கு இருந்த தென்னவன் பிர்மாதிராயர் என்ற பட்டமும் இதை வலியுறுத்தும்.

ஸ்வம் - பொருள் (Funds என்று டாக்டர் உல்ஷ் துரையும் எழுதியுள்ளார்)

சந்திராதித்தவல் - சந்திரசூரியர் உள்ளவரையில்

இறையிறுத்து - வரி நீக்கி

கரைஇட்டு - எல்லை இட்டு

கரைப்பொந்துபணித்த - மேற்பார்வைசெய்த

காராம்பிசெட்டு - இது பிராமணருடைய குடிப்பெயர்
பணிப்பணியால் - பணித்த உத்தரவால்

## பொதுக் குறிப்பு

"ஆக இன் நாற்பாற் கெல்லைக்கும் நடுவுபட்ட நிலமும் ஓடையுமுடைப்பும் மேனோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும் இந்நாற்பாற் கெல்லைக்கும் நடுவுட்பட்டதெல்லாம்"—என்னும் கல்வெட்டுப் பகுதியால் நிலத்தை விற்பனைசெய்து கொடுத்தவர், சில பகல் கழித்து, நிலத்தைத்தான் விற்றேனே யொழிய அதிலுள்ள மரம், கிணற்றிலுள்ள கற்கள் இவைகளை விற்கவில்லை என்று வாதாடலாமல்லவா? அவ்வாறு எழாவண்ணம் சாசனம் பழங்காலத்தில் எவ்வாறு நுட்பமாய் ஆராய்ந்து எழுதப்பட்டது என்பது களிபேருவகை தருவதாய் இருக்கின்றது.

---

# Inscription No. 6*

## பாக்கூர் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ திருவளர் திரள்புயத் திரு நில வலையந் தன் மணிப்பூணெனத் தங்கிப் பன்மணிக் கொற்ற வெண்குடை நிழற்குவலையத்துயிர்களைப் பெற்றதாயினும் பெரமற்றுள்ளவறை கழலரசர் தன்னடியினிலொதுங்க வுறை பிலத்துடைய் கலியது வொதுங்க முறைமையி லரும்பெறல் தமையனை முன்வந்தானையிரும்புவி புகழ் இராஜராஜனென்ருளிர் மணிமுடி சூட்டி, தன்றிருமைந்தனுகிய கங்கை கொண்ட

*S. I. I. Vol. III Part I Page 33.

சோழனை யெழுபரி யானைச் சேனைச் சோழ பாண்டிய னென் றுண்டுயர் மணிமுடிப் பாண்டி மண்டலங் குடுத் தருளிய வாட்கை வடிகொண்ட கதிர்வேல் முடிகொண்ட சோழனை சுந்தர சோழனெனச் சுடர்முடி சூட்டி யந்தமில் பெருஞ்சிறப்பருளித் தன் கிளைவருலகத்தவற்குரிய வகலி டம் வேறு வேறருளி இகல் விளைவிருதொடு மலைக்கும் விக்கலன் றன்னொடும் வெஞ்சிலைத் தடக்கை மாசாமந் தரைக் கங்கபாடிக் களத்திடை னின்று துங்கபத்திரிக் கரை புகத்துரந்து அங்கவர் வேங்கைநாட்டிடை மீண்ட வர் விட்ட தாங்கரும் பெருவலித் தண்டு கெடத் தாக்கி மாதண்ட நாயக்கன் சாமுண்ட ராஜனைச் சென்றவன் சிரத்தினை யறுத்து மற்றவனொரு மகளாகிய விருகயத் தேவி நாகலை யென்னுந் தோகையம் சாயலை முகத்தொடு மூக்கு வேறுக்கி பகைத்தெதிர் மூன்றும் விசையினும் மேன்றெதிர் பொருது பரிபவந் தீர்வதெனக் கருதிப் பொருத புனல் கூடல் சங்கமத் தாகவமல்லன் மகனுகிய விக்கலன் சிங்களனென்றிவர் தம்மொடும் மெண்ணில் சாமந்தரை வென்றடுதூசி முன்விட்டுத் தன்றுணை மன்னன் தானும் பின்னடுத்திருந்து வடகடலென்ன வகுத்தவந் தானையை கடகளிறென்றல் கலக்கி யுடல் புரிக் கோசலச் சிங்களக்கொடிப்படை முன்னூர்த் தூசி வெண்களிற்றொன் துணித்து கேசவ தண்ட நாயக்கன், கேத்தரசன், திண்டிறல் மாரயன்த், திறற் போத்தயனி கல் செய்ய பொற்கோதை மூவேந்தி யென்றூர் தடுத்துப் பிலனேக சாமந்தரைச் சின்னபின்னஞ் செய்து பின்னை முதலியாகிய மதுவண னொட விரித்த தலையொடு விக் கலனோடச் செருக்கெழி லழிந்து சிங்களனோட அண்ணல

முதலிகளனைவருமமர் பொறப்பண்ணின பகடிமுந்தோட னண்ணிய ஆகவமல்லனும் அவர்க்கு முன்னோட தன் வேக வெங்களிற்றினை விலக்கி வாகை கொண்டங்கவர் தாரமும் மவர்குல தனமும் சங்குமுன் தொங்கலுந் தாரையும் பேரியும் வெகட மயமும் வெண்சாமரையும் காக்கைக் கொடியும், மகர தோரணமும் புஷ்பகப் பிடி போர்க்களிற் றீட்டமும், பாய் பரித்தொகை பறித்து செய்யொளிர் விசையமணி மகுடம் மிசையொடுந் திசை தொறும் சினப்புலி செலுத்திக் குசை கொளுத்தும் புரவிப் பொத்தப்பி வேந்தனை வாரனை வனைகழல் தொன்றனைத் தாராசானு தன் றம்பியைப் போர்க்களத் தலங்கல் சூழ்ப்பசுந் தலையரிந்து பொலங் கழல்த் தென் னனை சீவல்லவன் மகன் சிறுவனை மின்னவில் மணிமுடி வீரகேசரியை கதகடகளிற்றா லுதைத்திட்டு மதகொடு செயித்து வரப்பாகாச் செங்கோல் செலுத்தி வேத நீதியை விளக்கி மீதுயர் வீரத் தனிக் கொடித் தியாகக் கொடியொடும் ஏற்பவர் வருகென்று நிற்றம்ப போர்த் தொழி வாய்மையில் நெய்த வீற்றிருந்த மேவரு மனு னெறி விளங்கிடக் கோ இராசகேசரி பர்ம்மரான உடை யார் ஸ்ரீவீர ராஜேந்திர தேவற்கு கெங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலுள்ளால் திருமஞ்சன சாலையில் எழுந்தருளியிருந்து உதகம் பண்ணி அருளின அதிராஜ ராஜ மண்டலத்து வெங்கால னாட்டுப் பாக்கூர் வெள் ளான் வகையிலிறை முதல் தவிர்த்து யாண்டு ௩ வதுக் கெதிராவது முதல் இவ்வூர் இறையிலி தேவதானம் திருனாமத்துக் காணியாக இறை புரவு சிற்றாயம் எலவை யுகவை மன்றுபாடு தெண்ட குற்றம் உடுப்போடி ஆமை

தவழ்புற்றும் எழுவன முளைப்பன கற்றுப் புற்பெரக் கர
முற்கூட்டும் இவ்வூர் இறைகட்டின காணிக்கடன் பொன்
முன்னூற்று முக்கழஞ்சரையே மஞ்சாடி அரைமாவும்
நெல்லு மூவ்வாயிரத்து அனூற்று முப்பத்தொரு கலனே
தூணியும், இந்நாட்டுக் கருவூர்த் திருவாநிலை மஹா
தெவற்கு இறுப்பதாக யாண்டு முதல் இறையிலி தேவ
தானம் திருநாமத்துக் காணியாக வரியிலிடத் திருவாய்
மொழிந்தருளினபடிக்கு, திருவாய் மொழிந்தருளினு
ரென்று திருமந்திர ஓலை க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு
பனையூர் நாட்டு நேர் வாயிலுடையான் தாழி திருப்பனங்
காடுடையான் வானவன்ப் பல்லவரைய னெழுதினானும்
திருமந்திர ஓலை நாயகம் அச்சுதன் இராஜராஜனை
தொண்டைமானும், ஊரன் உத்தம சோழனை இராஜ
ராஜ ப்ரஹ்மாதி ராயனும், அரையன் இராஜ ராஜனை
தொண்டைமானும், ஊரன் உத்தம சோழனை இராஜ
ப்ரஹ்மாதிராயனும் அரையன் இராஜராஜனை வீர
ராஜேந்திர ஜெயமுரி நாடாழ்வானும் வீர ராஜேந்திர
மங்கலப் பேரரையனும் இவர்களுடன் ஒப்பிட்டுப்
புகுந்த கேழ்விப்படியே நம் வரியிலிட்டுக் கொள்கவென்ன
வீரபத்திரன் தில்லைவிடங்கனை வில்லவ ராஜராஜன்
ஏவ இவன் ஏவினபடியே உடன் கூட்டத்து அதிகாரி
கள் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு
ஜயங்கொண்ட சோழ நல்லூருடையான் உதைய திவா
கரன் கூத்தாடுவானை வீர ராஜேந்திர மழவராயரும்
வீர ராஜேந்திர ப்ரஹ்மாதி ராயரும், அருமொழிதேவ
வளநாட்டு னென்மலிநாட்டு பெரிய குடையூர் அரங்கன்
திருச்சிற்றம்பல முடையானன்ன வானவன் மூவேந்த

வேளானும் அதிராதராச வளநாட்டு தேவூர்நாட்டு பனைக்குடியுடையான் காடன் வீதிவிடங்கனான ஜயங் கொண்ட சோழ விழுப்பரையரும் விசையராஜந் தருவளர் நாட்டு புலியூர் நாட்டுப் பூண்டியுடையான் அத்தாணிச் சீயாரூரன் முடிவிழுப்பரையனும் ப........இராஜேந்திர பட்டரும் இராஜராஜப் பாண்டிகுல வளநாட்டு உத்தம சோழவளநாட்டு முள்ளிநாட்டு நிகரிலி சோழநாட்டு மதிமங்கலத்து கொச்சக்காற்புறத்து விண்ணவ நாராயண பட்டனும் விடையில் அதிகாரிகள் உய்யக்கொண்டா னும் இப்படி......,கத் திருவாய்மொழிந்தருளினபடிக்கு நம் வரியிலார் வரியிலே இட்டு இறையிலி தேவதானம் திருநாமத்துக் காணியாகத் திருவாநிலை மஹாதேவற்கு அவிபெலி அற்சனா போகத்துக்குச் செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்க.

இப்படிக்கு அற்சுதன் இராஜ நாராயணன் தொண்டைமான் எழுத்து. ஊரன் உத்தம சோழனை இராஜராஜ ப்ரஹ்மாதிராயன் எழுத்து. இப்படிக்கு அரையன் வீரராஜே......ன் ஜயமுரிநாடாழ்வான் எழுத்து. இப்படிக்கு வீரராஜேந்திர மங்கலப் பேரரை யன் எழுத்து. இப்படிக்கு அதிகாரி க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவான் வீரராஜேந்திர மழவராயன் எழுத்து. இப்படிக்கு வானவன் மூவேந்த வேளான் எழுத்து. இப்படிக்கு ஜெயங்கொண்ட சோழ விழுப்பரையன் எழுத்து. இப் படிக்கு அத்தாணி......விழுப்பரையன் எழுத்து. இப் படிக்குத் திருமந்திர ஓலை எழுதும் வான்வன்ப் பல்ல

வரையன் எழுத்து. இப்படிக்கு விடையதிகாரி உய்யக் கொண்டான் எழுத்து. இது பன்மாஹேஸ்வர ரக்ஷை. இத்தன்மம் நோக்குவான் ஸ்ரீபாதம் என் தலைமேலே.

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்கு மிடம் :—** திருச்சிராப்பள்ளி ஜில்லா கரூர் பசுபதீச்சுரர் கோயிலின் தென்புறச் சுவர்.

**குறிக்கப்பெற்ற அரசன் :—** வீர ராசேந்திரன்.

**அரசனைப் பற்றிய பொதுக்குறிப்பு :—** இவன் முதலாம் இராசேந்திர சோழனது (கங்கை கொண்ட சோழனது) நான்காவது மகனாவன் கி. பி. 1063 முதல் கி. பி. 1070 வரை ஆண்டவன்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :—** கி. பி. 1067.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்

(a) **உறவினர்களுக்குச் சிறப்புச் செய்தது :—** தனக்கு முன் பிறந்த தமையனுக்கு இராச ராசனென்று பட்டங் கட்டி, முடி சூட்டினான். தனது மக்களில் கங்கை கொண்ட சோழனுக்குச் சோழ பாண்டியன் என்ற பட்டத்துடன் பாண்டிமண்டலத்தைக் கொடுத்துள்ளான். முடிச் சோழனுக்குச் சுந்தர சோழனென்று சுடர் முடி சூட்டி அந்தமில் பெருஞ் சிறப்பருளினான். தன் கிளைஞர் உலகத்தவர்க்கு அகலிடம் வேறு வேறு அருளினான்.

(b) **கூடல் சங்கமப் போர் :—** வீர ராசேந்திர சோழன் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு இரட்டபாடி நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றான். அது பொழுது தன்னை எதிர்த்த ஆகவமல்லனது இரண்டாவது மகனாகிய விக்கலனையும், அவனது சேனாதிபதியையும்

கங்கபாடிப் போர்க்களத்தினின்று துங்கபத்திரை நதிக் கரைக்குத் துரத்திவிட்டான்.

மீளவும் ஆகவமல்லன் ஒரு பெருஞ்சேனையை அனுப்பினன். வீரராசேந்திரன் அச்சேனை அழியும்படியாகத் தாக்கியதோடு அவனது சேனதிபதியாகிய சாமுண்டராயன் தலையையும் அறுத்தான். மற்றும் அவனது (சாமுண்டராயனது) ஒரு மகளாகிய, இருகையன் தேவி, நாகலை யென்னும் தோகையஞ்சாயலை முகத்தோடு மூக்கு வேறுக்கினன்.

மூன்றும் முறையாக ஆகவமல்லன், தன் மக்களாகிய விக்கலன், சிங்களன் என்பவர்களுடன் கூடல் சங்கமத்தில் எதிர்த்தான். இப்போரில் ஆகவமல்லன், விக்கலன் முதலானோர் தோல்வியுற்று ஓடினர். ஆகவமல்லனுடைய சேனதிபதிகள் பலர் உயிர் துறந்தனர்.

வீரராசேந்திரனும் சளுக்கியர்களுடைய தாரம், குலதனம், சங்கு, தொங்கல், தாரை, பேரி, மேகடம்பம், வெண்சாமரை, சூகரக்கொடி, மகரதோரணம், புஷ்பகப்பிடி, களிறுகள், குதிரைகள் அனைத்தையும் அபகரித்துக் கொண்டு தன் தலைநகர்க்குத் திரும்பினன்.

**பிற போர்கள் :**—பொத்தப்பி வேந்தனையும், சேரனையும் வென்றன். சனநாதனுடைய தம்பியின் தலையை வெட்டினன். சீவல்லபாண்டியன் மகனுகிய வீரகேசரியைத் தோற்கடித்தான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

திருவளர்—இலக்குமி வசிக்கின்ற

இருநில வலையந் தன் மணிப்பூண் எனத்தாங்கி (தங்கி)=பெரிய பூமியாகிய வட்டத்தைத் தன் இரத்தினுபரணம் எனத் தாங்கி.

பண்மணி—பலமுத்துக்களால் அலங்கரிக்கப் பெற்ற (இங்கு மணி - முத்து என்னும் பொருளுடையது)

குவலயத்து (குவலயந்து) - பூமியிலுள்ள

பெற்றதாயினும் பேணி (பெர) - பெற்ற தாயைக் காட்டிலும் பாதுகாத்து

அரைகழல் அரசர் - ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்துள்ள அரசர்

உறைபிலத்திடை (பிலந்துடை) - பாதாள உலகத்தில்

கலியது ஒதுங்க—வறுமையானது பதுங்கிக் கொள்ள

சோழ பாண்டிய னென்றுண்டுயர்—சோழ பாண்டியன் என்று ஈண்டுயர்—என்பது திருத்தமான பாடம்.

இகல் விளை—பகையை விளைக்கின்ற

மலைக்கும்—போர் செய்கின்ற

விக்கலன்—இவன் மேலைச் சளுக்கிய அரசனாகிய ஆகவமல்லனுடைய இரண்டாவது மகன். சளுக்கியர் வரலாற்றில் ஆறும் விக்கிரமாதித்தன் என்று பேசப்படுவன் இவனே யாவன். இவனை விக்கி என்றும் அழைப்பர்.

மா சாமந்தரை - பெரிய சேனாதிபதிகளை

புகத்துரந்து — புகத்துரந்தி - என்பது சரியான பாடம்

வேங்கை நாட்டிடை—வேங்கை நாட்டிலே

மீண்டு அவர் விட்ட (மிண்டவர் விட்ட) - மீண்டும் (சளுக்கியர்) அனுப்பிய

தண்டுகெட - சேனை அழியும்படி

தண்ட நாயக்கன் - சேனாதபதி

சென்றவன் சிரத்தினை—செற்று அவன் சித்திரனை - என்பது சரியான பாடம்.

இருகயத் தேவி—இருகையன் தேவி - என்பது சரியான பாடம்.

நாகலை யென்னும் தோகையம் சாயலை - நாகலை என்னும் பெயரினையுடைய அழகிய மயில்போன்ற சாயலை உடையவளை

மூன்றும் விசை - மூன்றும் தடவை

பரிபவந் தீர்வது எனக் கருதி - துன்பம் ஒழியக் கடவது என்று எண்ணி,

பொருபுனல் (பொருத புனல்) கூடல்,

சங்கமத்து - மோதுகின்ற தண்ணீரையுடைய கூடலது சங்கமத்து

கூடல் சங்கமம்—துங்கபத்திரை நதியும், கிருஷ்ணை நதியும் கூடும் இடம்

மகனாகிய - மக்களாகிய - என்பது சரியானபாடம்

சிங்களன் - இவன் ஆகவமல்லனது இரண்டாவது மகன்

எண்ணிலி சாமந்தரை - அளவற்ற சேனாதிபதிகளை

வென்று - செயித்து

அடு தூசி முன்விட்டு - கொல்லக் கூடிய முன்னணியில் செல்லும் படையை விட்டு

தன்றுணை மன்னன் தானும் - தன்றுணை மன்னரும் தானும் என்றிருக்க வேண்டும்

பின்னடுத்திருந்து - பக்கத்திருந்து

யுடல்புரிக் கோசலச் சிங்களக் கொடிப்படை - அடல்பரிக் கோசலச் சிங்களக் கொடிப்படை என்பது திருந்திய பாடம்

முன்னார்த்தூசி வெங்களிற்றுன் துணித்து - மன்னர்த் தூசி வெங்களி றொன்றொடுந் துணித்து - என்பது திருந்திய பாடம்

கேசவதண்ட நாயக்கன் - கேசவன் என்னும் பெயரை யுடைய சேனைத்தலைவன்

திண்டிறல் மாராயன்த் - திண்டிறல் மாராயன் என்றிருத்தல் வேண்டும்

திறற் போத்தயனிகல் செய்ய பொற்கோதை மூவேந்தி-திறல் போத்தரையன் இகல்செய் பொற்கோதை மூவேந்தி—என்பது திருந்திய பாடம்.

யென்ருர் தடுத்து - யென்ருர்த் தடுத்து - என்றிருக்க வேண்டும்

பிலனேக-பின் அநேக - என்பது திருத்தமான பாடம்

முதலியாகிய - சேனுபதியாகிய

மதுவணன் ஓட (மதுவணனொட)

செருக்கெழிலழிந்து சிங்களனேட - செருத்தொழி லழிந்து சிங்கணனேட - என்பது திருந்திய பாடம்

அண்ணல் முதலிகளனைவரும் அமர்போர்ப் பண்ணின (பொற் பண்ணின) பகடு இழந்து ஓட - அரசனுடைய சேனைத் தலைவர்கள் அனைவரும் போரில் செலுத்தின பகடுகளை விட்டு இறங்கி ஓட

தன்வேக வெங்களி களிற்றினை - தன்னுடைய வேக மாகச் செல்கின்ற ஆண் யானையை

வாகை கொண்டங்கவர் - வாகை கொண்டு ஆங்கவர் என்பது திருந்திய பாடம்

குலதனம் - மூலதனமும்

சங்குமுன் தொங்கலும் - சங்குந் தொங்கலும் என்பது பாடம்.

தொங்கல் - அடையாள மாலை

மேகடம்பம் (மேகடமயமும்) - மேற்கட்டி (அ) விதானம் (இச்சொற்கு இப்பொருள் பெருந்தொகை என்னும் நூலில் உள்ளது)

காக்கைக்கொடி - சூகரக்கொடி என்பது பாடபேத மாகையாலும் சளுக்கியருடைய கொடி பன்றியின் வடிவம் பொறிக்கப்பட்டது ஆதலாலும், டாக்டர் உல்ஷ் துரை அவர்களும் The Boar Banner என்று எழுதியிருப்பதாலும் - சூகரக்கொடி என்றே கொள் ளல் வேண்டும்.

சூகரம் - பன்றி
மகரதோரணம்-மீன் வடிவம் எழுதப் பெற்ற தோரணம்
புஷ்பகப் பிடி - பெண் யானையின் பெயர்
பறித்து - அபகரித்து
செய்யொளிர் - சிவந்து பிரகாசிக்கின்ற
சினப்புலி செலுத்தி - புலி இலச்சினையிட்ட சேனையைச் செலுத்தி
குசை கொளுத்தும் - பிடரி மயிர் விளங்குகின்ற
பொத்தப்பி - காளத்தியைச் சூழ்ந்துள்ள நாடு. கண்ணப்ப நாயனாரது உடுப்பூரும் இந்நாட்டில்தான் உள்ளது.
வாரணை வனைகழல் தொன்றனை, தாராசாறு தன்தம்பியை- வாரணைவன் கழல் கேரளன்றன்னை, ஜனநாதன் தன் தம்பியை - என்பது திருந்திய பாடம்
பசுந்தலை யரிந்து - இளந்தலையை வெட்டி,
சீவல்லன் மகன் சிறுவனை மின்னவில் மணிமுடி வீரகேசரியை - சீவல்ல பாண்டியன் மகன் சிறுவனாய் இருந்த மின்னலைப்போல் ஒளி விடுகின்ற இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற கிரீடத்தையுடைய வீரகேசரியை.
வரப்பாகா - எல்லையில்லாத
நிற்றம்ப - நிற்ப என்பதே சரியான பாடம்.
போர்த் தொழில் வாய்மையில் செய்த வீற்றிருந்த - போர்த் தொழிலுரிமையி லெய்தி அரசு வீற்றிருந்த - என்பது சரியான பாடம்.
வீரக்கொடி - வீரத்தை உணர்த்தும் கொடி.
தியாகக்கொடி - கொடைத்திறத்தை உணர்த்தும் கொடி.

**உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல் :—** வீரராசேந்திர சோழன், தனது ஆட்சியின் நான்காம் ஆண்டில் அதிராசராச மண்டலத்து, வெங்கால நாட்டுப் பாக்

கூரில், பயிரிடும் குடிகளிடத் துள்ள நிலங்கள் நீங்கலாக வும்; அவ்வூரார் செலுத்தும் புரவு, சிற்றாயம், எலவை, உகவை ஆகிய வரிவகைகளும், மன்றுபாடு, தண்டம், குற்றம் ஆகிய மூன்று அபராத வகைகளும் காடு பொருந்திய பகுதி, நீர்வளம் பொருந்திய பகுதி, கன்று புல் மேய்தற்குரிய இடம், பிராமணர்கள் குடியிருப்பு இடம், புலவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம் ஆகிய இவைகள் நீங்கலாகவும்; இப்பாக்கூரார் இறை கட்டின காணிக்கடன் பொன் முந்நூற்று முக்கழஞ்சரையே மஞ்சாடி அரைமாவும், நெல் மூவாயிரத்து ஐந்நூற்று முப்பத்து ஒருகலனே தூணியும் கருவூர்த்திருவானிலை மகாதேவற்கு இறையிலி தேவதானம் திருநாமத்துக் காணியாகக் கங்கைகொண்டசோழபுரத்தி லுள்ள தன் அரண்மனையி லிருந்து நீர்வார்த்துக் கொடுத்துள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

திருமஞ்சன சாலை - நீராடும் இடம்

உதகம் பண்ணியருளின் - நீர்வார்த்துக் கொடுத்த

வெள்ளான் வகையில் இறை முதல் தவிர்த்து - பயிரிடும் குடிகளிடத்துள்ள வரி செலுத்தப்படும் நிலங்கள் நீங்கலாக Encluding the tax paying land in the portion of the ryots என்பர் டாக்டர் உல்ஷ் துரை.

யாண்டு நவதுக் கெதிராவது முதல் - நான்காம் ஆண்டு முதல்

இறை – காணிக்கடன் (Revenue tax)

புரவு - காணிக்கடன் நீங்கிய ஊர்களினின்றும் வருதற்குரிய பிறவரிகள். புரவு - என்பதற்கு அரசிறை என்று பொருள் கூறுவர் புறநானூற்றின் பழைய உரைகாரர். [செய்யுள் 75]

சிற்றாயம் - சிறுவரிகள்

எலவை - வரி. இச்சொல், நாடென்ற எலவைகளும், (புதுக் கோட்டை இராச்சியக் கல்வெட்டு எண் 264) நாடென்ற வரிகளும் (புதுக்கோட்டை இராச்சியக் கல் வெட்டு எண் 253) என்று நாட்டொடு தொடர்பு படுத்திக் கூறியிருப்பதால், நாடுகாவலுக்கு உரிய வரியாகும். [பாடிகாவல் - என்பது ஊர்களைக் காப் பதற்குரிய வரியாகும்]

உகவை - வரிவகை

மன்று பாடு - மன்றுக்குக் கொடுக்கவேண்டிய அபராதம்

இறையிலி - வரியில்லாமல்

தேவதானம் - சைவ, வைணவக் கோயில்களுக்குக் கொடுக் கப்பட்ட நிலம்.

திருநாமத்துக் காணியாக - சிவபெருமானுக்குரிய நிலமாக

இறையிலி தேவதானம் திருநாமத்துக் காணியாக - இதில் இறையிலி தேவதானம் என்றால் சிவபெருமானுக்கா அல்லது திருமாலுக்கா என்ற ஐயத்தை உண்டாக்கும். அதைப் போக்கி, சிவபெருமானுக்கே உரிய நிவந்தம் என்பதை வலியுறுத்தற் பொருட்டு, திருநாமத்துக் காணியாக என்ற தொடர் கொடுக்கப்பட் டிருக் கிறது.

வரியிலிட - வரிப் புத்தகத்தில் பதிந்துகொள்ள

ஒப்பிட்டுப் புகுந்த கேள்விப்படியே - சரிபார்த்தபடி (Having unanimously approved of the document)

விடையில் அதிகாரி - இத்தொடர் விடை அதிகாரி என வும் வழங்கப் பெறும். ஊர்ச் சபைகளினின்றும் வரும் ஓலைகளைப் படித்துப் பார்த்து விடை எழுதி அனுப்புவோர்.

## பொதுக் குறிப்பு

சோழர் காலத்தில் அரசிறை ஒரு பகுதி பொன்னும், ஒரு பகுதி நெல்லுமாக வசூலிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் :—

" இவ்வூர் இறை கட்டின காணிக்கடன் பொன் முந் நூற்று முக்கழஞ்சரையே மஞ்சாடி அரை மாவும், நெல்லு மூவாயிரத்து ஐந்நூற்று முப்பத்து ஒரு கலனே தூணியும் இந்நாட்டுக் கருவூர்த் திருவானிலை மகாதேவற்கு இறுப்ப தாக "—என்னும் வீரராசேந்திர சோழனுடைய (ஆறும்) கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

கல்வெட்டுக்களில் வந்துள்ள உடன் கூட்டத்து அதி காரிகளின் பெயர்களுள் சில :—

(1) உடன் கூட்டத்து அதிகாரிகள் க்ஷத்திரிய சிகா மணி வளநாட்டு, ஜயங்கொண்ட சோழ நல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவானான வீரராசேந்திர மழவராயர்.

(2) அருமொழி தேவ வளநாட்டு நென்மலி நாட்டு பெரிய் குடையூர் அரையன் திருச்சிற்றம்பல முடை யானான வானவன் மூவேந்த வேளான்.

இக்கல்வெட்டில் வந்துள்ள காப்புரை :—

இத்தன்மம் நோக்குவான் ஸ்ரீபாதம் என் தலைமேலே.

# Inscription No. 7*

## மணிமங்கலம் சபையோர் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ திங்களேர்தரு தன்றெருங்கல் வெண் குடைக்கீழ் நிலமகணிலவ மலர் மகட் புணர்ந்து செங் கோலோச்சிக் கருங்கலி கடிந்து தன் சிறிய தாதை

*S. I. I. Vol. III part i page 53

யையுந் திருத்தமை யனையுங் குறிகொள் தன்னிளங் கோக்களையும் நெறியுணர் தன்றிருப்புதல்வர் தம்மையுந் துன்றிய தெறுசில் வானவன் வல்லவன் மீனவன் கங்கநிலங்கையற் றிறைவன் புலங்கழற் பல்லவன் கன்னகுச்சியர் காவலனெனப் பொன்னணிச் சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர் புகழாங்கவர்க் கவர் நாடருளி பாங்குறு தென்னவர் மூவருள் மாறுபரணன் பொன்முடி ஆநாப் பருமணிப் பசுந்தலை பொருகளத்தரிந்து வாரளவிய கழல் வீர கேரளனை முனைவயிற் பிடித்து தனத்தி வாரணக் கதக் களிற்றுனுதைப்பித்தருளி அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன் கொற்ற வெண்குடையுங் கற்றை வெண் கவரியும் சிங்காதனமும் வெங்களத்திழந்து தன் முடி விழத்தலை விரித்தடி தளர்ந்தோடத் தொல்லை முல்லையூர்த் துரத்தி ஒல்கலில் வேணாட்டரசை சேணாட்டொதுக்கி மேவு புகழிராமகுட மூவர் கெட முனிந்து விடல் கெழு வில்லவன் குடர் மடிக்கொண்டு தன்னாடு விட்டோடிக் காடு புக்கொளிப்ப வஞ்சியம் புதுமலர் மலைந்தாங்கெஞ்சலில் வேலைகெழு காந்தளூர்ச் சாலை கலமறுத் தா ஹவமல்லனு மஞ்ச கேவு தன்றுங் கரும்படையாலாங்கவன் சேனையிற் கண்டப் பயனுங் கங்காதரனும் வண்டமர் களிற்றொடு மடியத் திண்டிறல் விருதரை விக்கியும் விசையாதித்தனுங் கருமுரட் சாங்கமயனு முதலினர் கமரபீரு வொத்துடைய விரிசுடர்ப் பொன் னோடையங்கரிப் புரவியொடும் பிடித்து தன்னுடையிற ஜயங்கொண்டன்னூர் கொள்ளிப்பாக்கை உள்ளெரிமடுப்பித் தொருதனித் தண்டாற் பொருகடலி லங்கையார் கோமான் விக்கிரம பாஹுவின் மகுடமு முன்றனக் குடைந்து தெண்டமிழ் மண்டல முழுவது மிதந்தேழ்கட

வீழம் புக்க விலங் கேசுரநாகிய விக்கிரம பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு தன்னதாகிய கன்னக் குச்சியினு மார்கலி யீழஞ் சீரிதென்றெண்ணி உளங் கொள் தன்னாடு தன்னுறவோடும் புகுந்து விளங்கு முடிகவித்த வீரசலாமேகன் பொருகளத் தஞ்சி தன் கார்க்களிறிழந்து கவ்வையிறனடிக் காதலியோடுந் தன் றவ்வையைப் பிடித்து தாயை மூக்கரிய ஆங்கவ மானம் நீங்குதற்காக மீண்டும் வந்து விட்டொழில் புரிந்து வெங் களத்துலர்ந்த வச்சிங்களத் 'தரைசன் பொன்னணி முடியுங் கன்னரன் வழி வந்துறைகொள வீழத்தரைச நாகிய சீர்வல்லவன் மதனராஜன் மெல்லொளித் தட மணி முடியுங் கொண்டு வடபுலத்திருகாலாவதும்பொரு படை நடாத்திகண்டர் தினகரன் நாரணன் கணவதி வண்டலர் தெரியல் மதிசூதனறெனைப் பலவரையரை முனைவயிற்றுரத்தி வம்பலர் தருபொழில் கம்பிலி நகருள் சளுக்கியர் மாளிகை தகப்பித்திளகதமில் வில்லவர் மீனவர் வேழகுலர் சளுக்கியர் வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர் சிந்துரர் ஐய்யணர் சிங்களர் பங்களர் அந்திரர் முதலிய வரைசரிடு திறைகளு மாறி லொன் றவனியுள் கூறுகொள் பொருள்களு முகந்து நான் மறையவர் முகந்து கொளக் குடுத்து விஸ்வ லோகத்து விளங்க மனுநெறி நின்ற ஸ்வமேதஞ் செய் தரைசு வீற்றிருந்த ஜயங்கொண்ட சோழ னுயர்ந்த பெரும்புகழ் கொவிராஜ கேஸரி வந்மரான உடையரர் ஸ்ரீராஜாதி ராஜதேவற்கு யாண்டு உ௰௬ ஆவது ஜயங் கொண்ட சோழமண்டலத்து சேங்காட்டுக் கோட்டத்து மாகனூர்நாட்டு மணி மங்கலமான ராஜசூளாமணிச் சதுர்வ்வேதி மங்கலத்து மஹாஸபையோம். எம்மூர்

ப்ரஹ்மஸ்தானத்தே தனுநாயற்று பூர்வ்வபக்ஷத்து த்விதீயையும் புதன் கிழமையும் பெற்ற திருவோணத்தி நாள்க்கூட்டக் குறைவறக் கூடியிருந்து பணிப் பணியால் பணித்த இவ்வூர் ஸ்ரீமத் த்வராபதியான ஸ்ரீகாமக் கோடி விண்ணகர ஆழ்வார்க்கு திருவமுதுக்கும் அர்ச்சனு போகத்துக்கும் இத்தேவர் பண்டாரத்தே நூறு காசு பொலிசைக்குக் கொண்டு இக்காசு நூற்றுலும் வந்த பொலிசைக்கு இறைகரத்தூட்டாக இறையிழிச்சிக் குடுத்தநிலமாவது.

பெருநல்வதிக்கு வடக்கு, பாதிரிக் கழனி மேலைக் காலுக்கு கிழக்கு, விளைநிலங்குழி முன்னூறும், பாதிரிக் கழனி நடுவிற் காலுக்கு மேற்கு, விளைநிலங்குழி இருனூறும் பெருநல்வதிக்குத் தெற்கு, ஆலை மேட்டில் மனையறுதி வாய்க்காலுக்கு கிழக்கு, விளைநிலங்குழி நூற்றெண்பதும், ஆலை மேட்டில் நந்தவன தோட்டக் காலுக்கு மேற்கு விளைநிலங்குழி நானூறும், இக் காலுக்குக் கிழக்கு விளைநிலங்குழி இருனூறும், தெந் திரிய மரத்தின் மேலைக்காலுக்கு மேற்கு விளைநிலங் குழி முன்னூறும்,

சுண்டிலேரி வதிக்கு கிழக்கு விளைநிலங்குழி நானூறும் பாவைதுறை வாய்க்காலுக்கு வடக்கு திருவையோத்திதேவர் நிலங்குழி இருனூற்றைம்பதுக்கு கிழக்கு, தடியிரண்டினுல் குடி இருனூறும் ஆகத்தேவர் நிலங்குழி இரண்டாயிரத்திருனூறும் இறைகரத்தூட்டாக சந்திராதித்தவர் நிற்பதாக திருவமுதுக்கும் அர்ச்சநாபோகத்துக்கும் இறையிழிச்சி சிலாலேகை செய்துகுடுத்தோம்.

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம் :**—செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரந் தாலூகா, மணிமங்கலம் என்ற ஊரிலுள்ள இராசகோபாலசாமி கோயிலின் வடக்கு மேற்குச் சுவர்கள்.

**குறிக்கப் பெற்ற அரசன் :**—முதலாம் இராசாதிராசன்.

**அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு :**— இவன், முதலாம் இரசேந்திர சோழன் அல்லது கங்கை கொண்ட சோழனின் முதல் மகனுவன். இவன் கி. பி. 1042 முதல் கி. பி. 1052 வரை ஆண்டான். இவனுக்கு கி. பி. 1018-ல் கங்கை கொண்ட சோழனால் இளவரசுப் பட்டங் கட்டப் பட்டது. இவனுடைய செயல்களை இவனுக்கு இளவரசுப் பட்டங் கட்டியதிலிருந்து எண்ணவேண்டும். இவ்வேந்தன் ஆகவமல்லனோடு பொருது கொப்பத்துப் போரில் உயிர் துறந்தான்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :**—கி. பி. 1018+29=கி. பி. 1047.

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

**உறவினர்களுக்கு மகுடஞ்சூட்டி நாடு அருளியது :**— தன் சிறிய்தாதை, தமையன், தம்பிமார்கள், புதல்வர்கள் இவர்களுக்கு வானவன், வல்லவன், மீனவன், கங்கன், இலங்கையர்க்கு இறைவன், பொலங்கழல் பல்லவன், கன்னகுச்சியர் காவலன் என்னும் பட்டங்களுடன் நாடுகளையும் கொடுத்துள்ளான்.

**பாண்டியனோடு போர் :**—மானுபரணன் தலையை வெட்டினன். வீரகேரளனை முனைவயிற்பிடித்து தந்திவாரணக் களிற்றால் உதைப்பித்தருளினன். சுந்தர பாண்டியனை முல்லையூர்க்குத் துரத்தினன்.

**பிற போர்கள்** :—திருவாங்கூர் அரசனை ஊரைவிட்டுத் துரத்தினான். இராமகுடத்திலுள்ள மூன்று அரசர்களைக் கொன்றான்.

**சேரனோடு போர்** :—சேரன் தோற்று, நாட்டை விட்டுக் காட்டில் போய் ஒளிந்து கொண்டான். காந்தளூர்ச் சாலை கலமறுத்தான்.

**மேலைச் சளுக்கியப் போர்** :—ஆகவமல்லன், பெரும் படையுடன் முதலாம் இராசாதிராசனோடு பொருதான். இறுதியில் சளுக்கியர் படைத் தலைவர்களாகிய கண்டப்பய்யனும் கங்காதரனும் இறந்தனர். விக்கி, விசயாதித்தன், சாங்கமய்யன் ஆகியோர் தோற்று ஓடினர். இராசாதிராசன் அவர்களுடைய யானை, குதிரைகளைப் பிடித்துக் கொண்டு அவர்களுடைய கொள்ளிப் பாக்கை என்னும் ஊரை நெருப்பிட்டுக் கொளுத்தினான்.

**இலங்கைப் போர்** :—இராசிதிராசன் இலங்கைக்கு அரசனாகிய விக்கிரமபாஹுவின் கிரீடத்தையும் பாண்டிய நாட்டை இழந்து இலங்கைக்குப் போயிருந்த விக்கிரம பாண்டியனுடைய கிரீடத்தையும் பிடுங்கிக்கொண்டான். கன்னகுச்சிய ராச்சியத்தினின்று தன் உறவினரோடு இலங்கைக்குப் போயிருந்த வீரசலாமேகனோடு பொருதான். அவன் தோற்று ஓடிப்போனான். இராசாதிராசன் அவனுடைய மனைவி, தமக்கை இவர்களைப் பிடித்துக் கொண்டான். அவன் தாயின் மூக்கை அரிந்தான். நேரிட்ட அவமானம் தாங்கமுடியாது வீரசலா மேகன் மீளவும் பொருது உயிர் துறந்தான். கன்னரன் வழியில் வந்து இலங்கையில் வதிந்திருந்த சீவல்லவன் மதனராசனுடைய கிரீடத்தைப் பிடுங்கிக் கொண்டான்.

**மீண்டும் சளுக்கியப் போர்** :—(அ) இரண்டாவது சளுக்கியப்போர் :—இராசாதிராசன் இரண்டாவது முறையாக ஆகவமல்லன் மீது படையெடுத்துச் சென்றான். ஆகவமல்லனுடைய படையில் இருந்த கண்டர்தினகரன்,

நார்ணன், கணபதி, மதிசூதனன் என்பவர்களைத் துரத்தி விட்டு, கம்பிலி நகரில் இருந்த சளுக்கியருடைய மாளிகையை இடித்துத் தள்ளினான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

திங்கள் ஏர்தரு தன்தொங்கல் வெண்குடைக்கீழ் - சந்திரனைப் போல் அழகுபெற்ற மாலையணிந்த தன் வெண்கொற்றக் குடையின்கீழ்

நிலமகள் நிலவ - பூமிதேவி விளங்க

மலர் மகள் புணர்ந்து - இலக்குமியை உரிமை உடையவளாகக் கொண்டு

கருங்கலி கடிந்து - பெரிய வறுமையைப் போக்கி

தன் சிறிய தாயையும் - தன் சிற்றப்பனாகிய எறிவலி கங்கை கொண்ட சோழனையும்

குறிக்கொள் தன் இளங்கோக்களையும் - தன் மதிப்புக்கு உரியவர்களாய் இருந்த தம்பிமார்களையும்

துன்று எழில் (துன்றிய தெறுசில்) - நெருங்கிய அழகுடைய

பொலங்கழல் (புலங்கழல்) - பொன்னால் செய்யப் பெற்ற வீரக்கழல் அணிந்த

காவலனென (காவநனென) - தலைவன் என்று

பலர்புகழ் - விரிந்த புகழுடைய

பாங்குறு தென்னவர் மூவருள் - பக்கத்திலுள்ள பாண்டியர் மூவருள்

வார் அளவிய கழல் - வாரால் இறுக்கப்பட்ட வீரகண்டாமணியையுடைய

தந்தி வாரணம் (தனத்தி வாரணம்) - யானையின் பெயர்.

வெங்களம் - போர்க்களம்

ஒல்கலில் - சுருங்குதல் இல்லா

வேணாட்டரசு - திருவாங்கூர் அரசனை

இராமகுடம் - எலிமலைக்குப் பக்கத்தி லிருந்த ஒரு சிறு இராச்சியம்

அடல்கெழு (விடல்கெழு) - வலிமை பொருந்திய

வில்லவன் - சேரன்

வஞ்சியம் புதுமலர் மலைந்து - வஞ்சி மாலை சூடி.

வேலை கெழு காந்தளூர்ச்சாலை - கடற்கரைக்கு அருகி லுள்ள காந்தளூர்ச் சாலை

மஞ்சகேவு, கண்டப்பய்யன், கங்காதரன் - இவர்கள் ஆகவமல்லனுடைய படைத்தலைவர்கள்.

வண்டமர் களிற்றொடு - (மதம் ஒழுகும் இடங்களில்) வண்டுகள் மொய்த்திருக்கும் ஆண் யானைகளோடு

விசையாதித்தன், சாங்கமய்யன் - படைத்தலைவர்கள். இவர்கள் ஆகவமல்லனுடைய மகனுகிய விக்கியோடு போர்புரிய வந்தவர்கள்.

சமரபீரு வொத்துடைய - போரில் புறங்காட்டி ஓட Retreated like cowards என்பர் டாக்டர் உல்ஷ்

ஓடை - யானையின் நெற்றிப்பட்டம்

முன் தனக்குடைந்து - முன்னே தனக்குத் தோற்று

தென் றமிழ் மண்டலம் - பாண்டி நாடு

எழுகடல் ஈழம் புக்க - அலைகள் எழும்புகின்ற கடலால் சூழ்ந்த இலங்கையில் புகுந்திருந்த

காண்டகு தன்னதாகிய கன்னகுச்சியினும் - அழகு வாய்ந்த தன்னுடைய கன்னகுச்சி இராச்சியத்தைக் காட்டிலும்

தன்னுடு தன் உறவோடும் புகுந்து - தன்னுட்டிலுள்ள உறவினர்களுடனும் புகுந்து

கவ்வையுற்றேட (கவ்வையிறனடி) - துன்புற்று ஓட

தவ்வை - தமக்கை

வெங்களத்துளந்த (வெங்களத்துலர்ந்த) - கொடிய போர்க்களத்து இறந்த.

வடபுலத்து இருகாலாவதும் - வடதிசையில் இரண்டா முறையும்
வம்பலர் - புதிய மலர்களை
கம்பிலி - பல்லாரி சில்லாவில் உள்ள நகரம்
தகர்ப்பித்து - இடித்து
இளக்கமில் (இளகதமில்) - கீழ்ப்படியாத
வில்லவர் - சேரர்
மீனவர் - பாண்டியர்
வேள்குலர் (வேழ்குலர்) - சிற்றரசர்கள்.
கௌசலர் - கோசல தேசத்தரசர்
கொங்கணர் - கன்னர தேசத்தரசர்
சிந்துரர் - சிந்து நாட்டரசர்
பங்களர் - பங்காள தேசத்தரசர்
அந்திரர் - ஆந்திரர்
அவனியுள் - இராச்சியத்தில்
முகந்து - பெற்று
நான் மறையவர் - பார்ப்பனர்
விஸ்வலோகத்து - எல்லா உலகத்தும்
ஜெயங்கொண்ட சோழன் - முதலாம் இராசாதிராசனின் வேறுபெயர்

**உரை நடைப் பகுதியால் அறியப்படும் அறச் செயல்** :—செங்காட்டுக் கோட்டத்து, மாகணூர் நாட்டு மணிமங்கலமான இராசசூளாமணிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், அவ்வூர்க் காமகோடி விண்ணகர ஆழ்வார் பண்டாரத்திலிருந்து நூறு காசை வட்டிக்குக் கொண்டு, அக்காசு நூற்றுலும் வந்த வட்டிக்கு இறைகரத்தூட்டாக இரண்டாயிரத்து இருநூறு குழி நிலத்தைக் கொடுத்துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

பிர்மஸ்தானம் - பஞ்சாயத்துக் கூடும் இடம்

தனு நாயிறு - மார்கழி மாதம். (ஞாயிறு மாதம் என்ற பொருளில் இருக்கிறது)

த்விதீயை - இரண்டாம் திதி

துவராபதி - துவாரகைக்குத் தலைவராகிய

கூட்டங் குறைவறக் கூடியிருந்தது - என்பது திருந்திய பாடம்.

ஸ்ரீ காம - கோடி விண்ணகர ஆழ்வார் :— மணிமங்கலமான இராச சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலின் பெயர். இக்காலம் இத்தேவரின் பெயர் இராசகோபாலப் பெருமாள் என்று வழங்கப் பெறுகின்றது.

அர்ச்சனா போகத்துக்கு - அர்ச்சனைக்கு

பொலிசைக்கு - வட்டிக்கு

இறை கரத்தூட்டாக - வரியைக் கையில் கொடுத்து விடுவதாக

இறை இழுச்சி - வரி இல்லாமல்

மேலைக்கால் - மேலை வாய்க்கால்

தடி - (இக்காலம் தளை என்று வழங்கப் பெறுகின்றது) வயல்

சிலா லேகை செய்து கொடுத்தோம் - கல்வெட்டிக்கொடுத்தோம்

N.P.—கூட்டிப் பார்த்தால் 2,180 குழிகள் வருகின்றன. ஆனால் கல்வெட்டில் இரண்டாயிரத்து இருநூறு குழிகள் என்று குறிக்கப்பெற்றுளது. ஒரு முழு எண்ணாக இருக்க வேண்டி (Perhaps 20 kuli were added for rounding) இவ்வாறு கூறப்பெற்றது என்று டாக்டர் உல்ஷ் சமாதானம் கூறுகின்றனர்.

## பொதுக் குறிப்பு

இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற முதலாம் இராசாதிராசன் மனுநெறி நின்று அஸ்வமேதஞ் செய்தவன் என்று பேசப்படுகின்ருன். செயங்கொண்ட சோழன் என்பது இவனுடைய வேறு பெயர் என்று இக்கல்வெட்டு அறிவிக்கிறது. இவனுக்கு வில்லவர், மீனவர், வேள்குலர், சளுக்கியர், வல்லவர், கௌசலர், வங்கணர், கொங்கணர், சிந்துரர், ஐயணர், சிங்களர், பங்களர், ஆந்திரர் முதலிய அரசர்கள் திறை செலுத்தி வந்தனர்.

---

சோழமன்னர் ஆறிலொரு கடமை வாங்கி வந்தனர் என்பதற்குக் கல்வெட்டு ஆதாரம் :—

'ஆறிலொன்று அவனியுள் கூறுகொள் பொருள் களுமுகந்து'—என்னும் முதலாம் இராசாதிராசனின் மெய்க்கீர்த்திப் பகுதியே ஆதாரமாகும்.

---

## Inscription No. 8*

### மணிமங்கலம் சபையோர் சாஸனம்

ஸ்வஸ்திஸ்ரீ புகழ் மாது விளங்கச் சயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி, மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னவ ரிரிதரிற் சுழிதரத் திக்கனைத்துந் தன் சக்கரநடாத்தி விஜயாபிஷேகம் பண்ணி வீரஸிம் ஹாஸநத்து உலகுடையாளொடு மன்னி வீற்றிருந் தருளிய கோவிராஜ கேஸரி பந்மரான திரிபுவன சக்

* S. I. I. Vol iii Part i Page 71

கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு சய௮-வது குலோத்துங்க சோழவள நாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான பாண்டியனை இருமடி வென் கொண்ட சோழ சதுர்ப்பேதிமங்கலத்து மஹாஸபையோம் எழுத்து. நம்மூர் வண்டுவராவதி எம்பெருமான் கோயிலில் ஸ்ரீகாரியஞ் செய்கிற அள்ளூர்க் கேசவ பட்டனும், அரணை புறத்து திருவாய்க்குல பித்தனுங் கண்டு யாண்டு சய௮-வது கும்பநாயற்றுப் பூர்வ பக்ஷத்து த்விதீயையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சதையத்து நாள் இவ்வாண்டு முதல் அமாவாஸி சந்திராதித்தவரை எழுந்தருளுகைக்கு ராஜேந்திர சோழவள நாட்டு அம்பத்தூர் நாட்டு நுளப்பியாற்று நுளப்பியாறு கிழான் வேளான் பேராயிர முடையாநாந தண்டக நாடுடையாங் குண்டூர் தோணயக்கிரமவித்தன் பக்கல் ஆலைமேட்டில் விலைகொண்டுடைய குழி நூற்றிருபத்தஞ்சும், இங்மே மத்தியஸ்தன் உறப் போந்தானும் தம்பிமாரும் பக்கல் விலைகொண்டுடையகுழி நூற்றெருபத்தஞ்சும் இராயூர் திருப்பொரிக்கிரமவித்தங் பக்கல் பாதிரிக் கழநி மேலைக் காலுக்குக் கிழக்கு, விலைகொண்டுடைய குழி நூற்றிருபத்து மூன்றும் இங்கே இராயூர் விஷ்ணு திருவேங்கட கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றெருபத்தேழும், இங்கே ஜயக்கி வண்டுவராதிபதி பிச்சர் பக்கல் விலை கெண்டுடைய குழி நூற்றெருபதும், இங்கே இராயூர் யஞ்ஞ நாராயணக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குறி நூற்றிருபத்தேழும் ஆலவதிக்கு வடக்கு இரண்டாற் கண்ணாற்று வீரவலி திருவரங்க முடையான் ஸஹஸ்ரன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றிருபதும், இங்கெய் மூன்ருங் கண்ணாற்றில் இராயூரான்

ணந்திக் கிரமவித்தன் பக்கல் வடக்கடைய கொண்டுடைய குழி நூற்றெட்டும், அரிவாள்வதிக்குக் கிழக்கு முதற் கண்ணுற்று......... காராம்பிச் செட்டு நாணமாலைக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றொரு பத்தஞ்சும் ஆக குழி ஆயிரத்தைம்பதும் அமாவாஸிப் புறம் சந்திராதித்தவற் செல்வதாக இறை விழுத்துகைக்குக் கிரயமாக இவர் பக்கல் ஸபையோமாக வேண்டும் பொன் கொண்டு இன்நிலத்துக்கு வந்த இறை ஸபையோமே இறுக்கக் கடவோமாக இசைந்து இறை இழிச்சிக் குடுத்தோம். இப்படிக் கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிச் சந்திராதித்தவற் செல்வதாக இறை இழிச்சிக்குடுத்தோம் மஹாஸபையோம். ஸபையுள் நின்று ஐயக்கி வண்டுவராபதி பிச்சர் பணிக்க பணியால் எழுதிநேந், இவ்வூர் மத்தியஸ்தந் மணிமங்கலமுடையாந் வேளான் பெரான் [இவை என் ? ] எழுத்து.

### விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்:**—செங்கற்பட்டுச் சில்லா காஞ்சிபுரந் தாலூகா மணிமங்கலம் இராசகோபாலசாமி கோயிலின் மண்டபத்தின் மேலைச்சுவர்.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :**—முதற்குலோத்துங்க சோழன்.

**அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு :**—இவன் அதிராசேந்திரனுக்குப் பிறகு சோழ மண்டலத்தின் ஆட்சியை எய்தியவன். கி. பி. 1070 முதல் கி. பி. 1120 முடிய ஆண்டான். இவன் இராசகேசரி என்னும் பட்டம் பெற்றவன். திரிபுவனச் சக்கரவர்த்தி என்று பட்டம் பூண்ட சோழ மன்னருள் இவனே முதல்வனுவன்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :**—கி. பி. 1118.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் வீரச் செயல்

மீனவர் நிலைகெடவும், வில்லவர் குலைதரவும், ஏனைய மன்னவர் இரியலுற்று இழிதரவும் செய்தனன்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

சயமாது - வெற்றித்திரு
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி - உரிமையால் தன் கிரீடத்தை அணிந்து
வில்லவர் குலைதர - சேரர் நிலை குலைந்து ஓட
ஏனை மன்னவரிரிதரிற் சுழிதர - இத்தொடர் ஏனைய மன்னவர் இரியலுற்று இழிதர - என்றிருக்கவேண்டும்
இரியலுற்று - ஓடலுற்று.
சக்கரநடாத்தி - ஆணையாகிய சக்கரத்தைச் செலுத்தி.
விஜயாபிஷேகம் - வெற்றி முழுக்கு
திரிபுவனச் சக்கரவத்தி - சேர நாடு, சோழ நாடு, பாண்டியநாடு ஆகிய மூன்றுக்கும் சக்கரவர்த்தி.

**உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல்** :—வண்துவராபதிப் பெருமாள் கோயிலில் ஸ்ரீகாரியஞ் செய்கிற அள்ளூர்க் கேசவப்பட்டனும், அரணைபுரத்துத் திருவாய்க் குலப் பித்தனும், வண்துவராபதிப் பெருமானை அமாவாசை தோறும் சந்திர சூரியர் உள்ளவரை எழுந்தருளப் பண்ணுவதற்காக, இராசேந்திர சோழ வளநாட்டு அம்பத்தூர் நாட்டு நுளப்பியாற்று நுளப்பியாறுகிழான் வேளான் பேராயிரமுடையானான தண்டக நாடுடையான் குண்டூர் தோள்நயக்கிரமவித்தன் முதலானோரிடத்தில் ஆயிரத்து ஐம்பது குழியை விலைக்கு வாங்கி, மணிமங்கலமான பாண்டியனை இருமடி வென்கொண்ட சோழசதுர்ப்பேதி மங்கலத்து மகாசபையாரிடம் அந்நிலத்தைக் கொடுத்ததோடு, அந்நிலத்துக்கு அரசாங்கவரி செலுத்துவதற்குக் கிரயமாக வேண்டும் பொன்னையும் அச்சபையாரிடம் கொடுத்துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

**குலோத்துங்கசோழ வளநாடு** :—முதலாம் இராசாதிராசன் காலத்தில் செங்காட்டுக் கோட்டத்து, மாகணூர் நாட்டு மணிமங்கலமான ராஜசூளாமணிச் சதுர்வேதி மங்கலமானது, முதற் குலோத்துங்கன் காலத்தில், குலோத்துங்க சோழவளநாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான பான்டியனை இருமடி வெங்கொண்ட சோழ சதுர்ப்பேதி மங்கலம் என்னும் பெயர் எய்திற்று. இதனால் செங்காட்டுக் கோட்டமானது, குலோத்துங்க சோழவளநாடு என்னும் பெயரை முதற் குலோத்துங்கன் காலத்தில் எய்திற்று என்று பெறப்படுகிறது.

இருமடி வெங்கண்ட : இருமுறை புறங்காட்டி ஓடச்செய்த

ஸ்ரீகாரியஞ் செய்கிற - கோயில் காரியம் பார்க்கிற

அள்ளூர்க் கேசவப்பட்டனும் அரணைபுரத்துத் திருவாய்க்குலப்பித்தனும் கண்டு - (வண்துவராபதிப் பெருமாள் அமாவாசைதோறும் எழுந்தருளப் பண்ணாமல் இருப்பதை) இவர்கள் இருவரும் பார்த்து

கும்நாயற்று - மாசி மாதத்து

த்விதீயை - இரண்டாம் திதி

அமாவாசி சந்திராத்தித்தவரை - அமாவாசைதோறும் சந்திரசூரியர் உள்ளவரை.

மத்தியஸ்தன் - கணக்கப்பிள்ளை

விலைகொண் டுடைய - விலைக்கு வாங்கின

ஐயக்கி வண்டுவராபதிபிச்சர் - இதில் ஐயக்கி என்பதை இயக்கி என்று திருத்திக்கொள்ளுதல் வேண்டும்

பிச்சர் - ஈடுபாடு உடையவர். மாணிக்கவாசகரும் " உன் கோயில் வாயிலிற் பிச்சனாக்கினாய் " என்றார்.

காராம்பிச் செட்டு - வைணவர்களுக்குரிய குடிப்பெயர்

இறை இழித்துகைக்கு - வரி செலுத்துவதற்கு

இறை இழிச்சி - அரசாங்கவரி நீக்கி

பேரான் - பேராயிரமுடையான்.

## Inscription No. 9*

### சிறுபழூவூர்ச் சபையோர் நில விக்கிரய பத்திரம்

ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்ந்த புணரி அகழ் சூழ்ந்த புவியில் பொங்கேமியளவும் தங்கேமி நடப்ப விளங்கு ஜெயமகளை இளங்கோப் பருவத்துச் சக்கரகோட்டத்து விக்கிரமத் தொழிலால் புது மணம் புணர்ந்து மதவரை யீட்டம் வயிராகரத்து வாரி அயிநுளைக் கொந்தள வரைசர் தந்தளமிரிய வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப் போர்ப்பரி நடாத்தி கீர்த்தியை நிறுத்தி வட திசை வாகைசூடி தெந்திசை தேமருகமலப் பூமகள் பொதுமையும் பொங்கியாடையும் நங்னில பாவை தநிமையும் தவிர வந்து புநிதத் திருமணிமகுடம் உரிமை யிற் சூடி தன்னடி இரண்டும் தட முடியாகத் தொங்கில வேந்தர் சூட முன்னை மனுவாறு பெருக கலியாறு வறுப்ப செங்கோல் திசைதொறும் செல்ல வெண்குடை இருநில விளாகம் மெங்கணுங் தனது திருநிழல் வெண் குடை வெண்ணிலாத் திகழ ஒருதநி மேருவிற் புலி விளை யாட வார்கடல் தீவாந்தரத்து பூபாலர் திறைவிடுத்த கலஞ்சொரி களிறு முறை முறை நிற்ப விலங்கிய தெந்னவந் கருந்தலை பருந்தலைத்திட தந் பொன்னகர்ப் புறத்திடைக்கிடப்ப இஞ்ஞாள் பிற்குலப்பிறைபோல் நிற்ப்பிழையென்னும் சொல்லெதிர்க் கோடிற்றல்லது தங்கை வில்லெதிர் கோடா விக்கலந் கல்லதர் நங்கிலி துடங்கி மணலூர் நடுவிந் துங்கபத்திரை யளவுற்று

*S. I. I. Vol. III part II page 152.

எங்கணும் பட்ட வெங்களிறும் விட்ட தம்மான முங் கூறிய வீரமுங்கிடப்ப ஏறிந மலைகளும் முதுகு வெளிப்ப இழிந்த நதிகளும் சுழந்றுடைந்தோட விழுந்த கடல் களும் தலைவிரித்தலமர, குடதிசைத் தந்நாளுகந்து தாநும் தாரையும் பந்நாளீட்டமும் பல பல முதுகும் பயந்தெதிர் மாறிய ஐயப்பெருந் திருவும் வாளாரொண் கண் மடந்தையரீட்டமும், மீளாது குடுத்த வெங்கரி நிரையும் கங்கமண்டலமும் சிங்கணமெந்நும் பாணி இரண்டும் ஒருவிசைக் கைக்கொண்டு இனைவியப் புகழொடும் பாண்டி மண்டலங்கொள்ள திருவுளத் தடைத்தருளி வெள்ளவரு பரிதரங்கமும் பொருகரிக் கலங்களும் பொல் தந்திரவாரியும் முடைத்தாயி வந்து வடகடல் தெந்கடல் படர்வதுபோல் தந்பெருஞ் சேனையை ஏவி பஞ்சவரை வரும் பொருத போர்களத் தஞ்சி வெருவி நெளித்தோடி அரணைநப் புக்க காடறத் துடைத்து நாட்டடிப்படுத்து மற்றவர் தம்மை வநசரர் திரியும் பொச்சை வெஞ்சுரமேற்றி கொற்ற விசைய ஸ்தம்பம் திசைதொறும் நிறுத்தி முத்திந் சிலாபமும் முத்தமிழ் பொதியிலும் மத்தவெங்கரி படுமையச் சையமும் கந்நியும் கைக்கொண்டருளி தெந்நாட் டெல்லை காட்டி குடமலை நாட்டுள்ள சாவேறெல்லாந் தநிவிசும்பேற மாவேறிய தந்வருதினித் தலைவரை குறு கலர் குலைய கோட்டாறுளப்பட நெறிதொறும் நிலைக ளிட்டருளி திறள்கொள் வீரஸிம் ஹாஸநம் திரியவிட் டருளி பொங்கொளியாரமுந்திருப்புயத் தலங்கலும் பொல் வீரமும் தியாகமும் விளங்க பார்மிசை மேவலர் வணங்க வீரஸிம்ஹாஸநத்து அவநி முழுதுடையா ளொடும் வீற்றிருந்தருளிய கொ ராஜகெசரி வந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ கொலொத்துங்க சோழ

தேவர்க்கு யாண்டு இருபதாவது உத்தொங்க தொங்க வளநாட்டுக் குந்றக் கூற்றத்து ப்ர்ஹ்மதேயம் சிறுபழூவூர் ஸபையோம். விருதராஜபயங்கார வாணகோவரையர் தங்களாச்சி சோழகுலசுந்தரர் விச்சாதிரியாழ்வார்க்கு ஸபை விலையாக விற்றுக் குடுத்த நிலமாவது, ராஜேந்திர சோழ வாய்க்காலுக்கு வடக்கு பவித்திர மாணிக்கவதிக்குக் கிழக்கு முதல் கண்ணாற்று இரண்டாம் சதுரத்து நிலம் நாலுமாவில் வடக்கடைய் நிலம் ஒரு மாவில் கீழ்க் கடைய் நிலம் அரைமாவும் இவ்வதிக்குக் கிழக்கு, இவ் வாய்க்காலுக்கு வடக்கு இரண்டங் கண்ணாற்று இரண்டாஞ்சதிரம் நிலம் நாலுமாவில் வடக்கடைய் நிலம் ஒருமாவில் மேற்க்கடைய் நிலம் அரைமாவும், ஆக நிலம் ஒரு மா. இந்நிலம் ஒரு மாவும் இருவருக்கு விற்றுக் கொள்வதாக எம்மிலிசைஞ்ச விலைப்பொருள் அந்றூடு னல்க் காசு ஒந்று. இக்காசு ஒந்றும் ஆவணக்களி யேகைச் செல்லறக் கொண்டு விற்று விலையாவணம் செய்து குடுத்தோம் ப்ரஹ்மதேயம் சிறுபழூவூர் ஸபை யோம். இந்நிலம் ஒரு மாவுக்கும் இதுவே விலையோலை ஆவதாகவும் இதுவே பொருள் மாவறுதிப் பொருள் சிலவோலை காட்டக்கடவர் அல்லாதா ராகவும். இப்படி இசைஞ்சு இக்காசு ஒந்றும் கொண்டு இந்நிலம் ஒருமா வும் விலைக்கறவிற்று பொருளறக் கொண்டோம். சிறு பழூவூர் ஸபையோம். இவர்கள் பணிக்க இப்பிரமா ணம் எழுதிநேந், மத்தியஸ்தந் பழூவூருடையாந் ஆயிரத் திருநூற்றுவந் முடி கொண்டாநேந். இவை எந்நெழுத்து. இப்படிக்கு சாந்த மங்கலத்து பாலாசிரியர் இலக்குவ ணன் கூத்தப்பநேந். இவை எந்நெழுத்து. இப்படிக்கு பழூவூர் சவாந்தி நாராணநேந் இவை எந்நெழுத்து. இது சாந்தி பாலாசிரியர் வீரநாராயணநது இது சாவாந்தி

நாராயணந் மாறந் யிப்படி அறிவேந் இவ்வூர் வீராசோழ விண்ணகராழ்வார் கோயில் திருவாராதனை பண்ணும் நாராயணந் திருவாயிக் குழமுடையானேந். இப்படி அறி வேந் இவ்வூர் கருமாந். இது பந் மாஹேஸ்வர ரக்ஷை.

## விளக்க உரை

கல்வெட்டு இருக்குமிடம் :—திருச்சிராப்பள்ளிச் சில்லா, கீழ்ப்பழுவூர் வடமூலேசர் கோயிலின் இரண்டாம் பிரா காரத்து மேற்குப்புறச் சுவர்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :—முதற் குலோத் துங்கன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :—கி. பி. 1090.

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் வீரச் செயல்

1. இளவரசுப்பட்டங்கட்டி வடக்கே திக்கு விசயம் செய்தது :— இளவரசனாய் இருந்தபொழுது சக்கரகோட்டத்திற்குச் சென்று அங்கு ஆண்டுவந்த அரசனைத் தோற்கடித்தான். வயிராகரத்தில் எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றிக் கொண்டான். பின் சளுக்கிய அரசரது சேனையைப் புறங்காட்டி ஓடச்செய்தான்.

2. சோழமண்டலத்தின் ஆட்சியைப் பெற்றது :—காவிரியை ஆடையாக அணிந்துள்ள சோழமண்டலமாகிய பெண், தனக்குத் தலைவனில்லாமல் தனிமையாய் இருப்பதை அறிந்து உடன் வந்து புனிதத் திருமணிமகுடத்தை உரிமை யினால் சூடிக்கொண்டு, முன்னை மனுவாறு பெருக, கலியாறு வறப்ப, செங்கோல் திசை தொறும் செல்ல, இருநில வளாகம் எங்கணும் தனது திருநிழல் வெண்ணி

லாத் திகழ, ஒரு தனி மேருவில் புலி விளையாட, வார்கடல் தீவாந்தரத்துப் பூபாலர் திறை விடுத்த களிறு முறை முறை நிற்க, ஆண்டுவந்தான்.

3. **பாண்டியனோடு போர்** :—தன்னோடு மாறுபட்ட பாண்டியனுடைய பெரிய தலையைப் பருந்து அலைத்திடச் செய்தான்.

4. **மேலைச் சளுக்கியப் போர்** :—குலோத்துங்கன் விக்கிர மாதித்தனோடு நங்கிலி என்னும் இடத்தில் பொருதான். இப்போரில் விக்கிரமாதித்தன்தோற்று ஓடினான். அவனைக் குலோத்துங்கன் துங்கபத்திரையாற்றுக்கு அப்பாலும் துரத்திச் சென்றான். அவ்வாறு சென்றவன், விக்கிர மாதித்தனை மணலூர் என்னும் ஊரில் மீளவும் தோற் கடித்தான். இப்போரில் மேலைச் சளுக்கியருடைய களிறு கள் பலவற்றைக் குலோத்துங்கன் கவர்ந்து கொண்டான்.

5. **கங்கப் போர்** :—கங்கமண்டலத்தையும் சிங்கணம் என்னும் தேசத்தையும் கைக்கொண்டான்.

6. **பாண்டியனோடு இரண்டாவது போர்** :—குலோத்துங்கன் பெருஞ்சேனையோடு பாண்டியர்கள்மீது படை யெடுத்துச் சென்றான். இக்காலம் பாண்டியர்கள் ஐந்து பிரிவினர்க ளாய் இருந்தார்கள். அவர்கள் ஐவரும் ஒன்று கூடி, குலோத்துங்கனை எதிர்த்தனர். இப்போரில் பாண்டியர் ஐவரும் புறங்காட்டி ஓடி ஒளித்தனர். முத்துக் குளித்தற் குரிய மன்னார்குடாக்கடலைச் சார்ந்த நாடும், யானைகள் இருக்கின்ற மேற்குத் தொடாச்சி மலையும், கன்னியா குமரிப் பகுதியையும் கைக்கொண்டான்.

7. **சேரருடன் நடத்திய போர்** :—சேரனுக்கும் குலோத் துங்கனுக்கும் கோட்டாற்றில் பெரும் போர் நிகழ்ந்தது. மலை நாட்டார் பலர் இறந்தனர். குலோத்துங்கன் கோட் டாற்றில் சிறந்த தலைவர்களின்கீழ் நிலைப்படைகள் நிறுவி னான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

புணரி அகழ் சூழ்ந்த புவியில் - கடலாகிய அகழ் சூழ்ந்த பூமியில்

பொங்நேமியளவும் தன்நேமி நடப்ப - மகாமேருமலைவரைக்கும் தன் ஆணையாகிய சக்கரம் நடக்க.

இளங்கோப்பருவத்து - அரசகுமாரனாய் இருந்த காலத்து

சக்கர கோட்டம் - மத்திய மாகாணத்திலுள்ள Baster State.

விக்கிரமத்தொழிலால் - பாராக்கிரமமான செய்கையால்

மதவரை ஈட்டம் - மதத்தையுடைய யானைக் கூட்டம்

வயிராகரம் - இது மத்திய மாகாணத்தில் உள்ளதொரு ஊர்

வாரி - மிகுதியாகப்பிடித்து

அயிர் முனை (அயிநுரை) - போர் முனையில்

கொந்தள அரசர் - சளுக்கிய அரசர்

தந்தளமிரிய - தங்களுடைய சேனை புறங்காட்டி ஓட

வாளுறைகழித்து - வாளை உறையிலிருந்து எடுத்து

வடதிசை வாகை சூடி - வடக்குத் திக்கில் வெற்றி மாலையைச் சூடி

தேமருகமலப் பூமகள் - இலக்குமி

பொதுமையும் (தவிர) - எல்லார்க்கும் பொது என்பது நீங்கவும்

பொங்கி ஆடை நங்கிலப் பாவை தனிமையும் தவிர - காவிரியை ஆடையாக அணிந்துள்ள சோழமண்டலமாகிய பெண் தனக்குத் தலைவன் இல்லாமல் தனிமையாக இருப்பது நீங்கவும்.

பொங்கியாடையும் நங்னிலபாவை தனிமையும் தவிரவந்து - பொன்னியாடை நன்னிலப்பாவையின் தனிமையும் தவிரவந்து—என்று திருத்திக் கொள்ளல் வேண்டும்

முன்னை மனுவாறு பெருக - முன் இருந்தபடி சன்மார்க்க நெறி தழைக்க

கலியாறு வறப்ப - (கலியாறு வறுப்ப) வறுமை நீங்க
இருநிலவளாகம் (இரு நிலவிளாகம்) - பெரிய பூமியாகிய இடம்
வெண்ணிலாத்திகழ - வெண்மையான ஒளி வீச
ஒரு தனி - ஒப்பற்ற
மேருவில் புலி விளையாட - மேருமலையில் புலிக்கொடி பறக்க
தீவாந்தரத்துப் பூபாலர் - பல தீவுகளிலுள்ள அரசர்
கலஞ்சொரி களிறு - கப்பலிலிருந்து கொண்டுவரப்பட்ட களிறுகள்
முறை முறை நிற்ப - அணி அணியாக நிற்க
விலங்கிய தென்னவன் கருந்தலை - (அவ்வாறு கப்பம் கட்ட) மாறுபட்ட பாண்டியனது பெரிய தலை
தன் பொன்னகர் - தனது அழகிய நகரமாகிய கங்கை கொண்ட சோழபுரம்
இந்நாள் (இஞ்ஞாள்)
பிற்குலப்பிறைபோல - தேய்பிறைச் சந்திரனைப்போல
நின் பிழையென்னுஞ் சொல்லெதிர் கோடிற்றல்லது - உன் பிழைதான் என்கின்ற சொல்லானது எதிரே வளைந்த தல்லாது (யுத்தத்தில் ஜெயிக்கமுடியவில்லை என்பது பொருள்)
வில் எதிர்க்கோடா - வில் வளையாத
கல்லதர் - மலை வழியை உடைய
நங்கிலி - கோலார் ஜில்லாவில் உள்ளதொரு ஊர்
எங்கணும் பட்ட - எவ்விடத்திலும் இறந்துபோன
குடதிசைத் தன் நாள் உகந்து - தன் பிறந்த நட்சத்திரமாகிய பூச நாள் விழாவைச் சேர நாட்டில் நடாத்தி (எனவே குலோத்துங்கன் பிறந்த நட்சத்திரம் பூசமாகும்)
கங்கமண்டலம் - இது மைசூர் நாட்டின் கீழ்ப்பகுதி.

சிங்கணம் - இது கங்கமண்டலத்திற்கு அருகில் உள்ள தாதல் வேண்டும்

பாணி - தேசம்

ஒருவிசை - ஒரு முறை

இனேவியப்புகழொடு - என்பதற்குப் பதிலாக ஈண்டிய புக ழொடு என்பதே திருந்திய பாடம்.

வெள்ளம் வருபரிதரங்மும் - வெள்ளம் போல் வருகின்ற குதிரைப்படையும்

தந்திரவாரியும் உடைத்தாய் - சேனைசமுத்திரமும் உடைய தாய்

வடகடல் தென்கடல் படர்வது போல் - வடக்கிலுள்ள கடல் தென்கடலைத் தேடிச் செல்வதுபோல்

சேனையை ஏவி - சேனையை அனுப்பி

பஞ்சவர் ஐவரும் - பாண்டியர்கள் ஐவரும் முதற் குலோத் துங்கன் காலத்தில் பாண்டியர் ஐந்து பிரிவினராய் இருந்தனர். 13 ஆம் நூற்றுண்டில் இந்தியாவிற்கு வந்த இத்தாலி தேசத்தவராகிய **மார்கோபோலோ** (Morcopolo) என்பாரும் பாண்டியர் ஐவர் என்று குறித்திருக்கின்றனர்.

வெருவி நெளித்தோடி - பயந்து முதுகு காட்டி ஓடி

அரணெனப்புக்க காடறத்துடைத்து - அவர்கள் அரண் என்று புகுந்திருந்த காட்டை அழித்து

நாட்டடிப்படுத்து - நாடடிப்படுத்து என்பது திருந்திய பாடம்.

மற்றவர் தம்மை - அப்பாண்டியர்களை

வனசரர் - வேடர்

பொச்சை - பொத்தை என்பது பொச்சை என்று வந்திருக் கிறது. " தகரத்துக்குச் சகரம் போலி. பொறையைப் பொத்தை என்பாரு முளர்; ஆவது மட்சிறுமலை " என்பர் அடியார்க்கு நல்லார்.

"பொறை - பொத்தமலை ; சிறுமலை" என்பர் அரும்பத உரைகாரர்

வெஞ்சுரமேற்றி - கொடிய காட்டிற்குத் துரத்தி

விசையஸ்தம்பம் - வெற்றித்தூண்

முத்தின்சிலாபமும் - இத்தொடர் முத்தின் சலாபமும் - என்றிருக்க வேண்டும். முத்துக்குளிக்கும் இடம் என்பது இதன் பொருள்

கரிபடுமையச்சையமும் - யானைகள் இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலையும்

கன்னியும் - கன்னியாகுமரிப் பகுதியும்

குடமலைநாட்டுள்ள - கடன்மலைநாட்டுள்ள - என்பது திருந்திய பாடம்.

சாவேறெல்லாம் தனி விசும் பேற - வீரர்கள் எல்லாம் ஒப்பற்ற விண்ணுலகம் போக

மாவேறிய தன் வருதினித் தலைவரை - யானைகளில் ஏறி யிருந்த சேனைத்தலைவரை

குறுகலர் குலைய - பகைவர் அழிய

கோட்டாறு - குமரிமுனைக்கு வடக்கில் பத்துமைலில் உள்ள ஊர்

நிலைகள் இட்டருளி - நிலைப்படைகளை (Standing army) அமைத்தருளி

அவனிமுழுதுடையாள் - குலோத்துங்கனது பட்டத்தரசி யாய் விளங்கியவள்

**உரை நடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல் :—** உத்தொங்க தொங்க வள நாட்டுக் குன்றக் கூற்றத்துச் சிறு பழுவூர்ச் சபையோர், விருதராச பயங்கர வாண கோவரையரது தாயார் சோழகுல சுந்தர விச்சாதிரி ஆழ் வார்க்கு ஒரு மா நிலத்தை ஒரு காசுக்கு விற்று விலையா வணம் செய்து கொடுத்தனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

**உத்தொங்க தொங்க வளநாடு** :—இது பழூவூர் முதலான ஊர்களைத் தன்னகத்துக் கொண்டதொரு வளநாடாகும். இவ்வளநாட்டிற்கு இப்பெயரே முதலாம் ராசராசன் காலம் முதல், பிற்பட்ட எல்லாச் சோழமன்னர்களுடைய காலங்களிலும் வழங்கி வந்துள்ளது.

**குன்றக் கூற்றம்** :—திருச்சிராப்பள்ளிச் சில்லா உடையார்பாளையந் தாலூகா அரியிலூருக்கு அருகிலுள்ள குன்றம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டுள்ள ஒரு கூற்றமாகும்.

சிறுபழுவூர் - திருச்சிராப்பள்ளிச் சில்லா, உடையார் பாளையந் தாலூக்காவில், தேவாரம் பெற்ற பதியாகிய பழுவூரே சிறுபழுவூராகும். இது இக்காலம் கீழப் பழுவூர் என்று வழங்குகின்றது. இவ்வூருக்கு மேற்கே சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளதும் மறவனீச் சரத்தைத் தன்னகத்துக் கொண்டதுமாகிய மேலப் பழுவூர் பெரும் பழுவூர் என்று கல்வெட்டுக்களில் பெயர் கூறப்படுதலால், இக்கீழப்பழுவூர் சிறுபழுவூர் என்று பெயர் பெற்றது.

**சிறுபழுவூர்** :—இதற்கு உரிய தல விருட்சம் (அ) இப்பதிக்குரிய மரம் ஆல். பழு என்னும் சொல் ஆல் என்று பொருள்படும். ஆலமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டுள்ளமையின் பழுவூர் என்னும் பெயரும் ஆலந் துறை என்னும் பெயரும் இதற்கு உண்டாயின. தீர்த்த விசேடமுடையது. ஆதலின் துறை என்னும் சொல் சேர்க் கப்பட்டிருக்கிறது. பரசுராமர் தந்தையாரின் கட்டளைப்படி தம் தாயைக் கொன்ற பாவம் இத்தலத்துத் தீர்த்தத்தில் நீராடியதால் நீங்கிற்று என்று தலபுராணம் கூறுகின் றது. ஆலந்துறையீசர் என்பது இத்தலத்துச் சிவபெருமா னுக்குத் தமிழில் வழங்கும் பெயராகும். இக் கோயில் கல்

வெட்டுக்களினால் சோழமன்னர்களுடைய சம்பந்திமார்களாய் இருந்த பழுவேட்டரைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

தங்கள் ஆச்சி - தங்கள் தாயார்.

சோழகுலசுந்தரன் விச்சாதிரி ஆழ்வார்-இதில் சோழகுல சுந்தரன் என்பது இயற்பெயர். விச்சாதிரி - இசை பாடுதலில் வல்லவர். ஆழ்வார் - உயர் குலத்து ராஜ ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர். இவ்வாழ்வார் என்னும் பெயரே இக்காலம் ஆயாள் என்று வழங்கப் பெறுகின்றது.

அன்றாடு நல்காசு - அப்பொழுது வழங்கும் நாணயத்து நல்ல காசு (Current Coin)

ஆவணக்களரி - ஆவணம் பதிவு செய்யுமிடம் (Registration Office)

இதுவே விலை ஓலை ஆவதாகவும் - இதுவே சாசனம் ஆவதாகவும்

விலைக்கற விற்று பொருளறக் கொண்டோம் - முழு விலை விற்று முழுப்பொருள் கொண்டோம்.

வீரசோழ விண்ணகர ஆழ்வார் கோயில் - வீர சோழவிண்ணகரம் என்பது பழுவூரில் உள்ள திருமால் கோயிலின் பெயராகும். இக்காலம் இக்கோயில் மணவாளப் பெருமாள் கோயில் என்று மக்களால் வழங்கப் பெறுகின்றது.

## பொதுக் குறிப்பு

இதுவே பொருள். மாவறுதிப் பொருள் சிலவோலை ஆவதாகவும், இதுவல்லது வேறுபொருள் மாவறுதிப் பொருள் சிலவோலை காட்டக் கடவர் அல்லாதாராகவும் - பணம் பெற்றதற்கு இதுவே மூல சாசனமாகும்.

'This alone shall be the record of the final payment of the money viz, the purchasers shall

not be bound to produce another record of the final payment of the money herewith' என்பர் டாக்டர் உல்ஷ்.

---

## Inscription No. 10*

### வில்லவராயன் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்ந்த புணரி யகழ் சூழ்ந்த புவியில் பொங்நேமி யளவுந் தங்நேமி நடப்ப விளங்கு சயமகளை யிளங்கோப் பருவத்து சக்கர கோட்டத்து விக்கிரமத் தொழிலால் புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம் வயிராகரத்துவாரி அயிர் முனைக் கொந்தளவரசர் தந்தள மிரிய வாளுறை கழித்து தோள்வலி காட்டிப் போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகை சூடித் தெந்திசை தேமரு கமலப் பூமள் பொது மையும் பொங்நியாடை நன்நிலப் பாவையின் தனி மையுந் தவிரப் புனிதத் திருமணி மகுடம் உரிமையிற் சூடித் தங்நடி யிரண்டுந் தட முடியாகத் தொங்நில வேந்தர் சூட முன்னை மனுவாறு பெருக கலியாறு வறுப்ப செங்கோல் திசை தொறுஞ் செல்ல வெண் குடையிரு நிலவளாகம் எங்கணுந் தனது திரு நிழல் விண்ணிலாத திகழ ஒருதநி மேருவில் புலி விளையாட வார்கடற் றீவாந்தரத்துப் பூபாலர் திறை விடுதந்த கலஞ் சொரி களிறு முறை நிற்ப விலங்கிய தென்னவந் கருந்தலை பருந் தலைத்திடத் தங்பொங் னகர்ப் புறத்திடைக் கிடப்ப விநாள் பிற்குலப் பிறை

---

*S. I. I. Vol. iii part ii page 168.

போல் நிற்பிழை எங்னுஞ் சொல்லெதிர் கோடிற்றல்லது தங்கை வில்லது கோடா வெழ குலத்தரசர் அளத்தியி விட்ட களிற்றின திட்டமும் பட்ட வெம்பரியும் விட்ட தங்மானமும் கூறிந வீரமும் கிடப்ப ஏறின மலைகளு முதுகு நெளிப்ப யிழிந்த நதிகளுஞ் சுழன்று சுழன்று விழுந்த கடல்களுந் தலைவிரி தலமரக் குடதிசைத் தங்நாளுகளுந் தானும் தாதையும் பங்நாளிட்ட பலபல முதுகும் பயங்தெதிர் மாறின ஐயப்பெருந் திருவும் பழியுகந்து குடுத்த புகழிங் செல்வியும் வாளாரொண் கண் மடந்தைய ரீட்டமும் மீளாது குடுத்த வெங்கரி நிரையும் கங்க மண்டலமும் சிங்கணமெங்றும் பாணி யிரண்டும் ஒரு விசைக் கைக்கொண்டெண்டிய புகழொடு பாண்டி மண்டலங் கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளவரு பரித்தரங்கமும் பொரு பரிக்கலங்களும் தந்திர வாரியு முடைத்தாய் வந்து வட கடல் தென் கடல் படர்வது போலத் தங்பெருஞ் சேனையையேவிப் பஞ்சவர் ஐவரும்பொருத போர்க்களத் தஞ்சி வெருநெளித் தொடி அரணெநப் புக்க காடறத்துடைத்து நாட்டடிப்படுத்து மற்றவர்தம்மை வனசரர் திரியும் பொச்சை வெஞ்சுர மேற்றிக் கொற்ற விசயஸ்தம்பங் திசைதொறு நிறுத்தி முத்திங் சலாபமும் முத்தமிட் பொதியிலு மத்த வெங்கரி படுமய்யச் சய்யமுங் கங்நியுங் கைகொண்டு புநிதத் தெங் நாட் டெல்லை காட்டிக் குடமலை நாட்டுள்ள சாலே றெல்லாங் தநிவிசும்பேற மாவேறிய தங் வரூதினித் தலைவரைக் குறுகலர் குலையக் கோட்டாறுட்பட நெறிதொறும் நிலை திரியவிட்டருளிப் பொங்கொளி யாரமுங் திருப்புயத் தலங்கலும் போல, வீரமுங் தியாகமும் விளங்கப் பார்தொழச் சிவ நிடத்துமை யெநத் தியாகவல்லி உலகுடையாளிருப்ப அவளுடங்

கங்கை வீற்றிருந்தெனை மங்கையர் திலகம் ஏழிசை வல்லபி ஏழுலகமுடையாள் வாழி மலர்ந்திநி திருப்ப ஊழியும், திருமாலாகத்துப் பிரியாதெந்று திருமகளிருந் தென வீரஸிம்ஹாஸனத்து உலகு முடையாளொடும் வீற்றிருந்தருளிய கொ விராஜகேஸரி பந்மராந திரிபுவநச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு சயஎ ஆவது பாண்டிகுலாசநி வளநாட்டு மீகோழை தேவதாந ப்ரஹமதேயம் திருவாணைக்காவில் திருவெண்ணுவல் கீழிநிதமர்ந்தருளிய த்ரிபுவன பதிக்கு மூலப்ருத்த்யநாகிய சண்டேஸ்வரன் ஆதேசம் ஜயசிங்க குலகாலவள நாட்டு மீசெங்கிளி நாட்டு வளம்பகுடி அரயமகந் முனையந் அருமொழி தேவநான வில்லவரா யனுக்கு நாம் விற்றுக் குடுத்த நிலமாவது. உடையார் திருவாணைக்காவுடைய எம்பெருமாந் தேவதாநம் தெந் கரை ஊர்களில் பாண்டிகுலாசநி வளநாட்டு மீகொழை ஆளிகுடியில் இவனுக்கு விற்றுக்கொடுத்த நிலத்துக் கிசைந்த கீழ்ப்பார்க்கெல்லை பிள்ளை கொள்ளி வாய்க் காலுக்கு மேற்கும் தெந்பார்க்கெல்லை களத்தில் வடக் கிலகைய் வாய்க்காலுக்கு வடக்கும் மீபார்க்கெல்லை உத்தம சீலிச் சருப்பேதி மங்கலத்துத் தென்பிடாகை புதுக்குடி எல்லைக்கு கிழக்கும், வடபார்க்கெல்லை தெந் நாற்றங்கரைப் பெருவழிக்கு தெற்கு, ஆக இவ்விசைந்த பெருநாந் கெல்லையுள்பட்ட நிலம் சஊ இந்நிலம் நாலே முக்காலும் இத் தேவர்க்கு யாண்டு நாற்பத் தேழாவது வரை பயிரிலி புந்செய்பாய்க் குட்டமு மண்ணுமிட்டு கிடந்தமையிலந்நிலம் முனையந் அருமொழி தேவநாந வில்லவராயனுக்கு விற்றுக் குடுத்துக் கொள்வதாக எம்மிலிசைந்த விலைப் பொருள் அந்றுடு நற்காசு சபஐ

இக்காசு நாலே மாகாணியுங் கைக்கொண்டு திருவானைக்காவுடைய எம்பெருமாங் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கி முனையங் அருமாழி தேவனாந வில்லவராயனுக்கு விற்றுக் குடுத்து இவங் உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாங் கோயிலில் இடங்கை நாயகரென்று எழுந்தருளு வித்த இஷபவாஹந தேவர்க்கும் நம்பிராட்டியார்க்குந் திருமஞ்ஜநங்களுக்கு திருவமிர்து படிக்கு இரண்டு திருநாளிலும் இரண்டு நாள் திருவிழா எழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டும் நிபந்தங்களுக்கு இந்நில ஊது கல்லித்திருத்தி ஸ்ரீபண்டாரத்து புந்செய் வரிசையால் வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேஸரி மரக்காலால் இந்நிலம் நாலேமுக்காலுக்கும் அளப்பதாந ஜஉடுநாகாவிதங இந்நெல் இருபத்து முக்கலநே இருதூணிக் குறுணியும் அளக்கு மிடத்து கார்பாதி பசாநம் பாதி அளப்பதாகவும் இதில் மிகுதி கொண்டு இவங் இடங்கை நாயகரெந்று எழுந்தருளுவித்த இஷபவாஹந தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சனபடிகளுக்கும் திருவமுதுபடிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாளெழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டு நிபந்தங்களுக்கு நிமந்தஞ்செய்து குடுத்தோம். முனையங் அருமொழி தேவநாந வில்லவராயநுக்கு திருவானைக்காவுடைய எம்பெருமாநுக்கு மூலப்ருத்த்யநாகிய சண்டேஸ்வரங் உள்ளிட்ட கந்மிகளோம். இது பந்மா ஹேஸ்வர ரக்ஷை.

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம் :—** திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருவானைக்கா கோயிலின் இரண்டாம் பிராகாரத்துக் கீழ்ச்சுவர்.

**குறிக்கப்பெற்ற அரசன் :**—முதற் குலோத்துங்க சோழன்.
**கல்வெட்டுத் தோன்றிய காலம் :**—கி - 1117.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்

[ஒன்பதாம் கல்வெட்டின் மெய்க் கீர்த்தியும் இக்கல் வெட்டின் மெய்க்கீர்த்தியும் பெரும்பான்மையும் ஒத்துள் ளன. அவ்வொன்பதாம் கல்வெட்டில் காணப்பெறாததும், இப்பத்தாவது கல்வெட்டில் காணப்பெறுவதுமாகிய சில செய்திகள் மாத்திரம் ஈண்டுக் குறிக்கப் பெற்றுள்ளன. ஏனையவைகளை ஒன்பதாம் கல்வெட்டின் மெய்க்கீர்த்திப் பகுதிக்கு எழுதியன கொண்டு தெளியலாம்.]

**குலோத்துங்கனுடைய மனைவியர் :**— (1) தியாகவல்லி உலகுடையாள் (2) ஏழிசை வல்லபி ஏழுலகமுடையாள் (3) உலக முடையாள் என்பவர்கள் குலோத்துங்க னுடைய மனைவியர் ஆவர். இவர்களுள் தியாகவல்லி உலகுடையாள், சிவனிடத்து உமையெனவும்; ஏழிசை வல்லபி ஏழுலகமுடையாள், உமையுடன் கங்கை வீற் றிருப்ப தெனவும்; உலகமுடையாள் திருமாலாகத்துப் பிரியாது என்றும் திருமகள் இருப்பது எனவும் போற்றப் படுகின்றனர்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

அளத்தி - மைசூர் இராச்சியத்தில் உள்ளதொரு ஊர்.

**உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல் :**—பாண்டி குலாசனி வளநாட்டு, மீக்கோழை ஆளிகுடியில், பயிர் செய்யப் பெறுமல் மேடு பள்ளமாய்க் கிடந்த $4\frac{3}{4}$ வேலி நிலத்தை, திருவானைக்கா கோயிலில். வெண்ணுவல் கீழ் இனிது எழுந்தருளி யிருக்கும் திரிபுவனபதிக்குப் பழைய அடியாராகிய சண்டேஸ்வரர் உள்ளிட்ட கன்மிகள், ஜயசிங்க குலகால வளநாட்டு, மீசெங்கிளிநாட்டு வளம்ப குடி, அரையன்மகன் அருமொழி தேவனை வில்லவராய

னுக்கு, நாலேமாகாணிக் காசுக்கு விற்றுக்கொடுத்து அக்காசைக் கோயில் பண்டாரத்தில் ஒடுக்கி யுள்ளனர். இந் நிலத்தைக் கல்லித் திருத்திப் பயிரிட்டு வரும் வருவாயான இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணி நெல்லையுங் கொண்டு,இவ்வில்லவராயன் திருவாணைக்கா கோயிலில் எழுந்தருளுவித்த இடங்கை நாயகருக்கும், அவர்தம் பிராட்டியார்க்கும் திருமஞ்சனபடிகளுக்கும், திருவமுது படிக்கும், இரண்டு திருநாளிலும் இரண்டுநாள் எழுந்தருளுகைக்குமாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நிபந்தஞ் செய்து கொடுத்துள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

**பாண்டி குலாசனி வளநாடு** :—பாண்டி குலாசனி என்னும் தொடர் பாண்டியர் குலத்துக்கு இடியை ஒத்தவன் என்று பொருள்படும். இது முதலாம் இராசராசனுடைய விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். இவ்விருதுப் பெயரே இந்நாட்டிற்கும் வைக்கப் பெற்றது. இது சோழமண்டலத்தின் ஒன்பது வளநாடுகளுள் ஒன்றாகும், இது ஆர்க்காட்டுக் கூற்றம், தஞ்சாவூர்க் கூற்றம், விளநாடு, கிளியூர்நாடு முதலான 13 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. காவிரிக்கு வடக்கு, தெற்கு வெள்ளாற்றிற்கு வடக்கு, தஞ்சாவூருக்கு மேற்கு, உறையூர்க்குக் கிழக்கு இப்பெரு நான் கெல்லைக் குள்பட்ட நிலப்பகுதி இந்நாடென்று ஒருவாறு கூறலாம்.

மீக்கோழை - இது பாண்டி குலாசனி வளநாட்டின், பிரிவுகளில் அடங்கிய நாடாகும், இது. மீக்கோழை, கீழ்க்கோழை என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. இது திருச்சிராப்பள்ளி சில்லாவில் இருக்கின்றது. விளநாட்டுக்குப் பக்கத்தில் உள்ளது இந்த மீக்கோழை நாடு.

திரிபுவனபதி :—இது திருவானைக்காவில் திருவெண்ணாவல் கீழ் இனிது எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர்.
மூலப்ருத்தியனாகிய - பழைய அடியானாகிய
ஆதேசம் - கட்டளைப்படி

ஜயசிங்க குலகால வளநாடு :—இது வடசிறுவாயில் நாடு, குளமங்கலம் நாடு, தென்மீபொழில் நாடு, தென்கவிர் நாடு முதலிய பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. புதுக்கோட்டை இராச்சியத்தின் ஆலங்குடி தாலூகாவில் உள்ள வாராப்பூர், குளத்தூர் தாலூகா திருவேங்கை வாசல், கீரனூர் ஆகிய இவ்வூர்கள் இவ் வளநாட்டின் பகுதிகள் என்று புதுக்கோட்டை இராச்சியக் கல்வெட்டுக்கள் (Inscriptions of the Pudukottai State) அறிவிக்கின்றன.

மீசெங்கிளிநாடு : —புதுக்கோட்டை இராச்சியத்தின் குளத்தூர் தாலூகா மலையடிப்பட்டி என்னும் ஊர், ஜயசிங்க குலகால வளநாட்டு மீசெங்கிளி நாட்டுக்கு உட்பட்ட ஊர் என்று புதுக்கோட்டை இராச்சியக் கல்வெட்டு (Inscriptions No. 116) அறிவிக்கின்றது. இச் செங்கிளி நாடு மீசெங்கிளி என்றும், கீழ்செங்கிளி என்றும் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் இக் கல்வெட்டு உணர்த்துகின்றது.

உத்தம சீலிச் சதுர்ப்பேதி மங்கலம், புதுக்குடி - இவைகள் பாண்டி குலாசனி வளநாட்டில் உள்ள ஊர்கள் - உத்தம சீலிச் சதுர்ப்பேதி மங்கலம் இக்காலம் உத்தம சீலி என்று வழங்கப் பெறுகின்றது.
தென்பிடாகை - தெற்கில் உள்ள சிற்றூராகிய
நிலம் - ஒரு வேலி
நிலம் 4¾ என்பது - நாலே முக்கால் வேலி. இச் செய்தி இக் கல்வெட்டில் வந்துள்ள “ புன்செய் வரிசையால் வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக இராஜகேஸரி

மரக்கால் இந்நிலம் நாலேமுக்காலுக்கும் அளப்பதான நெல் இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணி" என்னும் தொடரால் அறியக் கிடக்கின்றது.

இத்தேவர்க்கு - குலோத்துங்க சோழ தேவர்க்கு

பயிரிலி - பயிர் செய்யாமல்

குட்டமும் - குட்டையும் (A Pond); குளத்தைவிடச் சிறிய நீர்நிலே.

அன்றூடு நற்காசு - அப்பொழுது வழங்கும் நாணயம்

இடங்கை நாயகர் - இவர் திருவானேக்கா கோவிலில், முனேயன் அருமொழி தேவனுை வில்லவராயனுல் எழுந்தருளுவிக்கப் பெற்றவர். இவருக்கு ரிஷப வாகன தேவர் என்ற வேறு பெயரும் உண்டு.

கார்பாதி, பாசனம் பாதி அளப்பதாக - கொடுக்க வேண்டிய நெல்லில் கார் என்னும் நெல் விளேயுங் காலத்தில் பாதியும், சம்பா நெல் விளேயுங் காலத்தில் பாதியும் அளப்பதாக

கன்மிகள் - தேவகாரியம் பார்ப்பவர்கள்

## பொதுக் குறிப்பு

கோயில் நிலத்தை மக்கள் வாங்குவதா யிருந்தாலும் அல்லது நிலத்தைக் கோயிலுக்குத் தானஞ் செய்வதாய் இருந்தாலும் அதைச் சண்டேஸ்வரர் பெயரால் செய்வது பண்டைக் காலத்து வழக்கம் என்பதற்கு இந்தக் கல்வெட்டு சான்றுகும்.

**இக் கல்வெட்டில் வந்துள்ள காப்புரை:**—இது பன்மாகேஸ்வர ரக்ஷை.

பன்மகேஸ்வர ரக்ஷை - பல சிவனடியார்கள் இதைக் காப்பார்களாக.

---

# Inscription No. 11*

## அருளாளப் பெருமாள்கோயில் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணரப் புவிமாது வளர, நாமாது விளங்க ஜயமாது விரும்பத் தன் நிருபத மலர் மன்னவர் சூட மன்நிய உரிமையால் மணி முடிச்சூடிச் செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்பக் கலிங்க மிரியக் கடமலை நடாத்தி, வலங்கொளாழி வரையாழி திரிய இருசுடரளவு. மொருகுடை நிழற்ற விஜயாபிஷேகம் பண்ணி வீரஸிம் ஹாஸநத்து முக்கோக்கிழாநடிகளோடும்வீற்றிருந்தருளிய கோப் பரகேஸரிபந்மராந த்ரிபுவநச் சக்ரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிர்கோட்டத்து எயில் நாட்டுத் திருவத்தி யூராழ்வாரைப் பாடியருளின ஸ்ரீ பூதத்தாழ்வாரும் ஸ்ரீபொய்கையாழ்வாரும் பிறந்த திருக்கேட்டை நாள் அருள்ாளப் பெருமாள் புறப்பட் டருளி ஏகாசீதி திருமஞ்சநமும் பெருந்திருவமுதுஞ் செய்தருளத் திருமஞ்சநத்துக்குத் திருமுளைச் சார்த்த திருமுளைப்பாலிகை முப்பத்தாறுக்குப்பாலிகை ஒன்றுக் கடிக் கீழட்ட நெல்லு உரியாகநெல்லுப் பதக்கிரு நாழி யும், திருமுளைப் பீசங்கொள்ள அரிசி ஞநாழியும் புண்ணி யாஹ தக்ஷிணைக்கு அரிசி அறுநாழி உழக்கும் பவித்ர வ்யத்துக்கு அரிசி இரு நாழி உரியும் திருமுளைக்குத் திருநந்தா விளக்குக்கு நாளொன்றுக்கு எண்ணை உழக்காக நாளஞ்சுக்கு எண்ணை நாழி உழக்குந்

---

* S. I. I. Vol. iii Part ii Page 187

க்ருத ஹாரோஹணத்துக்கு நெய் மூவுழக் காழாக்கும் திருமஞ்சநத்துக்குக் கலசம் எண்பத்தொன்றுக்கு அடிக் கீழ் நெல்லு ஐங்குறுணி உரியும் கும்பநாலுக்கு நெல்லு நாநாழியும், திருச் சுண்ணக் கலச மொன்றுக் கடிக் கீழரிசி இருநாழியுங் கலசஞ் சூழக்காண விலையின் புடவை பதிமூன்றுங் கலசஞ் சுற்ற நூலரைப்பலமும் திருமஞ்சநத்துக்கு நெய் முன்னுழியும் தேநாழியும் பால் முன்னுழியும் தயிர் முன்னுழியும் ஸ்நபநத்ரவ்யங்கள் வெண்டுவநவும் பஞ்சலோகமும் பஞ்சரத்நமும் திருச் சுண்ணத்துக்கு நாடன் மஞ்சள் நாற்பதிங் பலமும் திருவிளக் கெண்ணை உரியும் ஹோமத்துக்கு நெய்யுரியும் சார்த்தியருளச் சந்தந முக்கசும் கற்பூரமாறுமாவும் அகிலரைக்கழஞ்சுங் கஸ்தூரி யஞ்சாடியு மிரண்டு மாவும் புழுகு நெய்யிரண்டு மஞ்சாடியுநாலுமாவு மாத்திரைக் கரிசி நாநாழியும் பெருந் திருவமுதுக்கு அரிசி முக்கலனே குறுணியும் பருப்புப் பதக்கிரு நாழி உரியும் பலவற்கத் துக் கறி நிறை எண்ணூற்றிருபத்தைம் பலமும் கறி யமுதுக்கு உப்புநாநாழியு மிளகு உரியும் கடுகு ஆழாக்கே இருசெவிடரையும் சீரகமாழாக்குஞ் சற்கரை இருபதிங் பலமும் நெய்யுரியு அமுதில் படைக்க சற்கரை முப்பத் திருபலவரையும் நெய் பதினொருநாழி ஆழாக்கும், வாழைப் பழமைம் பத்தஞ்சும் தயிர் தூணியும் கண்ட சற்கரைமுக்கசும் திருக்கண்ணமடைக்கரிசி இருநாழியு நெய்யுழக்கும் சற்கரை இருபதின்பலமும் வாழைப் பழம்பத்தும் அப்ப அமுதுக்கரிசி பதக்கும் நெய்யிரு நாழி உரியும் சர்க்கரை எண்பதிங்பலமு மிளகாழாக் கும் சீரக மிருசெவிடரையும் விறகு கட்டு மூன்றும் குசக்கல உருவுக்கு நெல்லுக் கலமும் தண்ணீரமுதுக் கேல மொருசெவிடரையும் அடைக்காய் அமுதுக்கு

பாக்கு நாநூற்றைம்பது வெள்ளிலைப்பற்றொன்பதும் திருவிளக்கெண்ணை நாழி உரியும் திருவிளக்குடையார்கள் குழாய் பந்திரண்டுக்கெண்ணை முந்நாழியும் பாவை விளக்குக்கெண்ணை இருநாழியும் ஆக இவையிற்றுக்கு நிமந்தமாகச் செல்வதாக இட்ட சமவிலைப்படியாலிக் கோயில் சிலவளக்கும் அருமொழிநங்கை மரக்காலால் திருக்கேட்டை நாளொன்றுக்கு நெல்லு முப்பதின் கலமாக ஓராட்டை நாளுக்குவேண்டுவதாக நெல்லு முன்னூற்றுத் தொண்ணூற்றுக் கலத்துக்கும் சோழ மண்டலத்து விருதராஜ பயங்கரவளநாட்டு மண்ணி நாட்டு வங்கமுழையூர் முழையூருடையாந் வெண்காடந் ஆதித்ததேவநாந வங்கத் தரையந் இத்தேவர் பண்டாரத்துச் சிலவளக்கு மருமொழிநங்கை மரக்காலா லளந்த நெல்லு எழுநூற்றெண்பதின் கலமிந்நெல் லெழுநூற்றெண்பதின் கலத்துக்கு மாசந்தோறும் நெல்லுமுப்பத்து இருகலனே தூணிப்பதக் காகயாண்டுவரை கா அரெப் பொலிசையால்பலிசை பொலிவதாந நெல்லு முந்நூற்றுத் தொண்ணூற்றுக்கல மிந்நெல்லுமுந்நூற்றுத் தொண்ணூற்றுக்கலத்துக்கும் அருளாளப்பெருமாள் மாஸந்தொறும் திருக்கேட்டை நாள் புறப்பட்டருளி திருமஞ்சனமும் பெருந் திருவமுதும் செய்தருள வேண்டுவநவையிற்றுக்கு இந்நிமந்தப் படியே பண்டாரத்திலே விட்டுச் சந்திராதித்தவத் நிமந்தமாகச் செய்யக்கடவதாகச் சிலாலேகை செய்வித்துக் குடுத்தோம். இக் கோயிலில் ஸ்ரீகோயில் வாரியம் புண்டவத்தநத்து ராஜ ராஜக்கிரம வித்தநும் தூதஹரி நின்ற நாராயணக்கிரம வித்தநும் ம்ருஹஸ்தலத்து பாண்டவதூதக் கிரமவித்த நும் புண்டவத் தநத்து இளைய கோக்கிரமவித்தநும் தூதஹரி வெண்ணைக் கூத்தக்கிரமவித்தநும் தூதஹரி

இளையருளாளக் கிரமவித்தநும் கோயிற் கணக்கு உத்திர மேலூருடையாநாந எட்டிதிருக்காளத்தி உடையானும் இவ்வனைவோம். இப்படிக்கு இவை உத்திர மேலூருடையான் எட்டிதிருக்காளத்தி உடையான் எழுத்து.

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்** :—சின்ன காஞ்சிபுரம் அருளாளப்பெருமாள் கோயிலில் மலையென்று கூறப்படும் கல்தளத்தின் மேற்குச் சுவர்.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்** :—விக்கிரம சோழன். கல்வெட்டுத் தோன்றிய காலம் :—1120+9 = கி.பி. 1129

**அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு** :—இவன் முதற்குலோத்துங்க சோழனது மகன் ஆவன். இவன் கி. பி. 1120 முதல் கி. பி. 1136 வரை ஆண்டான், இவன் இளங்கோவாய் இருந்த காலை வேங்கி நாட்டிற்கு அரசப் பிரதிநிதியாய் இருந்து அதனை ஆண்டுவந்தான். அக்காலை தென்கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டு அரசனாகிய தெலுங்க வீமனை வென்றான். இவ்வெற்றியைப் பாராட்டி ஒட்டக்கூத்தரால் இவன்மீது பரணி ஒன்று பாடப்பெற்றுள்ளது. அது இதுபொழுது கிடைத்திலது. இவன் முதற்குலோத்துங்கனுக்குப் பிறகு சோழ மண்டல ஆட்சியை எய்தினன். இவன் பரகேசரி என்ற பட்டம் உடையவன். இவன் பிறந்த நாள் புரட்டாசித் திங்கள் உத்திரட்டாதி நாள் ஆகும். தில்லைச் சிற்றம்பலப் பெருமானுக்கு இவன் செய்த தொண்டுகள் மிகப்பலவாகும். ஒட்டக் கூத்தர் இவன்மீது உலா ஒன்று பாடியுள்ளனர். விக்கிரம சோழதேவருலா என்பது அதன் பெயராகும்.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் வீரச் செயல்

**தென்கலிங்கப்போர்** :—விக்கிரமசோழன் வேங்கி நாட்டிற்கு அரசப்பிரதிநிதியாய் இருந்தபோது தென்கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டரசனை வென்றான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

பூமாது புணர - இலக்குமி தன்னைச் சேர
புவிமாது வளர - பூமிதேவி செழிக்க
ஜயமாது - வெற்றித்திரு
கலிங்கம் இரிய - கலிங்க தேசம் கெட
கடமலை நடாத்தி - யானைப் படையைச் செலுத்தி
வரையாழி திரிய - மகாமேருமலையை நடுவிலே உடைய பூமண்டலத்தைச் சுற்றிவர
விஜயாபிஷேகம் - வெற்றியின் பொருட்டுச் செய்யும் திருமஞ்சனம்.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச் செயல்

பூதத்தாழ்வாரும், பொய்கையாழ்வாரும் பிறந்த திருக்கேட்டை நாளில் அருளாளப் பெருமாளுக்கு மாதந்தோறும் எண்பத்தொரு திருமுழுக்குச் செய்வித்தும், பெருந்திருவமுது வைத்து நிவேதித்தும், எழுந்தருளச் செய்வதற்காகத் திருக்கேட்டை நாள் ஒன்றிற்கு முப்பதின் கலமாக ஓராண்டிற்கு வேண்டுவதான நெல் முந்நூற்றுத் தொண்ணூறு கலத்துக்கு, மாதத்துக்கு ஆறு மரக்கால் வட்டிவரக் கூடியதாய் உள்ள எழுநூற்றெண்பது கல நெல்லை, விருதராச பயங்கர வளநாட்டு, மண்ணி நாட்டு, முழையூர் உடையான் வெண்காடண் ஆதித்ததேவனான வங்கத்தரையன், மூலதனமாக வைத்துள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

எயில் கோட்டம் - தொண்ட மண்டலத்தின் இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்று

எயில்நாடு - எயில் கோட்டத்து நாடுகளுள் ஒன்று.

அத்தியூர் - காஞ்சிபுரத்தின் ஒரு பகுதி

ஏகாசீதி திருமஞ்சனம் - எண்பத்தொரு திருஅபிடேகம். [ஏக+அசீதி - ஏகாசீதி. ஏகம் - ஒன்று, அசீதி - எண்பது]

பெருந்திருவமுது - வடைபாயசம் காய்கறிகள் இவைகளுடன் கூடிய உணவு.

திருமுளைச்சாத்த - அழகிய முளைகளை உண்டு பண்ணக் கூடிய

திருமுளைப்பாலிகை - முளைக்கவைப்பதற்குப் பாத்திரம்

உரி - அரைப்படி

பதக்கு இரு நாழி - இரண்டுமரக்கால் இரண்டுபடி

திருமுளைப் பீசங்கொள்ள - விதை முளைக்க வைப்பதற்கு பாலிகைப் பாத்திரம் வாங்க

நாழி - அரைமரக்கால்

புண்ணியா ஹதக்ஷிணைக்கு - நாளைத் தூய்மையாக்கக் கூடியதான இருக்குகளை (வேதத்திலுள்ள செய்யுட்களை) மறையில் வல்ல அந்தணர்களைக் கொண்டு சொல்லும்படிச் செய்து, அதற்குக் கைம்மாறாகக் கொடுக்கும் பொருள் - [புண்ணியாஹவாசனம் என்பது தொடர். அதைக்குறுக்கிப் புண்ணியாஹம் என்று சொல்வதுண்டு]

அறுநாழி உழக்கு - முக்கால் மரக்காலும் கால்படியும்,

பலி திரவியம் - திராட்சை கற்கண்டு முதலியன

இருநாழி உரி - 2½படி

திருநந்தாவிளக்கு - தூண்டா விளக்கு. இத்தொடர் கல்வெட்டுக்களில் நுந்தா விளக்கு என்றும், நொந்தா விளக்கு என்றும் வழங்கப்பெறும்.

க்ருத ஹாரோணத்துக்கு - நெய்யால் அலங்கரிப்பதற்கு
திருச் சுண்ணம் - வாசனைப் பொடி
கலசஞ்சூழக்காண - கும்பத்தைச் சூழக்கட்டும்படி
புடைவை - துணி
தேன்நாழியும் (தேநாழியும்) - தேன் ஒருபடியும்
ஸ்நபநத்ரவியங்கள் - இலாமிச்சைவேர், பெருஞ்சண்பக மொட்டு, ஏலக்காய் முதலியவைகள்
பஞ்சலோகம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.
பஞ்ச ரத்தினம் - முத்து, நீலம், பவளம், வைரம், மாணிக்கம்
நாடன் மஞ்சள் - ஒருவகை மஞ்சள்
கழஞ்சு - இது எடுத்தல் அளவைப் பொருள். $1\frac{1}{4}$ வராகனெடை கொண்டது. பொன் முதலியவைகள் இவ்வளவைப் பொருளால் நிறுக்கப் பெறும் என்பது ஆராய்ச்சி யாளர்களின் கருத்து. ஆனால் "அகில் அரைக் கழஞ்சும்" என்னும் இக்கல்வெட்டுப் பகுதியால் அகில் கட்டையும், இவ்வெடுத்தல் அளவையால் நிறுக்கப் பெறும் என்று பெறப்படுகிறது. 'ஏருடைய விழுக்கழஞ்சிற், சீருடைய விழை பெற்றிசினே'—என்ற புறநானூற்று அடிகளால் (செய்யுள் 11) கழஞ்சு என்பது பொன் என்ற பொருளில் பண்டைக் காலத்தில் வழங்கி வந்துள்ளது.
ஒருமா - 1/20
புழுகு நெய் - புனுகுவை புனுகு நெய் என்றும் சொல்வதுண்டு
மாத்திரைக்கரிசி - சீ சூர்ணம்.
பலவர்க்கத்துக்கறி - பலவிதமான காய்கறிகள்
கண்ட சர்க்கரை - ஒருவகைச் சர்க்கரை
திருக்கண்ணமடை - பாயசம்
குசக்கல உரு - மட்பாத்திரம்

அடைக்காய் அமுது - இங்கே தாம்பூலம்
வெற்றிலைப் பற்று ஒன்பதும் - வெற்றிலைக்கட்டுகள் ஒன்பதும்
திருவிளக் குடையார்கள் - தீவர்த்திப் பிடிக்கிறவர்கள்
பாவை விளக்கு - திருக்கோயில்களில் தரா பித்தளை முதலான உலோகங்களினால் செய்யப் பட்ட பெண் உருவங்கள் ஏந்தியிருக்கும் விளக்கு. 'பாவை விளக்கும் பணிவுடன் பரவுமின்'-என்ற மணிமேகலை விழா வறை காதை அடி இத்தகைய விளக்குகள் மிகப் பழங் காலம் முதல் நம் நாட்டில் இருந்து வந்ததைப் புலப் படுத்தும். இஃதே போன்று ஆண்கள் ஏந்தியிருக்கும் விளக்குக்கு ஆண்சிலையல் விளக்கு என்று பெயர்.
சிலவளக்கும் - இத்தொடர் செல வளக்கும் என்றிருக்க வேண்டும். செல் - என்பது பகுதி ஆதலின்
அருமொழி நங்கை மரக்கால் - அருமொழி நங்கை என்பது வீரராசேந்திர சோழன் மனைவியின் பெயராகும். இவ்வம்மையார் பெயரால் அருளாளப் பெருமாள் கோயிலில் வழங்கிவந்த மரக்காலின் பெயர்.

திருக் கேட்டை நாள் ஒன்றுக்கு நெல்லு முப்பதின் கலமாக ஓராட்டைக்கு வேண்டுவதான நெல் முந்நூற்றுத் தொண்ணூற்றுக் கலத்துக்கும்—ஓராண்டுக்குப் பதின் மூன்று கேட்டை நட்சத்திரங்கள் ஆகையால் கேட்டை நாள் ஒன்றுக்கு முப்பது கலமாக ஒரு வருடத்திற்கு முந் நூற்றுத் தொண்ணூறு கலம் என்று கூறப்பெற்றுள்ளது.

**விருதராச பயங்கர வள நாடு** :—இது சோழ நாட்டில் காவிரிக்கும், சிதம்பரத்துக்கு வடபால் ஓடும் வெள் ளாற்றுக்கும் (நிவா) இடைப்பட்ட பெரு நிலப்பரப்பாகும். இரசேந்திர சிங்கவளநாடு முதற் குலோத்துங்கன் காலத்தில் விருதராச பயங்கர வளநாடு என்னும் பெயர் எய்திற்று. இம்மன்னன் காலத்திற்குப் பிற்பட்ட காலங்

களிலும் இவ்வள நாட்டிற்கு இப்பெயரே (விருதராச பயங்கரவள நாடு) வழங்கி வந்தது.

**மண்ணி நாடு** :—இது இராசேந்திர சிங்க வளநாட்டின் பிரிவுகளில் ஒன்றாகும். திருப்பனந்தாள், வேம்பற்றூர், திரைலோக்கி, முழையூர் முதலான ஊர்கள் இந்நாட்டில் அடங்கியிருந்தன என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. எனவே தஞ்சாவூர்ச் சில்லாவில் கும்பகோணம் தாலூகாவின் ஒரு பகுதியையும் மாயவரம் தாலூகாவின் ஒரு பகுதியையும் தன்னகத்துக் கொண்டதாகும்.

முப்பத்து இருகலனே தூணிப்பதக்காக - முப்பத்திரண்டரை கலமாக

யாண்டுவரை - ஒருவருடத்திற்கு

அரைப் பொலிசையால் - பாதி வட்டி அதாவது கலத்துக்கு ஆறுமரக்கால் வட்டி

பலிசை பொலிவதான - வட்டியாக வருவதான

சிலாலேகை செய்வித்து - கல்லில் வெட்டுவித்து

இக்கோயில் - சாமி கோயில்

ஸ்ரீ கோயில் - அம்மன் கோயில்

வாரியம் - கண்காணிப்பாளர்

தூதஹரி - குடிப்பெயர்

எட்டி - வணிகர்களுக்குக் கொடுக்கும் பட்டம்

## பொதுக் குறிப்பு

**எடுத்தலளவை** :—

2 குன்றி = 1 மஞ்சாடி
20 மஞ்சாடி = 1 கழஞ்சு

**முகத்தலளவை** :—

5 செவிடு = 1 ஆழாக்கு
2 ஆழாக்கு = 1 உழக்கு
2 உழக்கு = 1 உரி

2 உரி = 1 நாழி
8 நாழி = 1 குறுணி
2 குறுணி = 1 பதக்கு
4 குறுணி = 1 தூணி
12 குறுணி = 1 கலம்

**சாசனங்களில் வரும் நிறுத்தலளவைப் பெயர் பலம், கழஞ்சு என்பன.**

' பலவர்க்கத்துக்கறி நிறை எண்ணூற்றிருபத்தைம் பலமும் ' " கண்ட சர்க்கரை முக்கழஞ்சும் " —என்னும் கல்வெட்டுப்பகுதிகளால் - விக்கிரம சோழன் காலத்தில் பாரம், மணங்கு, வீசை, சேர் என்னும் நிறுத்தல் அளவைகள் இல்லை என்பதும், பலத்துக்குக் குறைந்த நிறுத்தலளவை கழஞ்சு என்பதும் பெறப்படுகின்றன. திருவள்ளுவரும் " தொடிப்புழுதி கஃசா உணக்கின் " என்ற குறளில் தொடியை (பலத்தை) விட, கஃசு சிறிய அளவுள்ளது என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

# Inscription No. 12*

## தீக்காலி வல்லம்கோயில் சாசனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படிகோ விஜயநந்தி விக்கிரம பன்மர்க்கு யாண்டு ௰௭ ஆவது படுவூர்க் கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலி வல்ல முடைய பரமேஸ்வரர்க்கு இன்னாட்டு ஐம்பூணியும் விளத்தூரும் இந் தேவர் தேவதானம் அமருன்றி மங்கலமும் விடேல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வ வேதி மங்கல மென்னும் பேரால் எகக்கிராமமாக மாவலி வாணராய

*S. I. I. Vol. III part i page 93

ஞை. விக்கிரமாதித்த வாணராயன் விண்ணப்பத்தாலும், காடுபட்டித் தமிழ்ப்பேரரயன் ஆணத்தியாலும், எகக்கிராமமாக்கி இவ்வமருன்றி மங்கல முன்னித் தீக்காலி வல்லமுடைய பரமேஸ்வரர்க்கு இறுத்து வருகின்ற ஐ இரண்டாயிரக் காடியும் பொன்னிருபதின் கழஞ்சு மிவ்விடெல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வ்வெதிமங்கலத்துச் சபையார் இறுப்பாராகவு மின்னெல்லில்த் திருவமிர்துக்கு நெல்லு அறுநூற்றுக் காடியும் திருவுண்ணழிகை யுள்ளாராதித்துப் பாசரிக்கும் சிவப்ராஹ்மணர்க்கு நெல்லு ஐஞ்ஞூற்றுக் காடியும் ஸ்ரீபலி கொட்டுவார்க்கு நெல்லு ஐஞ்ஞூற்றுக் காடியும் திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பலபணி செய்வார்க்கு நெல்லு நாநூற்றுக் காடியும் திருநுந்தா விளக்குக்கும் திருமெய்ப் பூச்சுக்கும் சிதாரிக்குமற்றும் கண்டஸ்புடித நவகந மாதிகளுக்கு மாகப் பொன் இருபதின் கழஞ்சும் ஆக இன்னெல்லும் இப்பொன்னும் இத்தேவற்கு சந்த்ராதித்தவல்லிறுப்பார்களாகவும் இப்பரிசு நிவந்தமாகச்செய்து குடுத்தோம். இத்தர்மம் பந்மாஹேஸ்வரர் ரக்ஷை.

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்** :—பாலாற்றின் உபநதியாகிய நுகாவின் மேற்குக் கரையில் உளள திருவல்லம் என்னும் ஊரிலுள்ள பில்வநாதீஸ்வரர் கோயிலின் மகாமணடபத்தின் வடசுவர்.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்** :—விசயந்தி விக்கிரமவர்மன்.

**அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு** :—இவன் தந்திப் போத்தரையன் மகன் ஆவன். தெள்ளாறெறிந்த நந்திவர்மன்

என்று பேசப்படுபவனும் இவனேயாவன். வந்தவாசி தாலூகாவில் உள்ள தெள்ளாற்றில் வரகுணன் என்னும் பாண்டியனைத் தோற்கடித்தமையால் இவனுக்கு இப் பெயர் உண்டாயிற்று. நந்திக்கலம்பகம் என்னும் நூல் இவன் மீதுதான் பாடப் பெற்றது. இவன் கி. பி. 830 முதல் கி. பி. 854 வரை ஆண்டான்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :**—830+17=கி. பி. 847.

**அறச்செயல் :**—அமருன்றி மங்கலம் என்னும் ஊர், முன்னரே தீக்காலிவல்லமுடைய பரமேஸ்வரர்க்கு உரிய தாய் இருந்தது. அதனுடன், ஐம்பூணி, விளத்தூர் என் னும் ஊர்களைச் சேர்த்து, ஒன்ருக்கி அதற்கு விடேல் விடுகு விக்கிரமாதித்த சதுர்வேதி மங்கலம் என்னும் பெயர் வைக்குமாறும், அவ்வமருன்றி மங்கலம் முன் இத் திக்காலிவல்லமுடைய பரமேஸ்வரர்க்கு இறுத்துவரும் இரண்டாயிரக் காடிநெல்லையும் இருபதின்கழஞ்சு பொன் னையும் இவ்விடேல் விடுகு விக்கிரமாதித்த சதுர்வேதி மங்கலத்துச் சபையாரே ஏற்று நடத்துவதென்றும், அவ் வாறு நடத்துங் காலையில் திருவமுதுக்கு நெல் அறுநூற்றுக் காடியும், சிவப்பிராணமர்க்கு நெல் ஐந்நூற்றுக் காடியும், ஸ்ரீ பலி கொட்டுவார்க்கு நெல் ஐந்நூற்றுக் காடியும், திருப்பள்ளித் தாமம் பரிப்பார் திருப்பதியம் பாடுவார் உள்ளிட்ட பலபணி செய்வார்களுக்கு நெல் நானூற்றுக் காடியும், திருநொந்தாவிளக்கு, முதலியவைகளுக்குப் பொன் இருபதின் கழஞ்சுமாக இச்சபையார் இறுப்பது என்றும், காடுவெட்டித் தமிழப் பேரரையன் கட்டளை யிட்டுள்ளான்.

## குறிப்புரை

1

இழிச்சி - இடித்து
சிலாலேகைப்படி - கல் எழுத்துப்படி

படுவூர் கோட்டம் :—தொண்ட மண்டலத்து இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்று - இதுபொழுது வடார்க்காடு சில்லாவாகும்.

மீயாறுநாடு - தீக்காலி வல்லத்தைச் சூழ்ந்துள்ளநாடு- ஐம்பூணி, விளத்தூர் - இவைகள் மீயாறுநாட்டி லுள்ள ஊர்கள்.

இத்தேவர் தேவதானம் அமரூன்றி மங்கலம் - இத்தொட ரால் அமரூன்றி மங்கலம் முன்னரே தீக்காலி வல்ல முடைய பரமேஸ்வரர்க்கு உரியதாய் இருந்தது என்று பெறப்படுகிறது.

விடேல்விடுகு :—பல்லவருடைய ஆணைக்கு விடேல்விடுகு என்று பெயர். இது " விடேல்விடுகு என்னும் ஆணையும் நடாவி—" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது.

மாவலிவாணராயனை விக்கிரமாதித்த வாணராயன் :—இவன் பல்லவருக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசன். ஐம்பூணி விளத் தூர் என்னும் ஊர்களை அமரூன்றி மங்கலத்தோடு சேர்த்து, அதற்கு விடேல்விடுகு விக்கிரமாதித்த சதுர் வேதி மங்கலம் என்று பெயர் வைக்கலாமென்று முன் மொழிந்தவன் (Proposer) இவனே யாவன்.

காடுவெட்டித் தமிழ்ப் பேரரையன் (பேராயன்) இதில் காடுவெட்டி என்பது பல்லவர்க்குரிய பட்டப்பெய ராகும். இவனே விக்கிரமாதித்தனுடைய மொழியை ஏற்று அவ்வாறு ஒரே கிராமமாக்க உத்தரவு இட்டவன்.

ஆணத்தியாலும்— (இது ஆக்ஞாபயதி - என்பதன் திரிபு) உத்தரவாலும்

ஏகக்கிராமமாக்கி - ஒரே ஊர் ஆக்கி

திருவமுதுக்கு - சோற்றுக்கு

திருவுண்ணாழிகை யுள்ளாராதிப் பாசரிக்கும் - இத்தொடர் திருவுண்ணாழிகையுள்ளாரை ஆராதித்து உபசரிக் கும் - என்றிருக்கவேண்டும்.

திருவுண்ணாழிகை உள்ளார் - கருப்பஇல்லில் (Central Shrine) எழுந்தருளியிருக்கும் சிவபெருமான். திரு வீழி மிழலைத் திருத்தாண்டகம் மூன்றும் பாடலில் திருநாவுக்கரசர், சிவபெருமானை "உண்ணாழிகை யாருமையோளோடும்" என்று குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது.

சிவப்பிராமணர் - குருக்கள்மார்

ஸ்ரீபலி=வாத்தியம்

திருப்பள்ளித்தாமம் - பூ - "தெய்வ நாயகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித்தாமம் கொய்து"—என்ற பெரிய புராண அடியாலும் (எறிபத்த நாயனார் புராணம் செய்யுள் 9) விளங்கும்.

திருப்பதியம் மாடுவார் - தேவாரம் பாடுவார். பதியம் என்பது பத்துப் பாட்டைக்கொண்ட, எல்லாவற்றையும் குறிப்பதாயினும், இது சிவன் கோயில் ஆகையாலும், திரு என்ற அடை மொழியாலும் தேவாரத்தைக் குறிப்பதாகும்.

திருமெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்கும் - சந்தனத்துக்கும், அகில்கட்டைக்கும் - என்று சிலர் பொருள் கூறுவர். [சீதாரி - இச்சொல்லை சிதாரி என்று கல்வெட்டில் இருப்பது போல் கொள்ளலாம் - அவ்வாறு கொண்டால் குறுக்கல் விகாரம் பெற்றது ஆதல் வேண்டும். சிதாரி - குளிச்சிக்குப்பகை]

"திருமெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்குமாக நிசதம் சந்தனம் முப்பலமாக ஆண்டுவரை சந்தனம் ஆயிரத்து எண்பதிந் பலத்துக்கு காசு ஒன்றினுக்கு சந்தனம் அறுபதின் பலமாக காசுபதினெட்டும்" என்னும் இராசராசனது 24 ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற திருவையாற்று ஒலோகமாதேவீச்சரக் கல் வெட்டுப் பகுதியால், திரு மெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்

குமாக சந்தனம் - என்னும் தொடர் சந்தனத்தைக் குறிப்பதாகும்.

கண்டஸ் புடித நவகந்மாதிகளுக்குமாக - கண்டஸ் புடித - வெடிப்புகள், நவகந்ம - புதுப்பித்தல் எனவே வெடிப்புக்களைப் பழுது பார்த்தல். 'For repairing breaks and Cracks' என்பர் டாக்டர் உல்ஷ் துரை.

இப்பரிசு - இந்தவிதமாக (In this manner)

## பொதுக் குறிப்பு

இடிந்த நிலையில் உள்ள கோயிலைப் புதிதாகக் கட்டத் தொடங்குபவர், அதிலுள்ள கல்வெட்டை எழுதிக் கொண்டு, பின் கோயில் திருப்பணி முற்றுப் பெற்ற பின்னர் - அக்கோயிலில் ஓர் இடத்தில் அக் கல்வெட்டை எழுதிவைப்பர்.

இது பண்டைக்காலத்து, இடிந்த கோயிலைப் புதுப்பிப்பார் கைக்கொண்ட நெறியாகும். இச் செய்தியை "திருமண்டபம் இழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலா லேகைபடி என்னும் இக்கல்வெட்டும்," "ஸ்ரீ விமானம் இழித்துவதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி"—என்னும் 15-ஆம் கல்வெட்டும் அறிவிக்கின்றன.

பல்லவர் காலத்திலேயே தேவாரம் பாடுவதற்கு நிபந்தம் அளிக்கப் பெற்றிருந்ததற்குச் சான்று :—தெள்ளாறெறிந்த நந்திவர்மன் (அ) கோவிசயநந்தி விக்கிரமபன்மன் கல்வெட்டில் "திருப் பதியம் பாடுவாருளிட்ட பலபணி செய்வார்க்கு நெல்லு நானூற்றுக் காடியும்" —என்னும் தொடரே ஆதாரமாகும்.

## Inscription No. 13*

### மஹாவலி வாணராயர் சாசனம்

ஓம் நமச்சிவாயம். ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசையநந்தி விக்கிரம பருமற்கு யாண்டறுபத்திரண்டாவது ஸகல ஜகத்த்ரயாபி வந்தித ஸுராஸுராதீச பரமேஸ்வர பிரதிஹாரீ கிருத மஹாவலி குலோத்பவ ஸ்ரீமாவலி வாணராயர் வடுகவழி பன்னீராயிரமும் ஆள, வாணபுரத்து வடசிகரகோயில் புதுக்கு வித்து இதற்கு இளங்கிழவர் மகன் மன்றாடிடை அழிஞ்சிற்களம் பட்டி விலைக்கு கொண்டு குடுத்தேன். ஊற்றுக்காட்டுக் கோட்டத்து அளிங்கணபாக்கத்து கிழகத்து தட்டான் மாதங் மகங் அரிதிரன் குடுத்த தேவர் போகம் மஹாவலிவாணராயர் பிடாகை வலஞ்செய்து குடுத்தார். இது காத்தார் அடியென்முடி மேலன. இது அழித்தான் கடிகை எழா இருவரையும் கொன்றபாவத்து படுவான். இது அழித்தான் இப்பாவத்துக்கு அஞ்சாறுயில் அன்ருள் கோயிலுக்கு ஆயிரம் காணம் தண்டப்படுவோம். வாணபுரத்தோம்.

பஹுபிர் :, வஸுதா தத்தா ராஜபி : ஸகராதிபி : யஸ்ய யஸ்ய யதா பூமி : தஸ்ய தஸ்ய ததா பலம்.

### விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்** :—பாலாற்றின் உபநதியாகிய நுகாவின் படுகையில் உள்ள ஒரு பெரிய பாறையின்மேல்

*S. I. I. Vol. iii part i page 91.

புறம். இப்பாறை வடார்க்காடு சில்லா குடியாத்தம் தாலூகாவில் நுகா என்னும் ஆற்றின் மேற்குக் கரையில் வல்லத்துக்கு வடகிழக்கே ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றது.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :—கோவிசைய நந்தி விக்கிரமபன்மன்.**

**அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு :—** இவன் தெள்ளாறெறிந்த நந்தி வர்மனது பாட்டனுவன். சரித்திரத்தில் நந்தி வர்ம பல்லவமல்லன் என்றும், நந்தி வர்மன் II என்றும் பேசப்படுபவனும் இவனே யாவன். இவன் கி. பி. 717 முதல் கி. பி. 779 முடிய ஆண்டான். எனவே இவனது ஆட்சி 62 ஆண்டுகள் ஓங்கியிருந்தது. இவன் கல்வெட்டு "ஓம் நமச்சிவாயம், ஸ்வஸ்திஸ்ரீ" என்று தொடங்குவதிலிருந்து இவன் மிக்க சைவப்பற்று உடையவனுதல் வேண்டுமென்று புலப்படுகின்றது. இவனது வரலாற்றின் சில பகுதிகளை, உதயேந்திர சாசனம், காசாக்குடிச் சாசனம், தண்டன் தோட்டச் சாசனம் இவைகளைக் கொண்டு அறியலாம்.

**இக்கல்வெட்டுத் தோன்றிய காலம் :—**கி. பி. 717+62 =கி. பி. 779

**அறச்செயல் :—** ஊற்றுக்காட்டுக் கோட்டத்து, அளிங்கணபாக்கத்துக் கிழகத்து இருந்த மாதன் மகன் அரிதிரன் என்னும் தட்டான் வாணபுரத்திலுள்ள வடசிகரக் கோயிலைப் புதுக்குவித்து, அக்கோயிலுக்கு இளங்கிழவர் மகன் மன்ருடி இடத்தில் அழிஞ்சிற் களம் பட்டி என்னும் ஊரை விலைக்கு வாங்கித் தேவதானமாகக் கொடுத்துள்ளான்.

## குறிப்புரை

ஸகல ஜகத்த்ரயாபி வந்திதஸுராஸுராதீச
பரமேஸ்வர பிரதிஹாரீக்ருதமஹாவலி குலோத்பவ

ஸ்ரீமாவலி வாணராயர் -

ஸகல - எல்லா

ஜகத்த்ரய - மூன்று உலகத்தில் உள்ளவர்களாலும்

அபிவந்தித - வணங்கப் பெற்றவனும்,

ஸுர - தேவர்கள்

அஸுர - அரக்கர்கள் (இவர்களின்)

அதீச - தலைவர்களுக்கு

பரமேஸ்வர - சிறந்த தலைவனும் ஆகிய சிவபிரானுக்கு

பிரதிஹாரீகிருத - வாயில்காவலாளனுகச் செய்யப்பட்ட

மஹாவலி குலோத்பவ - மகாவலி குலத்தில்பிறந்த

நமச்சிவாயம் - சிவனுக்கு வணக்கம்

சுவஸ்தி - மங்களம் உண்டாகுக

விக்கிரமபருமற்கு - இது விக்கிரம வர்மர்க்கு (அ) விக்கிரமபர்மர்க்கு - என்றிருக்க வேண்டும் - பகரத்துக்கு வகரம் போலியாகும். விக்கிரமவர்மன் - என்ற தொடர் பராக்கிரமத்தையே கவசமாக உடையவன் என்று பொருள்படும்.

விடுகவழி பன்னீராயிரம் :— வடுகவழி என்பது வாணர்களுடைய இராச்சியம். இதில் பன்னீராயிரம் என்பது பூமியின் பரப்பைக் குறிப்பதாகும். முடியனூர்ச் சாசனத்தில் வடுகவழி பன்னீராயிரம் ஊர்களைக் கொண்டது என்று கூறியிருப்பது இதை வலியுறுத்தும்.

மன்ருடிடை - மன்ருடி இடத்தில்

விலைக்குக் கொண்டு கொடுத்தேன் - விலைக்கு வாங்கி ஊரைக் கொடுத்தேன்

தேவர் போகம் - தேவதானம்

பிடாகை - சிற்றூர்

பிடாகைவலஞ் செய்துகொடுத்தார் - தானசாஸனத்தைப் பெண்யானையின் மீது வைத்து எல்லையைச்சூழ்ந்து கொடுத்தார்.

கடிகை - ஊர்ச்சபை
அன்றுள்கோயிலுக்கு - அரண்மனைக்கு
ஆயிரம் காணம் - ஆயிரம்பொன்

## சுலோகம்

பஹுபிர்: வஸுதர் தத்தா ராஜபி: ஸகராதிபி:
யஸ்ய யஸ்ய யதாபூமி: தஸ்ய தஸ்ய ததா பலம்

**பொருள் :—**

ஸகராதிபி : - சகரன் முதலிய
பஹுபிர் : - பல
ராஜபி : - அரசர்களால்
வஸுதா - பூமி
தத்தா - தானமாகக் கொடுக்கப்பட்டது.
யஸ்ய யஸ்ய - எவ்வெவனுக்கு
பூமி - பூமியானது
யதா - எப்படியோ
தஸ்ய தஸ்ய - அவ்வவனுக்கு
ததாபலம் - அப்படியே பயன்

N. B. :—பல்லவருடைய கல்வெட்டுப் பெரும்பான்மையும் இந்தச் சுலோகத்துடன் முடிவு பெறுவது வழக்கம்.

## பொதுக்குறிப்பு

இக்கல்வெட்டில் வந்துள்ள காப்புரை : இதுகாத்தார் அடிஎன் முடிமேலன. இது அழித்தான் கடிகை ஏழாயிருவரையும் கொன்ற பாவத்துப்படுவான்.

# Inscription No. 14*

## மாதவக் கிரம வித்தன் சாஸனம்

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸகல ஜகத்திரயாபிவந்தித ஸுரா ஸுராதீசபுர பரமேஸ்வர பிரதி ஹாரீ கிருத மஹாபலீ குலோத்பவ மஹாபலி வாணராஜர் சகர்யாண்டு எண்ணூற்றொருபதாவது படுவூர்க் கோட்டத்து காரை நாட்டு வன்னிபேடாகிய இரணவிக்ரமச் சதுர்வ் வேதி மங்கலத்து ஸபையோம் இக்கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலி வல்லத்துத் திருத்தீக்காலிப் பெருமாநடிகளுக்கு சந்த்ராதித்தவல் ஒரு திரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு நிசதம் உழக் காழாக் கெண்ணை யட்டுவதற்கு இக்கோட்டத்துக் காவிரிப்பாக்கமாகிய அவநி நாராயணச் சதுர்வ்வேதி மங்கலத்துக் கீழ் வடசேரி எட்டுக்கூர் மாதவக் கிரமவித்தன் பக்கல் தன்ம கட்டளைத் துளைநிறை இருபத்தைங் கழஞ்சு பொன் கொண்டு சந்திராதித்தவல் எரிப்பதாக இத்தன்மம் முட்டாமை செலுத்துவோமானோம். ஸபையோ மித்தன்மம் முட்டில் தன்மாஸநத்திலே நிசதம் ஐங்கழஞ்சு பொன் பன்மாஹெஸ்வரரே மன்றப் பெறுவதாகவும் இம் மன்றுபாடிறுத்தும் இத்திரு நுந்தா விளக்கு முட்டாமைச் செலுத்து வோமாறேம். வன்னி பேடாகிய ரணவிக்கிரமச் சதிர்வ்வேதி மங்கலத்துச் சபையோம். இதற்கு விரோதஞ் செய்தார். கெங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவங் கொள்வார் - இது பந்தமாஹெஸ்வர ரக்ஷை.

---

*S. I. I. Vol. iii Part i Page 95

## விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்** :—வடார்க்காடு ஜில்லா திருவல்லம் என்னும் ஊரிலுள்ள பில்வநாதேசுவரர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறம்.

**குறிக்கப் பெற்ற அரசன்** :—மகாபலி வாணராஜர்.

**வாணர்களைப் பற்றிய சில குறிப்புக்கள்** :—வாணர் என்பார் வடுகவழி பன்னீராயிரத்தை ஆண்ட அரசர் குடியினராவர். மணிமேகலையில் குறிக்கப் பெற்றுள்ள கிள்ளி வளவன் மனைவியாகிய சீர்த்தி என்பாள் இவ்வாணர் குலத்தினள் ஆவள். இதனால் இக்குலத்தினரது தொன்மை விளங்கும். பல்லவர்கள் காலத்தில் இவர்கள் அவர்களுக்கு (பல்லவர்களுக்கு) அடங்கிய சிற்றரசர்களாய் இருந்து வந்தனர். கி. பி. 888-இல் இவர்கள் சுயேச்சை பெற்றனர். மூன்றாம் இராச ராசசோழனுடைய மனைவியும் இக்குலத்தினளேயாவள். 14 ஆம் நூற்றாண்டில் இவர்களில் ஒரு பகுதியினர் மதுரைக்கு வந்திருந்தனர். தஞ்சை வாணன் கோவையின் பாட்டுடைத் தலைவனாகிய தஞ்சை வாணன் இக்குலத்தினனேயாவன்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம்** :—கி. பி. 888.

**அறச் செயல்** :— வன்னிபேடாகிய இரண விக்கிரமச் சதுர் வேதிமங்கலத்துச் சபையார், தீக்காலி வல்லத்துத் திருத்தீக்காலிப் பெருமான் அடிகளுக்கு, சந்திராதித்தவல் ஒருதிருநுந்தா விளக்கு எரிப்பதற்கு நிசதம் உழக்கு ஆழாக்கு எண்ணெய் அட்டுவதற்கு, காவேரிப்பாக்கமாகிய அவனி நாராயணச் சதுர் வேதிமங்கலத்துக் கீழ்வடசேரி எட்டுக்கூர் மாதவக் கிரமவித்தன்பக்கல் இருபத்தைந்து கழஞ்சு துளைப் பொன்னைப் பெற்றுக்கொண்டு, சந்திர சூரியர் உள்ளளவரை அத்தருமத்தை முட்டாமல் செலுத்துவதாக உடன் பட்டிருந்தனர்.

## குறிப்புரை

**சகர் யாண்டு** :—பழைய கல்வெட்டுக்களில் சகம் அல்லது சகர் என்று தான் வருகின்றது. பிற்காலத்துத்தான் சாலிவாகன சகாப்தம் என்று வருகின்றது. எனவே சகம் என்றாலும், சாலிவாகன சகாப்தம் என்றாலும் ஒன்றேயாகும். கி. பி. 78 இல்தான் சாலிவாகன சகாப்தம் ஆரம்பமாயிற்று. ஆகையால், சகம் (அ) சாலிவாகன சகாப்தம் என்று வருமிடத்தில் எழுபத்தெட்டைச் சேர்த்துக் கூட்டினால் கி. பி. ஆண்டுவரும்.

உதாரணமாக இக் கல்வெட்டு, சகர்யாண்டு எண்ணூற்றுப்பத்தில் பொறிக்கப் பெற்றது. அத்துடன் எழுபத்தெட்டைக் கூட்ட கி. பி. எண்ணூற்றெண்பத்தெட்டு வருகின்றது. ஆகையால் அதுவே கல்வெட்டுத் தோன்றிய காலமாகும்.

காரைநாடு - காரை என்பது இராணிப்பேட்டைக்கு வடக்கேயுள்ள ஊராகும்.

வன்னிபேடு - வாலாஜபாத்துக்குத் தெற்கே ஒரு மைல் தூரத்திலுள்ள ஊராகும்.

தீக்காலிப் பெருமானடிகள் - தீக்காலி வல்லத்து எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் பெயர்.

அட்டுவதற்கு - கொடுப்பதற்கு

எட்டுக்கூர் - ஊரின் பெயர்

மாதவக்கிரமவித்தன் - வேதத்தை ஓதும்முறை - சம்ஹிதா, பதம், கிரமம், கனம், ஜடா என்று ஐந்து வகைப்படும். இவைகளில் கிரமம் என்ற முறைப்படி வேதத்தை ஓதியவன் கிரமவித்தன் ஆவன். மாதவன் என்பது பெயர்.

தன்ம கட்டளைத் துளைநிறை இருபத்தைங் கழஞ்சு பொன் - தருமமாகக் கொடுத்த கட்டளையினது துளைப் பொன்னின் நிறை இருபத்தைங் கழஞ்சு

துளைப் பொன் - காய்ச்சி உருக்கினும் மாற்றும், நிறையும் குறையாதது என்பதற்கு அரசாங்கத்தாரால் உறுதி

செய்யப்பட்டதற்கு அடையாளமாக, துலையிடப் பெற்ற பொன்.

தன்மாசனத்திலே - நீதிமன்றத்திலே

பன்மாகேஸ்வரரே - சிவனடியார்களே

மன்ற நிச்சயமாக - இது தெளிவை உணர்த்தும் இடைச் சொல். '' மன்ற அப்புதல்வர்க்குந் தந்தையும் தாயும் '' என்றஇடத்து, இச்சொல் இப்பொருளில் வருவதைக் காண்க.

மன்றுபாடு இறுத்தும் - நீதிமன்றத்துக்கு அபராதம் கொடுத்தும்

கெங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவங் கொள்வர் - கங்கைக்கும் குமரிக்கும் இடையிலுள்ள மக்கள் அவ்வளவு பேரும் செய்த பாவங்கள் அனைத்தையும் கொள்வர்.

---

## Inscription No. 15*

### வாணமஹாதேவியார் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ விமானம் இழித்து வதற்கு முன் புள்ள சிலாலேகைப்படி, ஸகல ஜகத்த்ரயாபி வந்தித ஸுரா ஸுராதீச பரமேஸ்வர ப்ரதிஹாரீ க்ருத மஹா வலி குலோத்பவ வாணவித்தியாதரராயரான வாண ராயர் மஹாதேவியார் கொங்குணி தர்ம்ம மஹாராஜ குணில புர பரமேஸ்வரரான ஸ்ரீ நாத ஸ்ரீ மச் சிவ மஹாராஜப் பெருமானடிகள் மகளார் ப்ரதிபதி அரை யர் மகளார் வாண மஹா தேவியார் திக்காலிப் பெரு மானடிகளுக்கு நொந்தா விளக்கு ஒன்றினுக்கு இத்திக் காலி வல்லத்து ஸபையார்க்குக் குடுத்த செம்பொன் இருபதின் கழஞ்சு. இப்பொன்னுக்குப் பொலி யூட்டு

*S. I. I. Vol. iii Part i Page 99

நிசதம் உரிய் நெய் ஒரு விளக்குக்கு அட்டு வோமாறோம் ஸபையோம். இன்னெய் சந்தி ராதித்தவற் முட்டாமை அட்டுவோமாறோம், முட்டில் பன்மாஹேஸ்வரரே நிசதி ஐங்கழஞ்சு பொன் மன்ற வொட்டிக் குடுத்தோம். இத்தண்டப் பட்டும் நெய் முட்டாமை அட்டு வோமா றோம். ஸபையோம். இதன்றென்றோம் கெங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவங்கொள்வார். இத் தர்மம் பன்மாஹேஸ்வர ரக்ஷை. இத்தர்மம் ரக்ஷித் தாரடி யென்முடி மேயின.

### விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம்** :—வடார்க்காடு ஜில்லா, திரு வல்லம் பில்வநாதீஸ்வரர்கோயிலின் மேற்குச் சுவர்.

**கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசியார்** :—வாணமகா தேவி யார் - இவரது இயற் பெயர் குந்தவை. இவர் வாணவித் தியாதரராயரான வாணராயரின் தேவியாரும், பிருது விபதி அரையர் மகளாரும் ஆவர்

**கல்வெட்டுத் தோன்றிய காலம்** :—காலம் கொடுக்கப்பட வில்லை. ஆராய்ச்சியாளர் ஒன்பதாம் நூற்றாண்டு என்பர்.

**அறச் செயல்** :—வாண மகாதேவியார் தீக்காலிப்பெரு மான் அடிகளுக்கு நிசதம் உரிநெய் ஒரு விளக்குக்கு அட்டுவதற்கு தீக்காலி வல்லத்துச் சபையாரிடம் இருப தின் கழஞ்சு செம்பொன்னைக் கொடுத்துள்ளனர். சபை யாரும் அப்பொன்னின் பொலியூட்டு கொண்டு அவ்விளக் குக்கு நெய் அட்டுவதாக ஒப்பியுள்ளனர்.

கொங்குணி தர்ம மகாராஜா - இது மேற்கு கங்க அரசர் களின் பட்டப் பெயர்

குணில புரம் - இது மைசூர்ச்சில்லாவிலுள்ள கோலார் ஆகும். குணிலபுரம் என்பதின் திருந்திய பாடம் குவ லாளபுரம் என்பதாகும். கங்க அரசர்களின் தலை

நகரம் இதுவே. சீவகசிந்தாமணி, நன்னூல் இவைகள் வெளிவந்தஇடமும் இதுவேயாகும்.

குணில புரபரமேஸ்வரரான - குணிலபுரத்தார்களுக்குத் தலைவனான.

ஸ்ரீநாத - என்பது சைனர் பெயர்களின் முன்வழங்கும் மரியாதைச் சொல்.

**பிருது விபதி** :—இவன் சிவமகாராசப் பெருமான் அடிகளின் மகன். பிருதுவிபதி I என்று சரித்திரத்தில் அழைக்கப்பெறுவன் இவனேயாவன். திருப்புறம் பயம் போரில் உயிரிழந்தவனும் இவனே.

பொலியூட்டு - வரும் வட்டிகொண்டு

உரி நெய் - அரைப்படிநெய்

பன்மாஹேஸ்வரரே - அடியார்கள் பாதுகாவலில்

மன்ற - நிச்சயமாக

இதன்றெறன்றோம் - இதைச்சரியாக நடத்தாத யாங்கள்.

---

## Inscription No. 16*

## அதவோடு தோட்டம் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ பூமடந்தையும் ஜய மடந்தையும் பொலிந்து திருப்புயத்திருப்ப பார்முழுதுங் குடைநிழற்ற பராக்ரமத்தால் முடி சூடி தென்மதுராபுரி திருவிளையாட்டத்திற் கண்டு மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மலைநாடு கொண்டருளி மாபாரதம் பொருதருளி மன்னவற்கு தூது சென்றருளி தேவாசுர மதுகை தரித்தி தேனுருமாயுங் கொண்டருளி வடவரையிற் கயல் பொறித்து வானவர் கோனாரம் பூண்டு திடவாசகக் குறுமுனி பால் செந் தமிழ்நூல் தெரிந்தருளித் தளிரிருங்கை மாதுரிமைச் செங்கோலெங்குந்

*Travancore Archaelogical Series Vol. ii Part i Page 18.

திசை நடாத்தி மன்னிய வீரஸிம்ஹாஸநத்திற் த்ரை லோக்ய முழுதுடையாரோடும் வீற்றிருந்தருளி மாமுதல் மதிக்குலம் விளக்கிய கோமுதல் கொற்றவன்மரான த்ரி புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர் அபிஷேக காலத்தில் ராஸிதா கோத்ரத்து

ஆஸ்வலயாயந ஸூத்ரத்து நாராயணன் சேந்தனை இடையாற்று மங்கலத்து நம்பியும் திருப்புத்தூர் ஆழ் வாரும் பிள்ளையார் வீர கேரள தேவரும்' உத்தரமந்திரி கள் வீர கேரள பாண்டியக் கோனும் நிக்க இடை யாற்று மங்கலத்து நம்பியோடும் திருவாய் மொழிந்தருளி பெருமாளுக்குதிருவாயுஷ்யார்த்தமாக ஸூசிந்த்ரமுடைய நாயனற்கு பெருமாள் தாநம்பண்ணிக் குடுத்தருளின பூமி தென்கூற்றுப் புறத்தா நாட்டுப் பூசன்குடிப் பாலத வோடு தோட்டம் இவ்வதவோடு தோட்டத்துக்கு பெரு நான் கெல்லை கீழெல்லை பாதிரித் தோட்டத்து நீர் நக்கல், தென்னெல்லை கல்க் குழிக்கு வடக்கு, மேலெல்லை புல்லாங் குறிச்சிக் கர்கறை வயலில் ஒற்றுவாயல் கிணற் றுக்கு கிழக்கு வடவெல்லை கறடிகும்பல் கடம்புக்கு தெற்கு ஏரி இரண்டினால் விளைநிலமும் காடுமுள்ப் பட நிலம் ஏழுவேலி, இன்னில மேழு வேலியும் இறையிலி காராண்மையுமுட்பட ஸூசிந்த்ரமுடைய நாயினற்கு தானம் பண்ணினர் பெருமாள் முன்னுடையாரும் பழம் பேரும் நிக்கி இப்படிக்கு பெருமாள் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுக்க வென்று திருவாய் மொழிந்தருளி திருமந்திர வோலை முரப்பு நாட்டுமறவ னூரம்பலவன் வேளானை நித்த விநோதமூவேந்த வோளாரெழுத்தினல் ப்ரஸாதஞ் செய்தருளிய ஸ்ரீமுகத் தினலும், ஸேனாதிபகள் வெண்டைக் குடிநாட்டு இள வெண்டைச் சந்திர சேகரனை வீரபாண்டிய மூவேந்த

வேளாளர் கடையீட்டினாலும் புரவுவரி திணைக்கள நாயகம் மலை கூற்றத்து விளத்தூர் நாராயணன் கேசவனை தென்னவ சிகாமணி மூவேந்த வேளாரெழுத்தினாலும், முக வெட்டி நாயகம் செம்பில் நாட்டு அரையனேரி தாயன் பொன்னனை குறும்பிலுடையா னெழுத்தினாலும் கூற்றுக்கு கூறு திருவழுதி வளநாட்டு கோட்டூர்ப் பேரருளாளன் கற்றங்குடியான் வானவன் வழுதிக் கோன் வெ......ட்டின் உள்வரிபடியாலும், நித்த வினோத மூவேந்த வேளாரெழுத்தினால் ப்ரஸாதஞ் செய்தருளிய ஸ்ரீமுகத்தாலும் வீரபாண்டிய மூவேந்த வேளார் கடையீட்டாலும் புரவுவரியா ரெழுத்திட்ட உள்வரியாலும் இக்கால முதல் திருப்படி மாற்றுள்ளிட்டன செலுத்துவாராகச் சொன்னோம் ஸுசிந்த்ர முடைய நாயனாற்கு.

## விளக்கவுரை

**கல்வெட்டு இருக்குமிடம் :—** திருவாங்கூர் இராச்சியத்தில் உள்ள சுசீந்திரம் ஸ்தாணு நாத சுவாமி கோயிலின் முதற் பிராகரத்தில் இருக்கும் இயற்கையான பாறையின் மீது.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :—** திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியதேவர்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :—** பதினொன்று அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம்.

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

**வீரச்செயல்:—**(a) மலைநாட்டை வென்றுகொண்டான்.

(b) **முன்னோர் செயலைத் தன்னுடையதாகக் கூறிக்கொள்வது —** சிவபெருமான் செய்த திருவிளையாடல்களைக் கண்டு தரிசித்தது. மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்களுக்குத்

துணையாயிருந்து போர் செய்தது. தேவரும் அசுரரும் பொருதகாலத்துத் தூதுசென்றது. வடவரையில் கயல் பொறித்தது. வானவர் கோன் ஆரம்பூண்டது. திட வாசகக்குறுமுனிபால் செந்தமிழ் நூல் தெரிந்தருளியது.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

பூமடந்தை - திருமகள்

செயமடந்தை - வெற்றித்திரு

தென்மதுராபுரி திருவிளையாட்டத்திற்கண்டு - மதுரையில் சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல்களைக் கண்டு வணங்கி

மாபாரதம் பொருதருளி-மாபாரத யுத்தத்தில் பாண்டவர்களுக்குத் துணையாய் இருந்து போர் செய்தருளி.

மன்னவர்க்குத் தூதுசென்றருளி - தேவாசுர யுத்தத்தில் அரசர்களின் பொருட்டு தூது சென்றருளி-இவ்வாறு தூது சென்றவன் பாண்டியன் மாகீர்த்தியாவன்.

தேறுறு மறையுங் கொண்டருளி (தேறுருங் கொண் டருளி) - தெய்வத்தன்மைகமழும் மறையையும் கற்றருளி.

தேவர் கோன் ஆரம் பூண்டு - இந்திரன் அளித்தமுத்தாரத்தைத் தரித்து. (தரித்தவன் உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன்)

தளிர் இருங்கைமாதுரிமைச் செங்கோல் - தளிர் போன்ற விசாலமான கையையுடைய உமாதேவியாரது உரிமை மூலமாகக் கிடைத்த செங்கோலை.

மாமுதல் மதிக்குலம் - பெருமை பொருந்திய முதன்மை வாய்ந்த சந்திரகுலத்தை

## உரைநடையினல் அறியப்படும் செய்திகள்

வீரபாண்டியதேவன், தான் நெடுநாள் வாழும் பொருட்டுச் சுசீந்திரமுடைய நாயனுர்க்கு, தென்கூற்றுப் புறத்தாயநாட்டுப் பூசன்குடிக்குப் பக்கத்தில், அதவோடு தோட்டத்தில் ஏழுவேலி நிலத்தைக் கொடுத்துள்ளான்.

## உரைநடைப்பகுதிக்குக் குறிப்புரை

அபிஷேக காலத்தில் - முடிசூட்டிக் கொண்ட தினத்தில்
ஆஸ்வலாயன் - ஒரு முனிவர் பெயர்
நாராயணன் சேந்தனை - நாராயணன் மகன் சேந்தனை
பிள்ளையார் - அரசிளங்குமாரர்
பெருமாளுக்கு - அரசனுக்கு
ஆயுஷ்யார்த்தமாக - நெடுநாள் வாழும்பொருட்டு
சுசீந்திரம் - திருவாங்கூர் இராச்சியத்தில் குமரிக்கு வடக்கே எட்டு கல்தொலைவில் இருக்கிறது
பூசன்குடிப்பால்-பூசன்குடி என்னும் ஊருக்குப் பக்கத்தில்
அதவோடுதோட்டம் - இது நிலத்தின் பெயர் - இரண்டு ஏரிப்பாய்ச்சலை உடையது. விளைநிலமும் காடும் கொண்டது. இதில் ஏழுவேலி நிலம், வீரபாண்டியனல் சுசீந்திரமுடைய நாயனுர்க்குக் கொடுக்கப் பட்டது.
நீர்நக்கல் - வாய்க்கால்
கடம்பு - காடு
ஏரி இரண்டினல் - இரண்டு ஏரிப் பாய்ச்சலினல்
காராண்மை - நிலத்தைப்பயிரிடும் குடிஉரிமை
முன்னுடையாரும் பழம் பேரும் நீக்கி - முன்யாருக்கு உரிமையாய் இருந்ததோ அதைப் பொருள் கொடுத்து நீக்கியும், அதன் பழம் பெயரை நீக்கியும்
வேளானை - வேள் என்னும் பட்டத்தை உடையவனை

ப்ரஸாதஞ்செய்தருளிய - கொடுத்தருளிய
கடையீட்டினலும் - கையெழுத்திஞலும்
புரவுவரி திணைக்கள நாயகம் - அரசிறை நீங்கிய ஊர்களினின்றும் வருவதற்குரிய பிறவரிகளுக்குக் கணக்கு வைத்திருப்பவர்களுக்குத் தலைவர்.
முகவெட்டி நாயகம் :—புரவுவரித்திணைக்களத்தில் அடங்கிய முகவெட்டிக்குத் தலைவராய் இருப்பவர்.
திருவழுதிவளநாடு - பாண்டியநாடு
புரவு - கொடை
திருப்படி மாற்று - சுவாமிக்குப் படிகட்டளை.

## பொதுக் குறிப்பு

**வீரபாண்டியனுடைய மனைவியாரின் பெயர்:**—திரைலோக்கியம் முழுதுடையாள்.

திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியனுடைய கல்வெட்டினல் அறியப்படும் பாண்டிய நாட்டிலிருந்த உள் நாடுகள்:—தென்கூற்றுப் புறத் தாய நாடு, முரப்பு நாடு, வெண்பைக்குடி நாடு, மலைக் கூற்றம், செம்பில் நாடு, திருவழுதி வள நாடு என்பவைகள்.

---

## Inscription No. 17*

## கன்னி பகவதியார் சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ திருவளரச் செயம்வளரத் தென்னவர்தம் குலம்வளர வருமறை நான்கவை வளர வனைத்துலகுந்துயர் நீங்கத் தென்மதுராபுரி தோன்றித் தேவேந்த்ரனே டினிதிருந்து மன்னர்பிரான் வழிதியர்கோன் வடிம்பலம்ப நின்றருளி மால்கடலை எறிந்

*Travancore Archealogical Series Vol. I Page 22

தருளி மலையத்துக் கயல் பொறித்துச் சேரலனைச் செருவில் வென்று திறைகொண்டு வாகைசூடிக் கூபகர் கோன் மகட்கொடுப்பக் குலவிழி ஞங்கைக்கொண்டு கன்னிப் போர் செய்தருளிக் காந்தளூர்ச்சாலை கமைறுத்து மன்னு புகழ் மறையவர்தம் மணியம் பலத்துளினிதிருந்து ஆயிரத் தெண்மர் அவிரோதம் பணிப்பணியால் மறை போத்துக் கல் நாட்டிப் பண்டுள்ள பேர் தவிர்த்து நிறுப்பனவு மளப்பனவும் கயலெழுதி அனந்தபுரத் தெம்மாற்கு நிலவிய பொன்மணி விளக்கு நின்றெரியப் பத்தமைத்து ஆங்கமைந்த தாயநல்லூர் அட தென் ஞட்டரையனென அறிவகையால் அறிந்துணர்ந்து தென்னவர் தங்குல தெய்வம் தென் குமரி கன்னியார் தம் திருநாள் விளாவதனிற் தைப்பூசப் பிற்றை நான்று வந்திருந்தொரெல்லாற்கும் மாற்றுதே தியாகம் இட அறத்தால் விளங்கிய ஆய்ந்த கேள்விப் புறத்தாய நாடு பூமகட் களித்துத் தெலிங்க வீய்மங்குளங்கொண்டு தென்கலிங்க மடிப்படுத்து திசை அனைத்து முடஞண்ட ஸ்ரீ பராந்தக தேவற்கு யாண்டு கூவது ராஜராஜப் பாண்டி நாட்டு உத்தம சோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரி கன்னியா பகவதியார் தேவதானத்துக்குப் பெருநான்கெல்லை. வடவெல்லை நாஞ்சி நாட்டு அதிய னூரும் மின்ஞட்டுப் பெருங்குடி மலையுட்பட பணைகுடி நீங்கலாக மூன்றுங்கூடின மலையிற் சந்தேச தேசப் பிரமாணம் ஆனைமலையும் மனுத்திரப் பாறையும் தோரணகுழியும் பிடாரனேரிக் கொழுக்குத்தும் கண்ட னேறிக் கொழுக்குத்தும் வாழையாற்று வடவாரும் நாவாயும் கோடிக்களாவும் விறகடு குப்பையும் ஓழுக்கந் தாழ்வும் இன்ஞட்டு வடகீழ் மூலை கருங்குளமும் அள்ளி

பூரும் பூசன்குடியும் கூடின பிரமாணமான புக்கூழ் குழியும் கிராத்திக் குளமும் சிதற்றைப் பாறையும் நெடு வாலி குழியும் மேற்கு நோக்கின நீர் வீழ் தாழ்வும், விளக்கன் குழி நீர் கொள்ளியும் இரட்டைக் கிணறும் ஆதனூர் துறைநீர் வீழ்தாழ்வும் பால்பாடும் நெடுங்களரும் உசிலொடு குழியும் ஆனை அடிப்பாறையும் கறடிமணலும் இரட்டை நுரம்பும் கறிம்பாடும் ஆனைக்கல்லும் இவ் வெல்லையில் கிழக்கு கருங் குளவளநாட்டு விசாபுரியும் இருக்கந்துறைக்குந் தென்கீழ் மூலையும் தென் எல்லை கிழக்குப் பாருசமே போந்து இந்நாட்டுத் தென்மேல் மலை கேரளன் குறிச்சியான கேரளன் குடியும் நாஞ்சி ஞட்டு மணற்குடியும் கூடின சந்தேசப் பிரமாணம் கேரளங்குடிக்குத் தென்மேல் மூலை பெ........ண்மையும் கட........ம பன்றி தலை விளை....... ற்கும் .......நடுவிளையும் மாணுக்கன் குழிக்கீழ் விளிம்பும் நங்கை கிணறு........ தாகச் சுசீந்திரமும் கேரளன் குறிச்சியும்........வழியும் தேவி குளத்தில் நீர் கொள்ளியும் ஆறுண்ணி வடகொம் பில்...... க்குப் பாறையும்.......பாப்பான் குழியும்...... பாறையும் வடக்கு நோக்கின நீர்வீழ்க்காரடு வெள் ளெலுப்பபைத் தாழ்வும் பள்ளிச் சந்த நீங்கலாக குருந்தோ.......ளற் பொற்றையும் மலையே யொழுங்கா கப் போந்து தோவாளைக்குக் கீழெல்லை க............னை யும் உருண்டப் பொற்றையும் ஒழுங்காக ஊசிமலையும் ஒழுங்காகப் போந்து ஆனைமலையாக இவ்விசைந்த பெரு நான் கெல்லையுட்பட்ட........தங்களும் அமிர்து படி சாந்துப்படியுஞ் சந்தனங் கற்பூரத்துக்குர் நாம் பிறந்த தைப்பூசத் திருநாளுக்கும் செல்விதாக இறையிலி தேவதானமாக நமக்குடையபடி நீர் வாத்துக் கொடுத் தோம் குமரிக் கன்னிப்பகவதியாற்கு.

## விளக்கவுரை

கல்வெட்டு இருக்குமிடம் :—குமரி முனையிலுள்ள கன்னியாகுமரி கோயிலின் முதற் பிராகாரத்துக் கிழக்குச்சுவர்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :—பராந்தக பாண்டியன்.

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

(a) வீரச்செயல்:—இவன் சேரமன்னனை வென்று திறை கொண்டான். கடல்துறைப் பட்டினமாகிய விழிஞத்தைக் கைக் கொண்டான். காந்தளூர்ச் சாலையில் கப்பல்களை அழித்தான், தெலுங்கவீமனது தென்கலிங்க நாட்டைத் தன்னடிப்படுத்தினான்.

(b) முன்னோர் செயலைத் தன்னுடைய தாகக்கூறிக் கொள்வது:—தேவேந்திரனோடு இனிது இருந்தது. வடிம்பு அலம்பநின்றுமால் கடலை எறிந்தருளியது. மலையத்துக் கயல் பொறித்தது.

(c) பிறசெயல்கள் :—தென் திருவாங்கூர் அரசன்மகளை மணந்து கொண்டான். அளப்பனவும் நிறுப்பனவும் ஆகிய கருவிகளில் கயல் மீனைப் பொறித்துள்ளான்.

(d) அறச் செயல்கள் :—அனந்த புரத்து எம்பெருமானுக்குப் பொன் மணிவிளக்கு நின்று எரியப் பத்து அமைத்தான். அதன்பொருட்டு அனந்த புரத்துக்கு அண்மையில் உள்ள நல்லூர் என்னும் ஊரைக் கொடுத்தான். தங்கள் குலதெய்வமாகிய கன்னி பகவதியார்க்குப் புறத்தாய நாட்டைக் கொடுத்தருளினான். தனது பிறந்த நட்சத்திரமாகிய தைப்பூசத்தின் மறு நாளில் வந்திருந்தவர்களில் வேண்டியவர்க்கு வேண்டியதைக் கொடுத்தான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

திருவளர - இலக்குமியின் திருவருள் பெருகவும்.

செயம்வளர - வெற்றி பெருகவும்.

தென்னவர்தம் குலம் வளர - பாண்டியர்களுடைய குலம் வளரவும்.

தேவேந்திரனோடு இனிது இருந்து - இவ்வாறு இருந்தவன் உக்கிர குமார பாண்டியன்.

வழுதியர் கோன்வடிம்பு அலம்ப நின்றருளி - கடல் தன்னை வணங்க நின்றருளியவன் உக்கிரகுமார பாண்டியன்.

மால் கடலை எறிந்தருளி - கடல் சுவற வேலை விட்டவன் உக்கிரகுமாரப் பாண்டியன்.

மலையத்துக் கயல் பொறித்து - பொதிய மலையில் கயல் மீனைப் பொறித்து.

கூபகர்கோன் - தென் திருவாங்கூர் நாட்டரசன்.

விழிஞம் - திருவனந்த புரத்துக்குத் தெற்கில் பத்துமைல் தூரத்தில் உள்ளது. இது ஒரு கடல் துறைப்பட்டினம். ஜடாவர்மன் பராந்தகன் என்னும் பாண்டியன் இப் பட்டினத்தைப் பிடித்துக் கொண்டான்; அதன் பிறகு முதற்குலோத்துங்கன் இப்பட்டினத்தைப் பிடித்து அதற்குக் குலோத்துங்க சோழன் பட்டினம் என்று பெயர் வைத்துள்ளான்; இப்பால் பதின் மூன்றும் நூற்றாண்டில் பராந்தக பாண்டியன் இப்பட்டினத்தைக் கைக் கொண்டான்; இவைகளால் இவ்விழிஞம் செல்வச் சிறப்புள்ளது என்று பெறப்படுகிறது.

கன்னிப்போர் - முதல் முதல் செய்யும் போர்.

மணியம்பலம் - சபையின் பெயர்

ஆயிரத்து எண்மர் அவிரோதம் பணிப்பணியால் - ஆயிரத்து எட்டுபேரும் விரோதமில்லாமல் (ஒற்றுமையாக) வேண்டிக் கொண்டபடி. [இவர்கள், அர

சியலை நடத்துவதற்கு ஆலோசனை கூறுவதற்காக நிய மிக்கப்பட்டவர்கள் ]

பறைபேர்த்துக் கல் நாட்டி, பறைகொட்டி, தான் செய்த வைகளைக் கல்லில் வரைந்து - நிறுத்தி

பண்டுள்ள பேர்தவிர்த்து - முன்புள்ள பெயரை நீக்கி

ஆங்கமைந்த தாயநல்லூர் அட - இத்தொடர்க்கு, ஆங்கு அமைந்துள்ள, தாயநல்லூர் என்னும் ஊரைக் கொடுத்து என்பர் திரு. T. A. கோபிநாதராயர் அவர்கள்; இத்தொடர்க்கு - ஆங்கு அமைந்ததாய நல்லூரை வென்று என்றும் பொருள் கொள்ளலாம்.

கன்னிபகவதியர் - இவர்பண்டியரின் குலதெய்வமாவர்.

தென்னவர்தம் குலதெய்வம் தென்குமரி கன்னியார் - இதில் கன்னியார் என்பதற்கு, கன்னியார்க்கு என்று பொருள் கொள்ளல் வேண்டும்,

தம் திருநாள் விழாவதனில் தைப்பூசப் பிற்றை ஞான்று - இங்குத் தம் என்பது அரசனை உணர்த்தும். இவ்வர சன் பிறந்தது தை மாசத்துப் பூச நட்சத்திரமாகும். 'நாம் பிறந்த தைப்பூசத்திருநாளுக்கு' - என்று இக் கல்வெட்டின் இறுதிப்பாகத்தில் வந்துள்ள தொட ரும் இதனை வலியுறுததும்

மாற்றுதே தியாகம் இட - வேண்டியார்க்கு. வேண்டிய தைக் கொடுத்து

பூமகள் - கன்னிகுமரி ; குளம் - ஊர்.

**புறத்தாய நாடு** :—இது ராஜராஜப் பாண்டி நாட்டு உத்தம சோழ வளநாட்டில் அடங்கியதொரு நாடாகும். இக்காலம் கன்னியா குமரிப் பிரதேசம் இந்நாட்டைச் சேர்ந்ததாகும் - 'அறத்தால் விளங்கிய ஆய்ந்த கேள்விப் புறத்தாயநாடு'—என்பதால் இன்நாட்டினர் அறச் செய லிலும், கல்வியறிவிலும் மேம்பாடுடையவர் என்று பெறப்படுகின்றது.

## உரை நடைப்பகுதிக்குக் குறிப்புரை

ராஜராஜப் பாண்டிநாடு - பாண்டி நாட்டை முதலாம் இராசராச சோழன் வென்ற பொழுது அதற்கு வைத்த பெயர்.

நாஞ்சி நாடு - மலையாளம் சில்லாவில் இது பொழுது ஒரு தாலுகாவாகும். நாஞ்சில் வள்ளுவன் என்னும் சங்கப்புலவர் தோன்றியது இந்நாடாகும்.

சந்தேச தேசப் பிரமாணம் - குறிப்பிட்ட தேசத்தின் அளவு.

கொழுக்குத்து - எல்லையைக் குறிப்பதற்கு பூமியில் நாட்டப் பட்டிருக்கும் முளை. A Pile driven into the earth ; a post marking the boundry etc. என்பர் திரு. கோபிநாதராயர் அவர்கள்.

நீர்வீழ்தாழ்வு - அருவி

நீர்கொள்ளி - வாய்க்கால்

கறடிமணல் - பெருமணல்

பள்ளிச்சந்தம் - சைனபுத்த கோயிலுக்கு விடப் பட்ட நிபந்தம்

நீர்வீழ்கறடு - அருவி

இவ்வுரை நடைப்பகுதியில் வந்துள்ள ஊர்களுள் சில இருக்குமிடம் :—கருங்குளம், பூசன்குடி, கிராத்திக்குளம், கறிம்பாடு, விசாபுரி, கேரளன் குறிச்சி, மணற்குடி, சுசீந்திரம், தோவாழை இவைகள் எல்லாம் தென் திருவாங்கூரில் இருக்கின்றன.

விசாபுரி - திருநெல்வேலிக்குத் தெற்கில் இருக்கிறது.

கருங்குள வளநாடு - திருநெல்வேலிக்குத் தெற்கில் உள்ள நாடாகும். விசாபுரி என்னும் ஊர் இந்நாட்டில் இருப்பதாகக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

# Inscription No. 18*

## அரிகேசரிதேவர் சாசனம்

சுபமஸ்து. பூமிசை வனிதை மார்பினிற்பொலிய நாமிசை கலைமகள் நலனுற விளங்கப் புயவரைமீது சயமகள் புணரக் கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச் சந்திரகுலத்து வந்தவதரித்து முந்தையோர் தவத்தின் முளையென வளர்ந்து தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து மன்பதை புரக்கமணி முடி புனைந்து சங்கர சரண பங்கயஞ்சூடிச் செங்கோலோச்சி வெண்குடை நிழற்றி வானவாரியு மன்னருள் வாரியுந் தானவாரியுந் தப்பாதளித்து மறக்களை பறித்து நல்லறப் பயிர் விளைத்துச் சிங்கையி லனுறையி லிராசையிற் செண்பையில் விந்தையி லறந்தையில் முதலையில் வீரை யில் வைப்பாற்…….ன்னரை வெண்கண்டெப்பாற்றி சையு மிசை விளக்கேற்றிப் பதினெண்…….கம்போற்றப் பதினெண் பாஷைப் பார்த்திபரனை வருந் திரையுஞ் சின்னமு முறைமுறை கொணர்ந்து குறைபல விரந்து குரைகழலிறைஞ்சவவரவர் வேண்டியதவரவர்க்கருளி அந்தணரனேகர் செந்தெழுலோம்ப விந்தைமுதல் அகரம் ஐந்திடத்தியற்றிச் சிவநெறியோங்கச் சிவாற்சனைபுரிந்து மருதூரார்க்கு மண்டபமமைத்து முன் ஒரு தூர் மூங்கி லுள் புக்கிருந்த சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப் பொற்கலத்தமுது பொலிவித்தருளிச் சண்பகவனத்துச் சங்கரர் தமக்கு மண்டபமமைத்து மணிமுடி சூட்டி விழாவணி நடாத்தி விரைப்புனலாடல் வழாவகை நடாத்த நின்மன்னருளதனுல் வற்றுவருவியும் வற்றிவற்

---

* Travancore Archalogical Series Vol. I Page 91.

கட முற்ற விக்காலத்துறுபுனல் நல்கென வேண்டியப் பொழுதே வேறிடத்தின்றிச் சேண்டரு புனலிற் செழும் புனலாட்டி மின்கால் வேணி விஸ்வநாதர்க்குத் தென் காசிப் பெருங்கோயில் செய்து நல்லாகமவழி நைமித்திக முடன் எல்லாப் பூசையும் எக்கோயிலினும் பொருள் முதலனைத்தும் புரையற நடாத்தித் திருமலி செம்பொற் சிங்காசனமிசை உலகமுழுதும் உடையாருடனே இலகு கருணை யிரண்டுருவென்ன அம்மையு அப்பனுமா யனைத் துயிர்க்கும் இம்மைப் பயனு மறுமைக் குறுதியு மேம்பட நல்கி வீற்றிருந்தருளிய ஸ்ரீ அரி......தேவரான பராக்ரம பாண்டிய தேவர்க்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது........ற்று இருபத்தொன்றுந்தியதியும் பூர்ணை யும் வெள்ளிக்கிழமையும் பெற்றசோதி நாள் தென்வாரி நாட்டு சித்ரநதி உத்தரதீரத்தில் தக்ஷிணகாசியிலே உடையார் விஸ்வநாதனுக்கு அபிநவமாக உபாநாதி ஸ்தாபி பய்யந்தமுந் திருப்பணி செய்து உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டித்து அர்த்த மண்டபம் இடை நாழிகை மஹா மண்டபம் ஸோபாநம் இவையுந் திருப்பணி செய்து திருப்பள்ளிஅறை நாச்சியார் முதலாக உள்ள திருவுடம்புகளும் ஏறி அருளப்பண்ணு வித்து ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து மேல் உடையார் விஸ்வநாதந் பூஜைக்கு அமுதுபடி சாத்துப்படி திரு மாலைத் திருப்பரிவட்டந் திருவிளக்கு உட்பட்ட பலநித்ய நியமங்களுக்கும் பல விஷே பூஜை திருநாட் செலவுக்கும் முன்னுள் இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்றுவது முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட பற்றுகளில் தென்வாரி நாட்டுத் தென்காசிக்குப் பெருநான் கெல்லை யாவது கீழ் எல்லை புலியூற் பற்றுன காராண்குளத்தில் நீர் நக்கலுக்கும் பரிம்புக்கும் புலியூர் அகரப்பற்றில்

புஞ்சைக்கும் நாராயண ஸ்ரீபாதங்கள் மடப்புறத்தில் மேல் எல்கைக்கு மேற்கும் தென் எல்கை சித்ராநதிக்கு வடக்கு, மேல் எல்கை குன்றக்குடிப் பரிம்புக்குக் கிழக்கும்........சென்னுய்ப் பொற்றைக்கும் குத்துக் கல்லுக்கும் தெற்கும் ஆக இன்னுன் கெல்......ட்ட பற்றும், இந்த நதிக்கு தக்ஷிண தீரத்தில் வாயுளான் குடிப் பற்றுக்குப் பெருநான் கெல்கையாவது, கீழ் எல்கை புலியூர் அணைக்கும் திருச்சாலைக் குடிப்பற்றுக்கும் ஆழங்காலுக்கு மேற்கும், தென் எல்கை திருச்சாலைக் குடிப் பற்றுக்கும் பராக்ரயபாண்டிய சதுர்வேதி மங்கலத்து பட்டகள் அகரப்பற்றில் வடவெல்கைக்கும் உடையார் திருக்குற்றுலமுடைய நாயனுர் பழந்தேவதானத்துக்கு வடக்கும், மேல் எல்கை வாயுளான்குடி அணைக்குக் கிழக்கும் வட எல்கை சித்ராநதிக்குத் தெற்கும், ஆக இன்னுன் கெல்கைக்குட்பட்ட பற்றும், குன்றக்குடிப் பற்றுக்குப் பெருநான் கெல்கையாவது, கீழ் எல்கை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும், தென் எல்கை சித்ரா நதிக்கு வடக்கும், மேல் எல்கை செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூர்க்குப் போகிற பெருவழிக்குக் கிழக்கு வட எல்லை கடமர் குளத்துக்குத் தெற்கு ஆக இன்னுன் கெல்லைக் குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்றுலமுடைய நாயனுர் தேவதானமான நிலம் ஒன்பது மாமுந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் நீங்கலாக உள்ள பற்றும், பராக்கிர பாண்டிய நல்லூற் பற்றுக்குப் பெருநான் கெல்கையாவது, கீழ் எல்கை இலுப்பைத் தொண்டிற் பெருவழிக்கு மேற்கும், தென் எல்கை இக்குளத்தின் நீர்நக்கலுக்கு வடக்கும், மேல் எல்கை உடையார் திருக்குற்றுலமுடை........பழந் தேவதானமான திருச்சாலைக்குடிப் பற்றுக்குக் கிழக்கும்

வட எல்கை சித்ர.. ...தெற்கும், ஆக இன்னான் கெல் கைக் குட்பட்ட பற்றில் இருங்கிண்டி ஸ்ரீபத்பநாபன் தான இறையிலி நிலமிரண்டுமாவும் நீங்கலாக உள்ள பற்று நல்லூற்பற்றில் வள்ளை முட்டமும், இக்குளத்தில் நீர்பாயும் நிலமாய் வடவூற்பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்றுமா அரையும் ஆக இப்பற்றுக்குப் பெரு நான் கெல்கையாவது கீழ் எல்கை காடேற்றிப் பற்றுக்கு மேற்கும். தென் எல்கை வடவூர் பற்றிற் செங்குளத்தில் நீர் பாயும் நிலத்துக்கும் தஞ்சாவூற் பெருங் காலுக்கும் அனுபோகமழகியான் குளத்தில் நீர்பாயும் பற்றுக்கு வடக்கும் மேல் எல்கை இக்குளத்தில் நீர் நக்கலுக்கும் தவணைப்பற்றுக்குங் கிழக்கு, வட எல்கை தஞ்சாவூரில் நின்றும் தவணைக்குப்போகிற பெருவழிக்குத் தெற்கும் ஆக இன்னான் கெல்கைக்குட் பட்ட பற்றும், வடவாரி நாட்டுப் பைம்பொழில் பற்றில் நல்லாண்பிள்ளைப் பெற்றானுக்கும் விஸ்வநாதப் பேரேரிக்கும் பெருநான் கெல்கையாவது கீழ் எல்கை செங்கோட்டைப் பிடாரி யார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூற்குப் போகிற பெருவழிக்கு மேற்கு தென் எல்கை ஆற்றுக்கு வடக்கு மேல் எல்கை பைம்பொழிலில் நின்றும் நல் லூற்குப் போகிற பெருவழிக்கும் முழங்கால் முட்டிப் பாறைக்குங் கிழக்கு வட எல்கை தேனிடு பொற்றைக்குத் தெற்கு ஆ..........ன் கெல்கைக்குட்பட்ட பற்றும் முப்ப தாவது மேஷ ஞாயிற்று இருபத்தே.........தியதியும் பூர்வபக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புணர் பூசத்து நாள் நாம் முன்புவிட்ட பற்றுக்கள் நீங்கலாக, நாளது பூஜெச் சிலவுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுல நல்லூரான புலியூர் பற்றுக்கும் வீர பாண்டிய நல்லூர்ப் பற்றுக்கும் பெருநான் கெல்கை

யாவது புலியூர் பற்றுக்கு பெருநான் கெல்கைக் கீழ் எல்கை திருவெண் காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப் பற்றுக்கு மேற்கு தென் எல்கைச் சிற்ருற்றுக்கு வடக்கு மேல் எல்கை பழந்தேவதானமான தென்காசிப் பற்றுக்குக் கிழக்கு வட எல்கை ஆயர் குடிப்பற்றுக்குத் தெற்கு ஆக இன்னுன் கெல்கைக் குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ருல முடைய நாயனுர் தேவதானமும் உடையார் விக்கிரம பாண் டீஸ்வர முடைய நாயனுர் தேவதானமும், நயினுர் திருவிருந்தபெருமாள் திருவிடையாட்டமும் ஸ்ரீ கிருஷ் ணந் திருவிடையாட்டமும் பராக்ரம பாண்டிய நல்லூ ரில் நயினுர் திருவேங்கட நாதன் திருவிடையாட்டமும் முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறமும் அகப்பற்றும் நீங்கலாக இன்னுன் கெல்கைக்குட்பட்ட பற்றும், வீரபாண்டிய நல்லூருக்குப் பெருநான்கெல்கை யாவது கீழ் எல்கை தட்டான் குளத்துப் பரிம்புக்கு மேற்கு, தென் எல்கை திருச்சிற்லம்பலத்துக் காலான இராசகுலரா......காலுக்கும் நயினுர் திருவிருந்த பெரு மாள் திருவிடையாட்டமான ஆகவராம.....துக்கும் வடக்குமேல் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப் புறமான பாட்டக்குறிச்சிப் பற்றுக்குக்கிழக்கு வட எல்கை விந்தனூர்ப் பெருவழிக்குத் தெற்கு ஆக இன்னுன் கெல்கைக் குட்பட்ட பற்றும் ஆக இப்பற்று களில் பெருநான் கெல்கைக்குட்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மரவடை பட்டடை கொடித் தோட்டம் செக்கிறை மற்றுமுள்ள ஸமஸ்த ப்ராப்திகளும் முப்ப தாவது பசான முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இப்படியாதியிலே இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு ஆசந்த்ர தாரவத் இவ்வாலயம் உள்ள அளவும்

கையாண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வற நடத்திப் போதவும் பாற்க - இவை கிடாரத் துடையான் எழுத்து உ துல்யம்.

## விளக்கவுரை

**கல்வெட்டு இருக்குமிடம்** :—திருநெல்வேலிச் சில்லா தென் காசி விசுவநாதர் கோயில் கருப்ப இல்லின் அடிப்பாகம்.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்** :— அரிகேசரி - பராக் கிரம பாண்டியன்.

**அரசனைப்பற்றிய பொதுக்குறிப்பு** :— இவன் கி. பி. 1422 முதல் கி. பி. 1463 முடிய ஆட்சி புரிந்தவன். தென்காசிப் பெருங் கோயிலை எடுப்பித்தவன் இம்மன்னன் ஆவன். இவனது சிவபத்தியின் மாண்பு பெரிதும் போற்றற் குரியது.

**கல்வெட்டுத் தோன்றிய காலம்** :—கி. பி. 1451.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்

I (a) **வீரச்செயல்** :— சிங்கை, அனுரை, இராசை, சண்பை, விந்தை, அறந்தை, முதலை, வீரை, வைப்பாறு ஆகிய ஊர்களில் தன் பகைவனை வென்றான். பதினெண் மொழிப் பார்த்திவர் அனைவரும் திறையும் சின்னமும் முறை முறை கொணர்ந்து, குறைபல இரந்து குரைகழல் இறைஞ்ச அவரவர் வேண்டியது அவரவர்க்கு அருளினான்.

(b) **அறச்செயல்** :—அந்தணர் செந்தழல் ஓம்ப, விந்தை முதலான ஐந்து ஊர்களில் அகரங்களை அமைத்துள்ளான். திருப்புடைமருதூர்க் கோயிலில் மண்டபம் எடுப்பித் தான். திருநெல்வேலிச் சிவபெருமானுக்கு அர்த்தயாம வழிபாட்டிற்குப் பொற்கலத்தில் அமுதுசெய்வித்தருள ஏற்பாடு செய்தான். திருக்குற்றாலத்துச் சிவபெருமா னுக்கு மண்டபம் அமைத்து மணிமுடி சூட்டி விழாவும்

நடத்தினான். வறட்சி உறுகாலத்து, திருமுழுக்கிற்குச் சேண் புலத்திலிருந்து நீர் கொணர ஏற்பாடு செய்தான். தென்காசியில் விசுவநாதர்க்குப் பெருங்கோயில் அமைத்தான். எல்லாக் கோயில்களிலும் ஆகம விதிப்படி நித்திய நைமித்தியங்களை நடத்தச் செய்தான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

சுபமஸ்து - நன்மை உண்டாகுக

பூமிசைவனிதை - இலக்குமி

நாமிசை - நாவிலே

புயவரைமீது சமயகள் புணர - வரைபோன்ற புயங்களில் வெற்றித்திரு சேர

கயல்இணை - இரட்டை மீன்கள். (இரட்டை மீன்கள் பொறிக்கப்பெற்ற கொடி பாண்டியர்க்கு உரியது)

மன்பதைபுரக்க - மக்கள் கூட்டத்தைக் காக்க

மணிமுடி புனைந்து - இரத்தினக் கிரீடத்தை அணிந்து

சங்கரசரண பங்கயஞ் சூடி - சிவபெருமானுடைய பாதங்களாகிய தாமரை மலர்களைத் தன்னுடைய முடியிலே சூடி

வானவாரியும் - மழைவளமும்

அருள்வாரியும் - இரக்கமாகிய மழையும்

தானவாரியும் - கொடையாகிய மழையும்

மறக்களை பறித்து - பாவமாகிய களைகளைப் பறித்து

இராசை - சங்கரநயினார் கோயில். இது திருநெல்வேலிச் சில்லா, சங்கர நயினார் கோயில் தாலூகாவின் தலைநகர்.

சண்பை - இது சண்பகவனம் எனவும் பெயர் பெறும். இது திருக்குற்றாலமாகும். இது திருநெல்வேலிச் சில்லா தென்காசித் தாலூகாவில் இருக்கிறது.

விந்தை - இது விந்தனூர் ஆகும். இது திருநெல்வேலிச் சில்லா செங்கோட்டைத் தாலூகாவில் இருக்கிறது.

முதலை - இது முதலைக் குளமாகும் - திருநெல்வேலிச் சில்லா நாங்குனேரித் தாலூகாவில் இருக்கிறது.

வீரை - இது வீரகேரளம்புதூராகும். இது திருநெல் வேலிச் சில்லா செங்கோட்டைத் தாலூகாவில் இருக் கிறது.

எப்பாற்றிசையும் இசை விளக்கேற்றி - எத்திசையிலும் புகழாகிய விளக்கை ஏற்றி

அகரம் - பார்ப்பனச்சேரி

மருதூராற்கு - பாண்டி நாட்டிலுள்ள திருப்புடை மரு தூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு.

மூங்கில்தூறு - மூங்கில் புதர் (மின்ஒருதூர் - இதை முன் ஒரு தூறு - என்று திருத்திக்கொள்ள வேண்டும்)

சிற்பரர் - சிவபெருமான்

வழாவகை - தவறுதபடி

நின் மன்அருள் அதனால் - உன் நிலை பெற்ற அருளால்

வற்கடம் - பஞ்சம்

மின் கால் - மின்னலைக் கக்குகின்ற

வேணி - சடையையுடைய

புரையற - குற்றம் நீங்க

இலத கருணை இரண்டுருவென்ன - விளங்குகின்ற கரு ணையே இரண்டு வடிவம் எடுத்தாலொத்த

இம்மைப் பயன் - புகழ்

மறுமைக்கு உறுதி - முத்தி ; வீடு பேறு

இருபத்தொட்டாவதின் எதிராவது - இருப்பத்தொன்ப தாம் ஆண்டு.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

அரிகேசரி பராக்கிரம பாண்டியன், தென் காசி விசுவ நாதப் பெருமானின் திருக்கோயிலை அடிமுதல் கலசம் வரை திருப்பணி செய்வித்து விசுவநாதப் பெருமானை

அதில் எழுந்தருளுவிக்கச் செய்தான். அப்பெருமானுக்கு அர்த்த மண்டபம், மகா மண்டபம், சோபானம் இவை களையும் திருப்பணி செய்வித்தான். திருப்பள்ளியறை நாச்சியார் முதலாக உள்ள திருமேனிகளைச் செய்து வைத் தான். மதில் கோபுரம் இவைகளையும் எடுப்பித்தான். விசுவ நாதரின் வழிபாட்டிற்குச் சாத்துபடி, திருமாலை, திருப்பரி சட்டம், திருவிளக்கு உட்பட்ட பல நித்திய நியமங்களுக் கும், பல விசேட பூசைகளுக்கும், திருநாட் செலவுகளுக்கு மாக, தன் 25 - ஆண்டில் தென் காசி, வாயுளான், குன் றக்குடி, நல்லூர் வடவாரி நாட்டுப் பைம்பொழில் ஆகிய இவ்வூர்களைக் கொடுத்துள்ளான். இதுபொழுது தன் ஆட்சியின் 29-ஆம் ஆண்டில் புலியூர், வீரபாண்டியன் என்னும் ஊர்களை விட்டுள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

சோதி நாள் - சுவாதி நாள் (நாள்—நட்சத்திரம்)

சித்திர நதி - தென் காசியில் ஓடும் ஆறு

அபிநவமாக - புதிதாக

உபாநாதி - அடிமுதல்

ஸ்தூபி பரியந்தம் - கலசம் வரை

பிரதிஷ்டித்து - எழுந்தருளச் செய்வித்து

அர்த்த மண்டபம் இடை நாழிகை - அர்த்த மண்டப மாகிய இடை நாழிகை. இடை நாழிகை என்பது அர்த்த மண்டபத்துக்கு உரிய தமிழ்த் தொடராகும்.

ஸோபாநம் - படிகள்

திருவுடம்புகளும் - திருமேனிகளும்

ஏறி அருளப் பண்ணுவித்து - பிரதிஷ்டை செய்வித்து (Set up the images)

சாத்துப்படி - அலங்காரம்.

திருப்பரி வட்டம் - (திருப்பரி சட்டம் என்பதே திருந்திய சொல்.) - கடவுளுக்குச் சாத்தும் ஆடை

இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்ருவது - இருபத்தைந்தாம் ஆண்டில்

பற்றுகளில் - ஊர்களில்

எல்கை - எல்லே (Boundary) எல்கை தான், இக்காலம் எல்லே என்று வழங்குகின்றது.

புலியூர் - திருநெல்வேலிச் சில்லா, தென்காசித் தாலூக்காவில் இருக்கிறது. இதற்கு இராசகுலராம நல்லூர் என்ற வேறு பெயரும் உண்டு.

மடப்புறம் - மடத்துக்கு இறையிலியாக விடப்பட்ட நிலம்

நாராயண ஸ்ரீபாதங்கள் - ஒரு வைணவ சந்நியாசி.

பரிம்பு - பாழிடம்.

இலத்தூர் - திருநெல்வேலிச் சில்லா செங்கோட்டைத் தாலூக்காவில் உள்ளதொரு ஊர்.

இருங்கிண்டி - ஊரின் பெயர்

பைம்பொழில் - திருநெல்வேலிச் சில்லா தென்காசித் தாலுக்காவில் உள்ள ஊர் - இப்பொழுதும் அதே பெயரோடு வழங்குகிறது

விசுவநாதப் பேரேரி :— இது அரிகேசரி பராக்கிரம பாண்டியனுல் வெட்டப்பெற்றதொரு ஏரி.

செங்கோட்டை - இது திருநெல்வேலிச் சில்லாவில் செங்கோட்டைத் தாலூகாவில் உள்ளதொரு ஊர்.

வீரபாண்டிய நல்லூர் - இக்காலம் வீரபாண்டியம் என்று வழங்கப் பெறுகின்றது. திருநெல்வேலிச் சில்லா நாங்குனேரித் தாலூகாவில் உள்ளது.

பட்டாக்குறிச்சி - திருநெல்வேலிச் சில்லா தென்காசித் தாலுக்காவில் உள்ள ஊர்

திருவிடையாட்டம் - திருமாலுக்கு அளிக்கப்பெற்ற நிலம். திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டம், ஸ்ரீ கிருஷ்ணன் திருவிடையாட்டம் - என்னும் தொடர்களே இதைப் புலப்படுத்தும்

மரவடை - மரத்திற்கு உரிய வரி. இச்சொல் மரவிடை என்றும் வரும். பழம் கொடுக்கும் மரம் என்றும் பொருள் உண்டு.

மாவடை - கிராமத்தில் கால்நடை அடையும் இடம்.

பட்டடை - இறைப்புப் பாசனமுள்ள நஞ்சைத்தாக்கு

கொடித்தோட்டம் - வெற்றிலைத் தோட்டம்.

செக்கிறை - செக்குக்கு விதிக்கப்பட்ட வரி

ஸமஸ்த ப்ராப்திகளும் - எல்லாப் பேறுகளுக்கும்

பாசனம் - சம்பா (ஒருபோக சாகுபடி).

பிடிபாடாக - ஆதரவாக

ஆசந்த்ரத தாவரத் - சந்திரனும் நட்சத்திரமும் உள்ள வரை.

துல்யம் - அரசன் கையெழுத்து. (The Sign manual of the King)

## பொதுக் குறிப்பு

அரிகேசரி தேவரான பராக்கிரம பாண்டியர் மனைவியாரின் பெயர் :—உலக முழுதும் உடையாள்.

அரிகேசரி தேவரான பராக்கிரம பாண்டியரும் அவர் மனைவியாரும் பாராட்டப்படும் விதம் :—இலகு கருணை இரண்டு உருவென்ன அம்மையும் அப்பனுமாய் அனைத்துயிர்க்கும் இம்மைப் பயனும் மறுமைக்கு உறுதியும் மேம்பட நல்கி - என்று பாராட்டப் படுகின்றனர்.

முன்னொரு தூறு மூங்கிலுள் புக்கிருந்த சிற்பரர் :— இத்தொடரில் குறிக்கப்பெற்ற வரலாற்றுக் குறிப்பு - வேற்றரசர் படையெழுச்சியை முன்னிட்டுத் திருநெல்வேலிச் சிவபெருமானை ஒரு மூங்கில் புதரின்கீழ் புதைத்து வைத்திருந்தனர் - பல ஆண்டுகள் வரை சிவபெருமான் அங்கே இருந்தார் - இந்நிகழ்ச்சி எவர்க்கும் தெரிந்திலது. மூங்கிலும் அழிந்து போய்விட்டது. ஒரு நாள் ஒரு ஆயர் குலப் பெண் அவ்வழியே பால் கொண்டு செல்கையில்

கால் தடுக்கலுற்று கீழேவிழ நேர்ந்தது. அடுத்தடுத்தும் இப்படியே நிகழ்ந்தது. இதை அவ்வம்மையார் தன் கணவனிடம் கூற, அங்கே தோண்டிப் பார்க்கையில் சிவபெருமான் திருமேனியைக் கண்டு, கோயிலில் கொண்டு வைத்தார்கள். இது "வேயின்ற மேனிதனை வெட்டினனே இடையன்" என்று தொடங்கும் இரட்டைப் புலவர் பாடலாலும் அறியக் கிடக்கின்றது.

## Inscription No 19*

## பராக்கிரம பாண்டியதேவர் சாசனம்

சுபமஸ்து. ஸ்வஸ்திஸ்ரீ புவநேக வீரசந்த்ர குலப்ரதீப கோஜடிலவர் மத்ரிபுவநச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் பெருமாள் அபிராம பராக்கிர பாண்ட்ய தேவர் நந்தநரான ஸ்ரீ பெருமாள் குலசேகர தேவரான பராக்ரம பாண்டிய தேவற்குயாண்டு சகாப்தம் கூசாகூஎ மூன்ருவது விஸ்வாவஸுவர்ஷம் அற்பசிமாஸம் முப்பதாந்தியதியும் அபரபக்ஷத்து ஏகாதசியும் சுக்ரவாரமும் வைத்ருதி யோகமும் ஸிம்ஹ கரணமும் பெற்ற உத்திரத்து நாள் தென்னரி நாட்டு செங்கோட்டையில் உடையார் குலசேகர முடைய நயினற்கு தேவதானம் பாட்டமாக குடுத்தநிலம் அரைமாவுக்கு நாம் சேர்த்துக் கொடுத்த நிலமாவது மேற்படி நாட்டு மேற்படியூரில் மேற்படியார் அஞ்சாலியில் மேல்வாரம் தவிர்த்துக் குடுத்த குளப்புறவு பதினொன்ருங் கண்ணாறு தடிஆறு

* Travancore Archaelogical Series Vol. I. Page 103.

நிலம் அரைக் காணி முந்திரிகை பன்னிரண்டாங் கண்ணுறு தடி எட்டு நிலம் அரைக்காணி முந்திரிகை, பதின் மூன்றாங் கண்ணுறுதடி அஞ்சு நிலம் அரைக் காணி இதுவும் ஆக நிலம் அரைமாவும் நாளது முதலுக்கு நாங்கொள்ளும் முறைபாடு எப்பேர்ப் பட்டதும் நம்வரியிலார் கணக்கிலும் தவிர்த்து ஆசந்த்ர தராவற் செம்பிலும் சிலையிலும் வெட்டி கைய் யாண்டு கொள்ளவும், துல்யம் - பாற்க இவை......

## விளக்கவுரை

கல்வெட்டு இருக்குமிடம் :—திருவாங்கூர் இராச்சியத் தில் செங்கோட்டைச் சிவன்கோயிலினது கருப்ப இல்லின் தென்புறச்சுவர். செங்கோட்டை, திருநெல்வேலி சில்லா வில் தென்காசிக்கு அருகில் இருக்கிறது.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :—குலசேகர தேவ ரான பராக்கிரமபாண்டியர்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு :— இவன் திரிபுவனச்சக்ர வர்த்திகள், கோனேரின்மை கொண்டான் அபிராம பராக்கிரமபாண்டியரின் மகன் ஆவன். இவன் கி.பி. 1542ல் அரியணை ஏறினன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :—சகம் 1467 அதாவது கி. பி. 1545.

அறியப்படும் செய்திகள் :—குலசேகர தேவரான பராக் கிரமபாண்டிய தேவர், தென்னாரி நாட்டுச் செங்கோட்டை, குலசேகர முடைய நாயனார்க்கு முன் இருந்த நிலம் அரை மாவுடன், தானும் அரைமாநிலத்தைச் சேர்த்துக் கொடுத் துள்ளான்.

## குறிப்புரை

புவநேக வீர சந்திரகுல ப்ரதீப - உலகத்தில் ஒரே வீர னும், சந்திரகுலத்துக்கு விளக்காய் உள்ளவனும்

சடிலவர்மன்—(சடையவர்மன்) பாண்டியர்கள் தரித்து வந்த சடையவர்மன், மாறவர்மன் - என்னும் பட்டங் களுள் ஒன்ருகும்

கோநேரின்மை கொண்டான் - தனக்கு ஒப்பானவர் இலர் என்று பொருள்படும் பட்டம்.

இவ்வாறே சேரரின் ஒருகிளையினரான மழவர்கள் தங் களை விசயஓப்பில்லாத மழவர் - என்று கூறிக்கொள்வ, துண்டு. நந்தனரான - மகனை.

சகாப்தம் 1467 இல் மூன்ருது - இங்கு மூன்ருவது என் பது. பராக்கிரம பாண்டியர் அரியணை ஏறிய மூன்ரும் ஆண்டில் சகாப்தம் 1467 ஆகும். எனவே அவர் அரியணைஏறியது சகாப்தம் 1464 ஆகும்.

வைத்ருதி யோகம் - 27 - யோகங்களுள் ஒன்று.

ஸிம்ஹ கரணம் - ஸிம்ம லக்கனம்

தென்ணரிநாடு - பாண்டிநாட்டுப் பிரிவுகளில் ஒன்று. செங் கோட்டைமுதலான ஊர்கள் இந்நாட்டில் அடங்கி யிருந்த செய்தியைக் கல்வெட்டுக்கள் புலப்படுத்து கின்றன.

தேவதானப் பாட்டமாக - வரியைக் கோயிலார் வசூல் செய்து கொள்வதாக,

அஞ்சாலி - நெல்

கண்ணறு - சிறுவாய்க்கால்.

தடி-வயல் (இக்காலம் தளைஎன்று வழங்கப் பெறுகின்றது.) " தடி ஒன்றுக்கு அறுக்குமநறு குறுணியும் அடிக்கு மநறு குறுணியும்" என்னும் புதுக்கோட்டை 435 எண் ணுள்ள கல்வெட்டுப் பகுதியும் இதை வலியுறுத்தும்.

## Inscription No. 20*

## வாலக் காமயர் சாசனம்

சுபமஸ்து. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் கூசாங இதன் மேல் செல்லா நின்ற பிலவ ஸம்வத்ஸரத்து கும்ப

* Epigraphia Indica Vol. iii page 72

நாயற்று பூர்வபக்ஷத்து பூறுணையும் ஆதித்தவாரமும் பெற்று மகத்து நாள் ஸிம்ஹ பிரஹஸ்பதி மஹாமக புண்ய காலத்திலே ஸ்ரீமந் மஹா மண்டலேச்வரந் சோழர் பீமந் சோழநாராயணன் உரையூர் பூர்வராதீச் வரந் வாலக் காமயர்ஆந அக்கல்ராசர் நாயனுர் அழகிய திருவானைக்காவுடைய நாயனுர் கோயில் ஆதிசண் டேச்வர தேவர் கன்மிகளுக்குக் குடுத்த தன்ம சாதனப் பட்டயம். நாயனுர் அழகிய திருவானைக்கா வுடைய நாயனுர் வடகரை வெண்கோன் குடியில் திருவேட்டைஆக எழுந்தருளுகிற திருநாள் மண்டபச் சிறப்புக்கும் நாச்சியார் அகிலாண்ட நாயகியார்க்குக் காலசந்தியாக அமுது செய்தருளி தன்ம வெச்சமாக நடக்கிற ஒரு தளிகை அமுது படிக்கும் திருமார்கழிச் சிரப்பு அம்முது செய்யவும் திருநந்தவனம் பயிர் செய் கிற தோப்பு ஆள் இலக்கைக்குமாக நம்முடைய நாய கக் கட்டணமான வடகரை வெண்கொன் குடியில் செந்த இராஜவிபாடன் நிலம்வேலி. இந்த நிலம் வேலிக்கும் உண்டான கரம் பொன் முதல் நெல்முதல் உண்டானது முன் எழுதின வகைப்படியிலே சந்திரா தித்தவரையும் அனுபவித்துக் கொள்ளக் கடவராக வும். இந்த தன்மத்துக்கு அகுதம் பண்ணினவன் உண்டாஞல் கங்கைக் கறையிலே கோவதையைக் கொன்ற பாவத்திலே போகக் கடவராகவும்.

## விளக்க உரை

கல்வெட்டு இருக்குமிடம் :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, திருவரங்கத்திற்கு அருகிலுள்ள ஜம்புகேஸ்வரம் (திரு வானைக்கா) சிவன் கோயிலின் இரண்டாம் பிராகாரத்து வடபுறச் சுவர்.

**கல்வெட்டில் குறிப்பிடப் பெற்ற தலைவன் :**—வாலக்காமயர் ஆன அக்கலராச நாயனார்.

**தலைவனைப் பற்றிய பொதுக் குறிப்பு :**—இவன் உறையூரைப் பூர்வீக இடமாகக் கொண்டவன். சோழர்களுள் தன்னைப் பீமன் என்று சொல்லிக் கொள்கிறான். மகா மண்டலேஸ்வரன் என்னும் பட்டமுடையவன். விசய நகர பரம்பரையின் கடைசி அரசனுடைய அரசியல் தலைவன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :—சகம்1403 அதாவது கி. பி. 1481

**கல்வெட்டினால் அறியப்படும் செய்தி :**—திருவானைக்காவுடைய நாயனார் வடகரை வெண் கோன் குடியில் திருவேட்டையாக எழுந்தருளுகிற திருநாள் மண்டபச் சிறப்புக்கும், அகிலாண்ட நாயகியார்க்குக் காலசந்தியாக அமுது செய்தருளி தன்ம எச்சமாக நடக்கிற ஒருதளிகை அமுது படிக்கும், திருமார்கழிச் சிறப்பு அமுதுக்கும், நந்தவனம் பயிர் செய்கிறவனுக்குக் கூலிக்கும் ஆக, வெண் கோன் குடியைச் சேர்ந்த இராஜாவிபாடன் என்னும் பேர் உள்ள நிலத்தில் ஒரு வேலி நிலத்தை வாலக்காமயர் ஆன அக்கலராச நாயனார் ஆதி சண்டேஸ்வர தேவகன்மிகளிடம் தன்ம சாதனப் பட்டையம் செய்து கொடுத்தனர்.

## குறிப்புரை

சுபமஸ்து - நன்மை உண்டாகுக

பிலவஸம்வத்ஸரத்து - பிலவ என்னும் பெயருடைய வருடத்து

கும்ப நாயற்று - மாசி மாதத்து

ஸிம்மபிரஹஸ்பதி - சிம்மராசியில் குருவரும் போது

பூர்வாதீச் சரந் - பழமையாக உடையவன்

சோழ நாராயணன் - இயற் பெயர்

தேவர் கன்மிகள் - கோயில் வேலை பார்ப்பவர்கள்

வடகரை வெண்கோன் குடியில் - காவிரிக்கு வடக்கே யுள்ள வெண்கோன் குடியில். இவ்வூர் திருவானைக் காவிற்கு வடக்கே ஐந்து மைல் தூரத்தில் இருக்கி றது. இதுபொழுது வெங்கங்குடி என்று வழங்கப் படுகிறது.

திருவேட்டை - புரட்டாசி மாதத்தில் விசயதசமி நாளில் சிவபெருமான் எழுந்தருளும் விழா நாள்.

தன்ம எச்சமாக - தருமத்துக்கு விநியோகம் செய் வதற்காக

திருமார்கழிச் சிரப்பு - இதில் சிரப்பு என்பது சிறப்பு என்றிருக்க வேண்டும்

இலக்கைகு மாக - கூலிக்குமாக

உண்டான கரம் - உண்டான வருமானம்

கறையிலே - இதைக் கரையிலே என்று திருத்திக் கொள்ள வேண்டும்

## பொதுக் குறிப்பு

மாசி மாதத்தில் சிம்ம ராசியில் குருவரும்போது மகா மகம் வரும். இவ்வாறு வருவது 12 வருடங்களுக்கு ஒரு முறையாகும்.

இராஜாவிபாடன் - இது இங்கே நிலத்தின் பெயராக இருப்பினும், விஜய நகர அரசர்களின் பட்டமாகவும் வரும்.

செத்த இராஜவிபாடன் - இதை, சேந்த இராஜவிபாடன் என்று திருத்திக் கொள்ளல் வேண்டும்.

உரை முற்றுப் பெற்றது

# சில விசேடக் குறிப்புக்கள்

**காந்தளூர்ச்சாலை கலம் அறுத்த மன்னர்கள்:**—முதலாம் இராசராச மன்னன் - (முதற் கல்வெட்டு), முதலாம் இராஜாதி ராஜதேவன் - (7-ஆம் கல்வெட்டு), பராந்தக பாண்டியன் - (17-ஆம் கல்வெட்டு).

**திரிபுவனச் சக்கரவர்த்தி – என்ற பட்டத்துடன் ஆண்ட மன்னர்கள் :**—முதற்குலோத்துங்க சோழன் - (8 - ஆம் கல்வெட்டு), விக்கிரம சோழன் - (11-ஆம் கல்வெட்டு), வீரபாண்டியன் - (16-ஆம் கல்வெட்டு).

**சதுர்வேதி மங்கலங்கள் இருந்த ஊர்கள் :**—

ஜயங்கொண்ட சோழமண்டலத்து காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலம்.

ஜயங் கொண்ட சோழமண்டலத்து செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு ராஜ சூளாமணிச் சதுர்ப்பேதி மங்கலம், குலோத்துங்க சோழவள நாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான பாண்டியனை இருமடி யென்கொண்ட சோழ சதுர்ப்பேதி மங்கலம்.

காவிரிப்பாக்கமாகிய அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலம்.

**மனுநெறி விளங்கிட அரசாண்டவர் :**—இராஜகேசரி பன்மரான உடையார் ஸ்ரீ வீராஜேந்திர தேவர்.

**மனுநெறி நின்று அஸ்வமேதஞ் செய்து அரசாண்டவர் :**—இராஜ கேஸரிவந்மரான உடையார் ஸ்ரீ ராஜாதி ராஜ தேவர்.

**பழைய சாசனங்களை மீண்டும் புதுப்பிக்கும் முறை கூறப் பட்டுள்ள இடங்கள் :**—வாணமா தேவியார் சாசனம், திக்காலி வல்லம் கோயில் சாசனம்.

*அரச மாதேவியாரின் பெயர்கள் :—*

முதற் குலோத்துங்கன் மனைவிமார்:—*தியாகவல்லி உலகுடையாள். ஏழிசை வல்லபி ஏழுலக முடையாள். உலக முடையாள்.*

விக்கிரம சோழதேவரின் மனைவி:—*முக்கோக்கிழான் அடிகள்.*

வீரபாண்டியன் மனைவி பெயர் :—*திரைலோக்கிய முழுதுடையாள்.*

அரிகேசரி தேவரான பராக்கிரமபாண்டியர் மனைவி :—*உலக முழுதுடையாள்.*

*ஆழ்வார் அல்லது திருமாலின் பெயர்கள் :—*

மணிமங்கலமான இராஜ சூளாமணிச் சதுர்ப்பேதி மங்கலத்து ஆழ்வாரின் பெயர்:—**காமகோடி விண்ணகர ஆழ்வார்.**

திரு அத்தியூர் ஆழ்வார் பெயர் :—*அருளாளப் பெருமாள்.*

*வீராபிஷேகம் செய்துகொண்ட மன்னன் :—*

கங்கை கொண்ட சோழனது மகனாகிய விஜயராஜேந்திரன். (4 – ஆம் கல்வெட்டு)

ஜெயங்கொண்ட சோழமண்டலத்திற்கும், சோழமண்டலத்திற்கும் உள்ள உட்பிரிவுகளின் பெயர் வேற்றுமை :—ஜெயங்கொண்ட சோழமண்டலம் :—கோட்டங்களாகவும், கோட்டங்களின் கீழ் நாடுகளாகவும், நாடுகளின் கீழ் தனியூர், சதுர்வேதி மங்கலங்கள் ஆகவும் பெயர்களைப் பெற்றிருந்தது.

சோழமண்டலம் :— வளநாடுகளாகவும், வளநாடுகளின் கீழ் நாடுகளாகவும், கூற்றங்களாகவும் இவைகளின் கீழ் ஊர்சதுர்வேதி மங்கலங்களாகவும் பெயர்களைப் பெற்றிருந்தது.

*அரசர் பெயரால் வழங்கும் ஊர்களுள் சில:—வீரபாண்டிய நல்லூர். பராக்கிரமபாண்டிய சதுர்வேதி மங்கலம்.*

*பற்று என வழங்கும் ஊர்களுள் சில :—*

நல்லூர்ப்பற்று. வடவாரி நாட்டுப் பைம்பொழில் பற்று. புலியூர்பற்று.

***சிலசொற் றொடர்களுக்குப் பொருள் :—***

*தெந்த்திரியமரம் :—(7 - ஆம் கல்வெட்டு)*

*இதைத் திந்த்ரினி - என்பதின் சிதைவாகக் கொண்டால் புளியமரம் என்று கொள்ளலாம். இதற்கு டாக்டர் உல்ஷ் துரை (Croton tiglium) என்பர்.*

*(11 - ஆம் கல்வெட்டு) வெள்ளிலைப் பற்றொங்பதும் - (வெள்ளிலைப் பற்றுஒன்பதும்) ஒன்பது கட்டு வெற்றிலைகள் (Nine bundles of betel leaves). என்பர் டாக்டர் உல்ஷ் துரை.*

*கடிகை எழா இருவரையும் - (13-ஆம் கல்வெட்டு) ஊர்ச் சபையில் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும் உறுப்பினர் இருவர் (எப்பொழுதும் என்றால் தன் ஆயுள் காலம் வரை) The great men who are permanent members of the assembly - என்பர் டாக்டர் உல்ஷ் துரை.*

*ஆகவமல்லன் - சண்டையில் வீரன்.*

*நன்செய் நிலங்களின் இருபோக நெல் விளைவைக் குறிக்க வழங்கிய பெயர்கள் :—கார், பசானம் - என்பன.*

***அக்காலத்தில் நிலஅளவைக் குறிக்கும் பெயர்கள் :—*** *வேலி, குழி, மா, அரைக்காணி முந்திரிகை என்பன. இவற்றுள் வேலி - என்பதற்கு நிலம் என்றும் வேறு பெயர் வழங்கி வந்தது. இது வில்லவராயன் சாசனத்தால் அறியக்கிடக்கின்றது.*

*சாசனம் தோன்றிய காலத்தைக் குறிப்பிடுவதில் இவ்வரசற்கு இத்தனையாவது யாண்டு என்று கூறும் முறைக்கு வேறாகவும் கூறப்பட்டுள்ள முறை :—*

*'முன்னாள் இராண்டாவதின் எதிர் இருபத்து மூன்றாவது முதலுக்கு,' 'இருபத்து எட்டாவதின் எதிராவது.' - (கல்வெட்டு 18) இவைகளே வேறு முறையாகும். இவைகளுள் முன்னதற்கு அரியணை ஏறிய இருபத்தைந்தாம்*

ஆண்டு என்றும், பின்னதற்கு இருபத்தொன்பதாம் ஆண்டு என்றும் பொருள்களாகும்.

அக்காலத்தில் நிலவருவாயுள் எத்தனையில் ஒருபங்கு வரி வாங்கப்பட்டது என்பதைக் குறிக்கும்தொடர் :—நில வருவாயுள் ஆறில் ஒரு பங்கு வரி வாங்கப்பட்டது. இது "ஆறிலொன்று அவனியுள் கூறுகொள் பொருள்களும் முகந்து (கல்வெட்டு 7) என்றதொடர் குறிக்கின்றது.

சோழவேந்தர் தானசாசனம் அளிக்கும்போது பெரும் பான்மையும் இருந்துகொடுக்கும் இடம், ஆதாரம் :—தங்கள் அரண்மனையில் பூசிக்கப்படும் இடத்திலிருந்து அதாவது வழிபடு அறையிலிருந்து, திருமஞ்சன சாலையிலிருந்து அளிப்பது வழக்கம்.

கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக்கல்லூரியில் தானஞ்செய்தருளா இருந்து "—(கல்வெட்டு 3)

"கெங்கை கொண்ட சோழபுத்துக் கோயிலினுள்ளால் திருமஞ்சனசாலையில் எழுந்தருளியிருந்து உதகம் பண்ணியருளின "— (கல்வெட்டு 7)